இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 210 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 28 – திங்கள்கிழமை 11 மார்ச் 2024 – சென்னை 16+4 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 210 : Thiruvalluvar Year - 2055 - Maasi 28 - Monday 11 March 2024 - Chennai 16+4 Pages ₹ 5.00



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களை, நேற்று (10.3.2024), சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மற்றும் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு ஆகியோரும், ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியாக விருப்ப மனு அளித்தவர்களைச் சந்தித்து நேர்காணல் நடத்தினர்.

# 40 தொகுதிகளிலும் 'வேட்பாளர் மு.க.ஸ்டாலின்' எனக் கருதிப் பணிபுரிக!

## கழக உடன்பிறப்புகள் - கூட்டணிக் கட்சிகளின் தோழர்கள் அனைவர்க்கும்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மார்ச் 11-**

**"2019 நாடாளுமன்றத் தேர்தல் - 2019 ஊரக உள்ளாட்சித் தேர்தல் இடைத்தேர்தல்கள் - 2021 சட்டமன்றத் தேர்தல் - 2022 நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் - தற்போது 2024 நாடாளுமன்றத் தேர்தல் என ஐந்தாவது முறையாகத் தொடர்கிறது வெற்றிக் கூட்டணி!**

**கழக உடன்பிறப்புகள் அனைத்துத் தொகுதிகளிலும், 'வேட்பாளர் மு.க.ஸ்டாலின்' என்பதை மனதில் வைத்துப் பணியாற்ற வேண்டும்! நாற்பதும் நமதே! நாடும் நமதே!" என்று, - கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

கழகத் தலைவர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசில் மக்களாட்சி மாண்பைக் காக்கும் மகத்தான புதிய அரசை ஆட்சியில் அமர்த்துவதற்காக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவை ஆண்ட பா.ஜ.க. அரசானது, நாட்டையே பல்லாண்டு காலம் பின்னோக்கிக் கொண்டு போய்விட்டது. இதனை இப்போது தடுக்காவிட்டால் இனி எப்போதும் தடுக்க முடியாது என்ற எண்ணத்தில்தான் இந்தியா முழுமைக்குமான ஜனநாயக சக்திகளின் அணிச் சேர்க்கை நடைபெற்றது.

பா.ஜ.க.வை வீழ்த்துவது என்பது மட்டுமல்ல, அதன் பிறகு அமையப் போகும் அரசானது மக்களாட்சி – சமூகநீதி – சமத்துவம் – சகோதரத்துவம் – மாநில உரிமைகள் – விளிம்புநிலை மக்களின் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டாட்சி அரசாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் 'இந்தியா' கூட்டணி அமைக்கப்பட்டது.

அகில இந்தியக் கட்சிகள், மாநிலங்களை ஆளும் கட்சிகள், மாநிலங்களை ஆண்ட கட்சிகளை உள்ளடக்கிய மாபெரும் அணியைத் தொடங்கினோம்.

**பா.ஜ.க.வின் சர்வாதிகார நடவடிக்கைகள்!**

தங்களை எதிர்ப்பதற்கு யாரும் இல்லை என்ற மமதையுடன் இருந்த பா.ஜ.க தலைமையானது, அதன் பிறகுதான் களத்தின் உண்மை நிலவரத்தை உணர்ந்தது. 'இந்தியா' என்ற சொல்லையே சொல்லாமல் தவிர்த்தது. 'இந்தியா' கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் கட்சிகளைத் தன்னுடைய அதிகார அமைப்புகளின் மூலமாக பா.ஜ.க ஆட்சியானது வேட்டையாடியது. இந்தக் கூட்டணியின் வலிமையை நாட்டுக்கு உணர்த்தியதே இதுபோன்ற பா.ஜ.க.வின் சர்வாதிகார நடவடிக்கைகள்தான்.



**'வேண்டாம் மோடி' எனும் முழக்கமே, இந்தியா முழுமைக்கும் இன்று எதிரொலித்துக் கொண்டிருக்கிறது!**

பத்தாண்டு காலத்துக்கு முன்னால் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல், ஆட்சி முடியப் போகும் நிலையில் மாநிலம் மாநிலமாகச் சென்று திட்டங்களைத் தொடங்கி வைத்துக் கொண்டு இருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள். அவரது அவசரகாலப் பதற்றமானது, அவர் முகத்தில் இருக்கும் பயத்தைக் காட்டுகிறது. 'மீண்டும் மோடி' என்று அவரது ஆதரவாளர்கள் எவ்வளவு கூச்சல் எழுப்பினாலும், 'வேண்டாம் மோடி' என்ற முழக்கமே இந்தியா முழுமைக்கும் இன்று எதிரொலித்துக் கொண்டு இருக்கிறது.

பா.ஜ.க.வை வீழ்த்தியாக வேண்டும் என்ற அரசியல் நோக்கம் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளால் மக்கள் மனதில் விதைக்கப்பட்டு விட்டது. பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்குகள் சிதறிவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பல்வேறு மாநிலங்களில் கூட்டணிப் பேச்சுவார்த்தையையும் தொடங்கி நடத்தி வருகிறார்கள். சில மாநிலங்களில் பேச்சுவார்த்தைகள் முடிவுற்று, தொகுதிப் பங்கீடுகள் செய்யப்பட்டும் விட்டன. சில மாநிலங்களில் நடைபெற்று வருகின்றன. சில நாட்களில் அவையும் நல்லபடியாக நடைபெறும் எனத் தெரிகிறது.

**தமிழ்நாடு முழுவதும் - நண்பர் கமல் பரப்புரைப் பயணம்!**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான 'இந்தியா' கூட்டணியில் தொகுதிப் பங்கீடு நேற்றைய தினத்துடன் மிகச் சிறப்பாக முடிவுற்றது என்பதை மனமகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். அகில இந்திய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி ஆகிய கட்சிகளுக்குத் தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தேர்தலில் அருமை நண்பர் கமலஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யமும் நம் அணியில் இணைந்துள்ளது. அவரையும் வரவேற்றுள்ளோம். இந்த அணிக்காகத் தமிழ்நாடு முழுவதும் பரப்புரைப் பயணம் செய்ய இருப்பதாக நண்பர் கமல் அவர்கள் அறிவித்துள்ளார்கள். 2025 மாநிலங்களவையில் அவரது கட்சியின் குரல் ஒலிக்க இருக்கிறது.

**எண்ணிக்கை அல்ல; எண்ணம்தான் முக்கியம்!**

நாங்கள் கொடுத்தோம், அவர்கள் பெற்றார்கள் என்பதாக இல்லாமல், 'அனைவரும் ஒத்த சிந்தனையுடன் அமர்ந்து பேசித் தொகுதிகளைப் பகிர்ந்து கொண்டோம்' என்பதுதான் உண்மையாகும். அனைத்துத் தலைவர்களும், ஊடகங்களில் அளித்த பேட்டிகளில் இதனை வெளிப்படையாகவே சொல்லி இருக்கிறார்கள். எண்ணிக்கை அல்ல, எண்ணம்தான் முக்கியம் என்பதை உணர்ந்தவர்கள் நம் கூட்டணிக் கட்சித் தலைவர்கள். பாசிச பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை நோக்கம் மட்டுமே கொண்ட தலைவர்கள் இவர்கள். இந்த ஒற்றுமை உணர்வுதான் 2019ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் அனைத்து வெற்றிகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

### நாடாளுமன்றத் தேர்தல்: கழகத்தின் சார்பில் போட்டியிட

## விருப்பமனு அளித்தவர்களிடம் - கழகத் தலைவர் நேர்காணல்!

### தொகுதி நிலவரம் குறித்து கேட்டறிந்தார்!

சென்னை, மார்ச் 11 -

நாடாளுமன்ற தேர்தலில் திமுக சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள், கடந்த மாதம் 19ஆம் தேதி முதல் மார்ச் 7 ஆம் தேதி வரை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள தலைமைக் கழகத்தில் விநியோகம் செய்யப்பட்டது. திமுக சார்பில் போட்டியிட ஏராளமானோர் ஆர்வத்துடன் விருப்ப மனுக்களை வாங்கி சென்றனர்.

இந்நிலையில், மக்களவைத் தேர்தலில் போட்டியிட விரும்பி தலைமை கழகத்தில் விண்ணப்பித்தவர்களிடம் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நேர்காணல் நடத்தினார். தொகுதி நிலவரம், வெற்றி வாய்ப்புகள் குறித்து விருப்ப மனுத்தாக்கல் செய்தவரிடம் முதலமைச்சர் கேட்டறிந்தார். கன்னியாகுமரி, தர்மபுரி, கடலூர், திருப்பூர், ஈரோடு, சேலம், கள்ளக்குறிச்சி, கோவை, பொள்ளாச்சி ஆகிய தொகுதிகளில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் நேற்று காலை நேர்காணல் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து மற்ற தொகுதிகளில் விருப்ப மனு அளித்தவர்களிடம் கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேர்காணல் நடத்தினார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என். நேரு ஆகியோர் பங்கேற்றனர்.

---

### வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய வலியுறுத்தி

## நாடு முழுவதும் விவசாயிகள் ரயில் மறியல் போராட்டம்!

### தமிழ்நாட்டில் திருவாரூரில் விவசாயிகள் பங்கேற்றனர்!

புதுடெல்லி, மார்ச் 11-

வேளாண் விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை வழங்கும் சட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்தி டெல்லியில் விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். அதன் ஒரு கட்டமாக நேற்று நாடு முழுவதும் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாட்டில் திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று ரயில் மறியலில் ஈடுபட்டனர்.

வேளாண் விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதாரவிலை வழங்கும் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் கடந்த ஒரு மாதமாக டெல்லி எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகள் மீது காவல்துறையினர் கொடூர தாக்குதல் நடத்திய நிலையிலும், அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள னர். ஒன்றிய அரசுடன் நடத்திய பலகட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த சூழலில், போராட்டத்தை தீவிரப்படுத்தும் வகையில் நேற்று நாடு தழுவிய ரயில் மறியல் போராட்டத்திற்கு விவசாயிகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

அதனை ஏற்று இந்தியா முழுவதும் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில், தமிழ்நாடு மாநில விவசாய சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ரயில் நிலையத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகள் எர்ணாகுளம் ரயிலை மறித்து, ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். இதையடுத்து, ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை காவல்துறையினர் கைது செய்தனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 11-03-2024

# அய்யா வழியை மடை மாற்றாதீர்!

சனாதன ஸ்டிக்கரை அச்சடித்து வைத்திருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி, அதனை எல்லார் முதுகிலும் ஒட்டி வருகிறார். திருவள்ளுவர், வள்ளலார் வரிசையில் இப்போது அய்யா வைகுண்டருக்கும் சனாதன ஸ்டிக்கரை ஒட்டி இருக்கிறார் ஆளுநர்.

சனாதனத்துக்கு எதிராக புதுவழி காட்டியவர்தான் வைகுண்டர். இந்த அரிச்சுவடிகூட ஆளுநர் அறியவில்லை. “அய்யா வைகுண்டர் தோன்றிய காலக்கட்டம், சனாதன தர்மத்துக்கு பாதிப்பு ஏற்பட்ட காலம் ஆகும். சனாதன தர்மத்தைக் காக்கவே வைகுண்டர் தோன்றினார்” என்று பேசி இருக்கிறார் ஆளுநர். அவருக்கு வைகுண்டர் என்றால் யார் என்றே தெரியவில்லை. வைகுண்டம் என்று நினைத்துக் கொண்டு ஏதோ பேசி இருக்கிறார்.

**சாமிதோப்பு தலைமை பதி அடிகளார் பாலபிரஜாபதி, “ஆளுநர் வெளியிட்ட புத்தகம், அய்யா வைகுண்டர் வரலாற்றைத் திரிக்கும் முயற்சி. சனாதனத்தின் வேராக மனுதர்மம் இருக்கிறது. சனாதனத்திற்கு எதிரான செயல்களைத்தான் அய்யா வைகுண்டர் செய்திருக்கிறார். பெண்ணடிமைத்தனம், சாதியத்திற்கு எதிரானவற்றைதான் செய்திருக்கிறார். இவை இரண்டுக்கும் ஆதரவானது சனாதனம். புராணமும் ஆகமங்களும் பொய்யானவை எனக் கூறியிருக்கிறார். வைகுண்டரை அறிந்துகொண்டுதான் பேச வேண்டும். அவர் பேசியது தவறானது” என்று சொல்லி இருக்கிறார்.**

இது தோள் சீலைப் போராட்டத்தின் 200வது ஆண்டு ஆகும். சனாதனச் சாதிப் பாகுபாட்டுக்கு எதிரான மகத்தான போராட்டம் அது. **‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’** என்றிருந்த தமிழ்ச் சமூகத்தில் இடைக்காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டுப் படையெடுப்புகளால் தமிழினத்தின் பண்பாடு சிதைக்கப்பட்டது.

மதத்தின் பேரால் - சாதியின் பேரால் - சாத்திர சம்பிரதாயங்களின் பேரால் - புராணங்களின் பேரால் - மனிதனை மனிதன் பாகுபடுத்தி விட்டார்கள்.

ஆணுக்குப் பெண் அடிமை என்றாக்கி விட்டார்கள். சூத்திரர்களையும் பெண்களையும் இழிவான பிறவிகளாக ஆக்கியது மனு. தீண்டாமையை புனிதம் ஆக்கினார்கள்.

**மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது - கண்ணில் படக்கூடாது என்றளவுக்கு கொடுமைகள் தலைவிரித்தாடியது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் குடை எடுத்துச் செல்லக் கூடாது, செருப்பு அணியக் கூடாது, பசு வளர்க்கக் கூடாது, வீட்டுக்கு ஓடு போடக் கூடாது, ஒரு மாடிக்கு மேல் கட்டக் கூடாது, முரட்டுத் துணிதான் அணிய வேண்டும் - என்றெல்லாம் இருந்தது. திருவிதாங்கூர் பகுதியில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்துப் பெண்கள் அனுபவித்த துன்ப துயரம் என்பது மற்ற பகுதிகளில் இல்லாதது.**

குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், மார்பில் சேலை போடக் கூடாது. இதனை மீறி சேலை போட்டுக் கொள்ள முயற்சித்த பெண்கள் தாக்கப்பட்டார்கள். சித்தரவதை செய்யப்பட்டார்கள். இதை விடக் கொடூரமாக ‘முலைவரி’ என்ற வரியையே போட்டுள்ளார்கள். அப்படி வரிகட்டாத காரணத்தால் தனது மார்பை அறுத்து எறிந்தாள் ஒரு பெண். அதுதான் ‘முலைச்சி பறம்பு’ வழிபாட்டுத் தலமாக இன்றும் இருக்கிறது. இக்கொடுமைகளுக்கு எதிராக 1822 ஆம் ஆண்டு போராட்டம் தொடங்கியது. ‘அய்யா வழி’ என்ற புதிய வழியை உருவாக்கிய அய்யா வைகுண்ட சாமிகள் இந்த போராட்டத்தை நடத்தினார்கள். திறந்த மார்போடு பெண்கள் இருக்கக் கூடாது என்பதை தொடர்ந்து பரப்புரை செய்தார் அய்யா வைகுண்டர். பொதுக் கிணறுகள் உருவாக்கினார்.

அன்புக்கொடி என்ற மதப்பிரிவையே உருவாக்கினார். அடித்தள மக்கள் அனைவருக்கும் தலைப்பாகை கட்டி விட்டார். பெண்கள் இடுப்பில் குடம் எடுக்கக் கூடாது என்று அந்தக் காலத்தில் தடை இருந்தது. அதை உடைத்து இடுப்பில் தண்ணீர் குடம் கொண்டு வரக் கட்டளையிட்டவர் அய்யா.

**‘தாழக்கிடப்போரை தற்காப்பதே தர்மம்’** என்று சொன்னவர் அவர். இதன்விளைவாகத் தான் 1859 ஆம் ஆண்டு உத்தரம் திருநாள் அரசர் உத்தரவு போட்டார். தோள் சீலை அணியலாம் என்ற உரிமை அதன்பிறகுதான் கிடைத்தது.

18 வகை சாதியினர் உயர் வகுப்பினரால் மிகக் கீழாக நடத்தப்பட்டனர். இதற்கு எதிராகக் குரல் கொடுத்தார் வைகுண்டர். ‘அகிலத் திரட்டு அம்மானை’ என்பது அவர் எழுதிய புகழ் பெற்ற நூல். பூஜை செய்யக் கூடாது, பூசாரி வைத்துக் கொள்ளக் கூடாது, யாகம் வளர்க்கக் கூடாது, ஹோமம் வளர்க்கக் கூடாது என்றெல்லாம் அறிவுரை வழங்கியவர் அவர். வேறு எதன் மீதும் அச்சம் கொள்ளாதீர்கள் என்று அனைத்து மூடநம்பிக்கைகளையும் நிராகரித்தார் அவர். தன்மானத்தோடு வாழ்ந்தால் கொடுமைகள் உங்களை அண்டாது என்றார் அய்யா.

**யாரும் யாருக்கு முன்னும் அடிமையில்லை என்றும், சாதியைத் தூக்கி கடலில் எறியுங்கள் என்றும், சாதி தானாகவே அழியும் என்றும் சொன்னவர் அய்யா வைகுண்டர். புரோகிதர்களை மிகக் கடுமையாகக் கண்டித்தார். சிலை வழிபாட்டை மறுத்தார். மனிதர் ஒவ்வொருவருக்குள்ளும் தெய்வம் இருப்பதாகச் சொன்னார்.**

**ஒரே நேரத்தில் மன்னரையும், குருமார்களையும் எதிர்த்த புரட்சியாளர் அவர். அத்தகைய அய்யா வைகுண்டருக்குத்தான் சனாதன ஸ்டிக்கர் ஒட்டுகிறார் ஆளுநர்.**

**“நீ பெரிது நான் பெரிது நிச்சயங்கள் பார்ப்போமென்ற வான்பெருதறியாமல் மாள்வார் வீண் வேத முள்ளோர்” என்ற அவருக்குத்தான் சனாதன ஸ்டிக்கர் ஒட்டுகிறார் ஆளுநர்.**

**அய்யா வழி தலைமை பதி பால பிரஜாபதி அடிகளார் சொல்கிறார்: “வைகுண்டர் சனாதனத்தைக் காக்க வரவில்லை. மக்களை சனாதனத்திடம் இருந்து காக்க வந்தார்” என்கிறார். இந்த ஒற்றை வரியில் அனைத்தும் அடங்கி இருக்கிறது.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 172 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1520 குடியிருப்புகளையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 108 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவவர் வாடகை குடியிருப்புகள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் எ.சரவணவேல்ராஜ், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் செயலாளர் திருமதி எம். விஜயலட்சுமி, , தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி மாவட்டம் - பேரூரணி கிராமம் அருகே நீராவி குளத்தில் மூழ்கி

# உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 11 -**

**தூத்துக்குடி மாவட்டம் பேரூரணி கிராமம் அருகே நீராவிக்குளத்தில் மூழ்கி உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு :

தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், பேரூரணி கிராமத்தைச் சேர்ந்த லெட்சுமணன் என்பவரது குழந்தைகள் செல்வி. சந்தியா (வயது 13), செல்வி. கிருஷ்ணவேணி (வயது 10) மற்றும் செல்வன். இசக்கிராஜா (வயது 8) ஆகிய மூவரும் நேற்று 09.03.2024 மாலை தனது உறவினருடன் பேரூரணி கிராமத்தில் உள்ள நீராவிக்குளத்தில் குளிக்கச் சென்ற போது எதிர்பாராத விதமாக தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### ஜாபர் சாதிக்: “தி.மு.க. மீது ஆதாரமில்லாமல் குற்றம் சாட்டினால் வழக்குத் தொடர்வோம்!” - மூத்த வழக்கறிஞர் பி.வில்சன்!

# பா.ஜ.க.வின் சூழ்ச்சி அரசியல் தமிழ்நாட்டில் ஒருபோதும் எடுபடாது!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி பேட்டி!

**சென்னை, மார்ச். 11-**

**“ஜாபர் சாதிக்குடன் தொடர்புடையவர்கள் பா.ஜ.க, அ.தி.மு.க.வில்தான் இருக்கிறார்கள் என்று சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி பேட்டி அளிக்கையில் குறிப்பிட்டார். அதே போல் தலைமைக்கழகச் சட்டத் தலைமை ஆலோசகர் பி.வில்சன் எம்.பி. பேட்டியில் “தி.மு.க.வையோ, தி.மு.க. தலைவர்களையோ இணைத்து எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் குற்றச் சாட்டுகளைச் சுமத்தினால் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் தொடர்வோம்” என்று குறிப்பிட்டார்.**

அண்ணா அறிவாலயத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, தலைமைக்கழகச் சட்ட தலைமை ஆலோசகர் பி.வில்சன் எம்.பி. ஆகியோர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர்.

இது குறித்து சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி அவர்கள் செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்த விவரம் வருமாறு:-

தி.மு.க.வைக் களங்கப்படுத்தும் நோக்கோடு பாரதீய ஜனதா கட்சி செய்யும் அரசியல் தமிழ்நாட்டிலும் ஈடேறாது. அகில இந்திய அளவிலும் ஈடேறாது. பா.ஜ.க. அரசின் சர்வாதிகார பிடியிலிருந்து இந்தியாவை மீட்க வேண்டும், நாட்டை விடுவிக்க வேண்டும் என்பதற்காக அகில இந்திய அளவில் அணி திரட்டுவதில் முக்கியப் பங்கு வகித்துக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தேர்தல் களத்தில் களங்கப்படுத்தி, அரசியல் ஆதாயம் பெற்றுவிடலாம் என்று பா.ஜ.க. தப்பு கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குத் துணையாக அ.தி.மு.க.வும் துதி பாடிக் கொண்டிருக்கின்றது.

**தி.மு.க.வை களங்கப்படுத்த பா.ஜ.க. முயற்சி!**

முன்பெல்லாம் வருமான வரித் துறை, சி.பி.ஐ. அமலாக்கத்துறை போன்ற ஒன்றிய அரசின் விசாரணை அமைப்புகளை வரிசையாகக் களமிறக்கி விட்ட பாரதீய ஜனதா அரசு, தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசைக் களங்கப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு NCBஐக் களத்தில் இறக்கிவிட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் போதைப்பொருள் தடுப்பில் மேற்கொண்ட நடவடிக்கைகளை நீதிமன்றமும் பாராட்டி இருக்கிறது, எல்லோரும் பாராட்டி இருக்கிறார்கள். ஆனால் தி.மு.க.வை NCBஐ வைத்து மிரட்டிப் பார்க்கலாம் என்று எண்ணிப் பார்க்கிறார்கள். NCB விசாரணை அமைப்பினுடைய துணை இயக்குநர் ஞானேஸ்வர் சிங் டெல்லியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்திருக்கிறார். ஒரு விசாரணை அமைப்பின் துணை இயக்குநர் புலன் விசாரணை முழுமையாக நடைபெறாமலேயே பத்திரிகையாளர்களைச் சந்தித்திருக்கின்றார். விசாரணை முழுமையாக முடிந்த பிறகு சந்திக்க வேண்டும், ஆனால் அதற்கு முன்னதாகவே தி.மு.க.வைக் கொச்சைப்படுத்தி விட வேண்டும் என்பதற்காகப் பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தியுள்ளார். அதன் மூலமாக ஏதாவது அரசியல் ஆதாயம் அடைய முடியுமா? என்று தப்புக்கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.




**அ.தி.மு.க. ஆட்சியில் குட்கா வியாபாரம்!**

அ.தி.மு.க ஆட்சியில் குட்கா வியாபாரிகளுக்கு அமைச்சர்களே துணையாக இருந்தது என்பது நாடறிந்த உண்மை. நீதிமன்றத்தில் நாங்கள் போராடி அந்த அமைச்சர் மீதும், தொடர்புடைய அதிகாரிகள் மீதும் சி.பி.ஐ விசாரணை நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறோம். இதற்கெல்லாம் ஆட்சியாளர்களே துணையாக இருந்தார்கள். முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் ஒரு பேப்பர் எடுக்கப்பட்டது, அதில் 85 கோடி ரூபாய் எந்தெந்த அமைச்சர்களுக்குத் தரப்பட்டன என்ற விவரங்கள் இருக்கிறது. அதில் வருமானவரித் துறையோ, அமலாக்கத் துறையோ எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. எந்த வகையிலாவது பா.ஜ.க.வை தாங்கிப் பிடிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசின் புலன் விசாரணை அமைப்புகள் துடித்துக் கொண்டிருக்கின்றன.

ஜாபர் சாதிக் மீது பிப்ரவரி 15ஆம் தேதி லுக் அவுட் நோட்டீஸ் அனுப்பி, தேடப்படும் குற்றவாளி என அறிவித்திருக்கிறார்கள். பிப்ரவரி 21ஆம் தேதி மங்கை என்ற திரைப்பட விழாவில் அவர் கலந்து கொண்டு இருக்கின்றார். அப்போது உங்களுடைய NCB எங்கே போனது?

**ஜாபர் சாதிக் வழக்கை நடத்தியது பா.ஜ.க. தான்!**

2013ஆம் ஆண்டிலேயே ஜாபர் சாதிக் மீது ஒரு வழக்கு வந்தது, அன்றைக்கு அ.தி.மு.க.தான் ஆட்சியில் இருந்தது. ஒழுங்காக அந்த வழக்கையும் நடத்தவில்லை. அன்றைக்கு ஜாபர் சாதிக்கிற்காக வழக்கினை நடத்தியவர் பாரதிய ஜனதா கட்சியினுடைய வழக்கறிஞர் பிரிவு தலைவர் பால் கனகராஜ். ஜாபர் சாதிக்கைக் காப்பாற்றியது அ.தி.மு.க. ஆட்சியிலேதான் நடந்தது.

தி.மு.க.வில் இரண்டு கோடி பேருக்கு மேல் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். வருகின்றவர்களை எல்லாம் சோதித்துப் பார்த்துக் கட்சியில் சேர்க்க முடியாது, அதே நேரத்தில் அவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று தெரிந்தால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஜாபர் சாதிக் போன்றவர்கள் கட்சியை விட்டே நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

போதைப்பொருள் நடமாட்டத்திற்கு முக்கியக் காரணமாக அமைந்திருப்பது குஜராத்தின் முந்த்ரா துறைமுகம்தான். அந்தத் துறைமுகத்தி லிருந்து 21,000 கிலோவும் கடத்தப்பட்டுள்ளது, 9,000 கிலோவும் கடத்தப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானிலிருந்தும் கடத்தப்பட்டிருக்கிறது. உத்தரப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிராவில்தான் அதிகமான வழக்குகள் போடப்பட்டிருக்கிறது.

தேர்தல் வருகின்றபோது ஏதாவது பொய்யான குற்றச்சாட்டைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது சுமத்தி விட முடியாதா? என்று பகல்கனவு கண்டு கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. அவர்களுக்கு ஒன்றை ஒன்று மட்டும் சொல்லிக் கொள்கிறோம், தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகள் அல்ல. தி.மு.க. என்றுமே சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாது. அதற்குத் துணை போகிறவர்கள் யாரையும் வைத்துக்கொள்ள மாட்டோம் என உறுதிபட கூறுகிறோம். எங்கள் மீது பழி போடுகிறவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறோம், NCBதான் முழுப் பொறுப்பு, NCB தமிழ்நாட்டில் ஏதாவது பிடித்தார்களா? ஜாபர் சாதிக் பற்றி சொல்கிறபோது டெல்லியிலும், வேறு மாநிலத்திலும்தான் போதைப்பொருள் பிடிக்கப்பட்டு இருக்கிறது, தமிழ்நாட்டில் கிடையாது. தமிழ்நாட்டைப் பொருத்த அளவில் போதைப் பொருள் நடமாட்டத்தை முழுமையாகத் தடுத்து வைத்திருக்கிறோம். கஞ்சா பயிர் ஒரு சென்ட் கூட நடப்படாத மாநிலமாக தமிழ்நாடு உள்ளது என்பது உலகத்திற்கு தெரியும். அப்படிப்பட்ட இடத்தில் இருக்கும் நாங்கள் நிச்சயமாக போதைப் பொருள் நடமாட்டத்திற்கு உறுதுணையாக எந்த வகையிலும் இருக்க மாட்டோம்.

தமிழ்நாட்டை அவமதிக்கும் செயலாக, தமிழ்நாடு போதைப் பொருள் தலைநகரமாக மாறியிருக்கிறது எனக் கூறி தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் அவமதிக்கும் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் போன்ற வளர்ச்சியை எங்களுக்கு ஏன் ஏற்படுத்தவில்லை? என ஒன்றிய பா.ஜ.க.வை நோக்கி வட இந்திய மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். போதைப் பொருள் மாநிலம் போல தமிழ்நாட்டை சித்தரித்தால்தான், தமிழ்நாட்டின் வளர்ச்சி வட இந்தியாவில் பேசுபொருளாகாது என்பதற்காகவே பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். பா.ஜ.க.வில் இருக்கக்கூடிய பலர் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவர்களெல்லாம் பாஜகவில் சேர்ந்தவுடன் புனிதர்களாக மாறிவிட்டார்கள்.

**தி.மு. கழகம் மீது வீண் பழி சுமத்துகிறார்கள்!**

முன்னாலேயே நடந்த சம்பவத்தைத் தி.மு.க மீது பழிபோடலாம் என தப்புக் கணக்குப் போட்டார்கள். ஜாபர் சாதிக் கட்சியை விட்டு நீக்கப்பட்டு விட்டார், அவரோடு தொடர்புடையவர்கள் பா.ஜ.க, அ.தி.மு.க.வில்தான் இருக்கிறார்கள். ஜாபர் சாதிக்கை எங்கே பிடித்தார்கள் என NCB தெளிவாகக் கூறவில்லை. விசாரணை நடைபெறாமலேயே செய்தியாளர் சந்திப்பு நடத்தியது தவறு, கண்டிக்கத்தக்கது. குற்றவாளிக்குத் துணைபோக மாட்டோம், சட்டப்பூர்வமாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத்தருவோம். ஒன்றிய அரசு தகுந்த சாட்சியங்களோடு வழக்கு தொடர்ந்தால் மகிழ்ச்சி. அவர் ஒரு பைசா கூட கட்சிக்குத் தரவில்லை.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

**மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் பேட்டி!**

தலைமைக்கழக சட்ட தலைமை ஆலோசகர் பி.வில்சன் எம்.பி. செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்ததாவது:-

தேவையில்லாமல் இந்த விசாரணையில் தி.மு.க. மற்றும் தி.மு.க. தலைவர்களைச் சிலர் கூறி வருகிறார்கள். விசாரணை ஆரம்ப நிலையில் இருக்கும்போதே NCB துணை இயக்குநர் செய்தியாளர் சந்திப்பு நடத்தியது, அதுவும் தேர்தல் நேரத்தில் சொல்வது சந்தேகத்தைத் தருகிறது. இதுபோன்ற பேட்டிகள் அவதூறு (Defame) செய்யும் எண்ணத்தில் செயல்படுவதாகவே தெரிகிறது. கட்சியையோ, கட்சித் தலைவர்களையோ இணைத்து எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் இது போன்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தினால் அவர்கள் மீது நிச்சயமாக சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் தொடர்வோம்.

தேவையில்லாமல் அடிப்படை ஆதாரம் இல்லாமல் கட்சியை விட்டு வெளியே அனுப்பியவர் குறித்துப் பேசுகிறார்கள். தகவல் வந்தவுடன் கட்சியில் இருந்து நீக்கி விட்டார்கள். குட்கா வழக்கில் விஜயபாஸ்கர் மீது குற்றம்சாட்டப்பட்டது, அவர் மீது குற்றப்பத்திரிக்கை கொடுத்துள்ளார்கள். அவரைப் பதவியிலிருந்து எடுத்தார்களா? ஆளுநரும் அந்த வழக்கிற்கு அனுமதியே கொடுக்கவில்லை, உச்சநீதிமன்றத்திற்குச் சென்ற பிறகே விஜயபாஸ்கர் மீது மட்டுமல்லாமல் ரமணா வழக்கு மீதும் அனுமதி வழங்கப்பட்டது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கழகத் தலைவர் அவர்களால் அந்த வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. போதைப் பொருளை ஒழிப்பதற்குத் தி.மு.க.வைப் போன்று எந்த கட்சியும் நடவடிக்கை எடுத்தது கிடையாது.

இவ்வாறு பி.வில்சன் குறிப்பிட்டார்.

# ஒன்றுபட்ட இலக்கு! ஒற்றுமைச் சிந்தனை! தொடர் வெற்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!... முதல் பக்கத் தொடர்ச்சி

2019 நாடாளுமன்றத் தேர்தல், இடைத்தேர்தல்கள், 2021 சட்டமன்றத் தேர்தல், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள், ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் ஆகிய அனைத்தையும் இக்கூட்டணி மூலமாகத்தான் வென்று காட்டினோம். ஒன்றுபட்ட இலக்கும், ஒற்றுமைச் சிந்தனையும் கொண்டவர்களாக நம் கூட்டணி இயக்கத் தலைவர்களும், முன்னணியினரும், தொண்டர்களும் இருப்பதால்தான் இத்தகைய தொடர் வெற்றியை நாம் பெற்றோம்.

தேர்தலுக்குத் தேர்தல் கூட்டணி மாறும் என்பதை மாற்றி, இலக்கு ஒன்றாக இருந்தால் கூட்டணியும் மாறாது என்பதையும் நாம் நிரூபித்து வருகிறோம். இதனைத்தான் ‘இந்தியா’ கூட்டணியின் தொடக்கக் கூட்டத்தில் நான் வலியுறுத்திச் சொன்னேன். பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகள் அனைத்தையும் ஒன்று சேர்க்க வேண்டும், அந்தக் கட்சிகள் தங்களுக்குள் இருக்கும் மற்ற வேறுபாடுகளை மறந்து ஒன்று சேரவும் வேண்டும் என்று வலியுறுத்தினேன். அதுதான் இன்று மாபெரும் கூட்டணியாக மலர்ந்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான இக்கூட்டணியின் வெற்றிக்கு கழக உடன்பிறப்புகள் அயராது பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுவை உள்ளிட்ட தமிழ்நாட்டின் 40 தொகுதிகளிலும், ‘வேட்பாளர் மு.க.ஸ்டாலின்’ என்பதை மனதில் வைத்து அனைவரும் பணியாற்ற வேண்டும்.

> **தி**ராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான இக்கூட்டணியின் வெற்றிக்கு கழக உடன்பிறப்புகள் அயராது பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
>
> புதுவை உள்ளிட்ட தமிழ்நாட்டின் 40 தொகுதிகளிலும், ‘வேட்பாளர் மு.க.ஸ்டாலின்’ என்பதை மனதில் வைத்து அனைவரும் பணியாற்ற வேண்டும். அனைத்துத் தொகுதியிலும் நானே போட்டியிடுகிறேன் என்பதை உள்ளத்தில் தாங்கி அனைத்து உடன்பிறப்புகளும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்துத் தொகுதியிலும் நானே போட்டியிடுகிறேன் என்பதை உள்ளத்தில் தாங்கி அனைத்து உடன்பிறப்புகளும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாற்பதுக்கு நாற்பது என்ற அளவில் வென்றால்தான் நாம் நினைக்கும் அரசியல் மாற்றமானது ஒன்றிய அரசில் நடக்கும். மாநிலங்களை மதிக்கும் ஒன்றிய அரசை அமைக்க வேண்டுமானால் நாம் இங்கு நாற்பதுக்கு நாற்பது வென்றாக வேண்டும். வெற்றி ஒன்றே உங்களது நோக்கமாக இருக்கட்டும்.

**திராவிட மாடல் ஆட்சி உருவாக்கிக் கொடுத்த ஏற்றம்!**

பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சி இந்தியாவைப் பாழ்படுத்தியதை மக்கள் உணர்ந்துள்ளார்கள். அதனை மேலும் ஆழமாக மனதில் விதையுங்கள். மூன்றாண்டு கால திராவிட மாடல் ஆட்சி தமிழ்நாட்டுக்கு உருவாக்கிக் கொடுத்துள்ள ஏற்றத்தை மக்களுக்கு நினைவூட்டுங்கள்.

இந்தியா முழுமைக்குமான கூட்டாட்சி அமைய வேண்டிய அரசியல் தேவையை உணர்த்துங்கள்.

**நாற்பதும் நமதே! நாடும் நமதே!** இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும்

# 500 தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, மார்ச் 11 -**

**திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் 500 தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பிற்ப டுத்தப்பட்டோர், மிகப்பிற்ப டுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் 500 தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக 5 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகளை வழங்கினார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக இத்துறையின் மூலம் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சலவைத் தொழிலை மேற்கொள்ளும் ஏழை எளிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு விலையில்லா பித்தளை தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டமும் ஒன்றாகும். தற்போது மாறிவரும் சூழ லுக்கேற்பவும், சுற்றுச்சூழல் நலனை கருத்திற்கொண்டும் புதிய முயற்சியாக திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு அரசு முன்னெடுக்கிறது.

அதன்படி, முதற்கட்டமாக, இந்திய எண்ணெய் நிறுவனத்தின் (Indian Oil Corporation Limited), பெருநிறுவன சமூகப் பொறுப்புக்கொள்கை (Corporate Social ResponsibilityCSR) நிதியிலிருந்து 29.93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் 500 தேய்ப்பு பெட்டிகளை வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பிற்படு த்தப்பட்டோர், மிகப்பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத், IOCL, சென்னை செயல் இயக்குநர் (மார்க்கெட்டிங் பிரிவு), அண்ணாதுரை, முதன்மை பொது மேலாளர் என். மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மகளிர்க்கு பாதுகாப்பு இல்லாத

# மோடி ஆட்சியை அகற்ற மகளிர் உறுதி எடுத்துக் கொள்வீர்!

## திண்டுக்கல்லில் - சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**திண்டுக்கல், மார்ச் 11-**

**“மகளிர்க்கு பாதுகாப்பு இல்லாத மோடி ஆட்சியை அகற்றிட மகளிர் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்” என்று கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் திண்டுக்கல்லில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில், 09 03 2024 அன்று திண்டுக்கல்லில் உள்ள அங்குவிலாஸ் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது :

“இப்போதெல்லாம் மகளிர் தினம் என்றால் ஜவுளிக்கடைகளில் டிஸ்கவுன்ட் போடுகிறார்கள். பாத்திரக்கடைகளில் தள்ளுபடி விற்பனை என்கிறார்கள். பூக்கடைகளில் கூட ஏதோ காதலர் தினம் போல மகளிர் தினத்திற்கு விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மகளிர் தினம் என்றால் என்னவென்று மோடிக்குத் தெரியுமா?**

நம்முடைய பிரதமர் மோடி பெண்கள் தினத்தை ஒட்டி இந்தியாவிலே இருக்கும் பெண்களுக்கு தந்திருக்க கூடிய பரிசு என்னவென்றால் கேஸ் சிலிண்டர் விலையை 100 ரூபாய் குறைத்து இருக்கிறார். சிலிண்டர் விலை ஆயிரம் ரூபாயை தாண்டி விட்டது. மானியம் தருகிறேன் என்று சொன்னார். ஆனால் யாருக்கும் மானியம் வரவில்லை.

இத்தனை வருஷமாக இழுத்தடித்து விட்டு தேர்தல் வரும் நேரத்தில் மகளிர் தின பரிசாக 100 ரூபாய் சிலிண்டர் விலையை குறைக்கிறார். ஏன் பெண்கள் மட்டும்தான் அந்த சிலிண்டரை பயன்படுத்த வேண்டுமா? சிலிண்டரை பயன்படுத்தி சமையல் கட்டிலேயே இரு. சிலிண்டரும் சமையல் கட்டும்தான் தான் உன் வாழ்க்கை என்று சொல்லாமல் சொல்கிறார் பிரதமர் மோடி.

பிரதமர் மோடிக்கும் மகளிர் தினம் என்றால் என்னவென்று தெரியாமல் இருப்பவர்களுக்கும் சேர்த்து நான் சொல்கிறேன். மகளிர் தினம் என்றால் பெண்களை சமையல் அறையில் அடைத்து வைக்கக்கூடிய தினம் இல்லை. நியூயார்க் நகர வீதிகளில் கிட்டத்தட்ட 15,000 பெண்கள் ஒன்று கூடி எங்களுக்கு நியாயமான வேலை நேரம் வேண்டும், எங்களுடைய உழைப்புக்கு நியாயமான சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று 15,000 மகளிர் ஒன்று திரண்டு போராடினார்கள். அந்த தினம் தான் மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது.

தந்தை பெரியார், பெண்களின் கைகளில் இருக்கக்கூடிய கரண்டிகளை பிடுங்கி விட்டு அவர்களுக்கு புத்தகங்களை கொடுங்கள் என்று சொன்னார். அதை செய்யக்கூடிய தினம் தான் மகளிர் தினம்., அதனால் கேஸ் சிலிண்டர் விலை குறைப்பதெல்லாம் மகளிர் தினம் இல்லை. அது மகளிரை இழிவுபடுத்தக்கூடியது.

**தமிழ்நாட்டு, இந்திய பெண்கள் ஏமாற மாட்டார்கள்!**

தேர்தல் நேரத்தில் சிலிண்டர் விலையை 100 ரூபாய் குறைத்தால் எல்லா பெண்களும் நம்பி உங்களுக்கு ஓட்டு போடுவார்கள் என்று ஒரு கணக்கு. ஆனால் தமிழ்நாட்டுப் பெண்கள் இந்திய பெண்கள் இனி ஏமாற தயாராக இல்லை. அவர்களுக்கு தெரியும் பெண்களுக்காக நடத்தப்படக்கூடிய ஆட்சி எது? பெண்களின் முன்னேற்றத்திலே அக்கறை கொண்டிருக்க கூடிய கருத்தியல் எது? அது, தந்தை பெரியாரின் வழியிலே பேரறிஞர் அண்ணாவின் வழியிலே தலைவர் கலைஞரின் வழியிலே நடந்து கொண்டிருக்க கூடிய நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதியின் திராவிட மாடல் ஆட்சி தான் என்பதை தமிழ்நாட்டுப் பெண்கள் மட்டுமல்ல, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை பெண்களும் உணர்ந்து இருக்கிறார்கள்.

**அஸ்ஸாம் வரை சென்ற மோடிக்கு மணிப்பூர் செல்ல ஏன் மனமில்லை?**

இங்கே பேசியவர்கள் மணிப்பூர் பற்றி பேசினார்கள். இன்று செய்தித்தாளை பார்க்கும்போது பிரதமர் மோடி அசாம் சென்றிருக்கிறார் என்று தெரிந்தது. அங்கே யானை மேல் சவாரி செய்து கொண்டிருக்கிறார். இதுபோல சில நாட்களுக்கு முன்பு துவாரகா சென்றார். அங்கே ஸ்விம்மிங் சூட் எல்லாம் போட்டுக்கொண்டு தண்ணீருக்கு அடியில் தியானம் எல்லாம் செய்தார். அது அவருடைய நம்பிக்கை. அதைப்பற்றி நமக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

இத்தனை நாடுகளுக்கு இத்தனை நகரங்களுக்கு ஏன் அஸ்ஸாமுக்கு செல்லக்கூடிய பிரதமர் மோடிக்கு. அருகிலே இருக்கக்கூடிய மணிப்பூர் செல்ல மனமில்லை.

உங்களுடைய சாதி அரசியல், மத அரசியல் வெறுப்பால் மணிப்பூரில் நீங்கள் மூட்டிய தீ, நீங்கள் பிரித்தாண்ட அந்த மக்கள் இன்றுவரை படாத பாடு பட்டு கொண்டிருக்கிறார்கள். வீடு இல்லாமல் உணவு இல்லாமல் எதிர்காலம் என்னவென்றே தெரியாமல் அங்கே இருக்கக்கூடிய மக்கள், பெண்கள் தினம் தினம் அவதிப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அங்கே முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பெண்களை நான் சந்தித்தேன். சாப்பாடு இல்லை, வயது முதிர்ந்தவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் இல்லை. மாத்திரை மருந்து வாங்க வழியில்லை.



கிட்டத்தட்ட 1000 பேர் இரண்டு பெண்களை குரூரமாக மனிதத்தன்மை இல்லாமல் அசிங்கப்படுத்தி, அவமானப்படுத்தி, கொடுமைப்படுத்தி இழுத்து வந்தார்கள். அந்தப் பெண்களுக்கு என்ன நியாயம் கிடைத்திருக்கிறது? நீங்க பாரத் மாதா கி ஜே என்று சொல்கிறீர்கள். நாமும் தமிழை அன்னையாக பார்க்கிறோம். நாட்டையே ஒரு பெண்ணாக போற்றுகிறோம் என்று சொல்லக்கூடியவர்கள், இந்த நாட்டிலே வாழக்கூடிய பெண்களுக்கு என்ன பாதுகாப்பை தந்திருக்கிறார்கள்?

**பெண்களுக்கு என்ன பாதுகாப்பு பா.ஜ.க. ஆட்சியில்?**

உத்தரப்பிரதேசத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்கிறார். 16 வயது பெண் உத்திரபிரதேசத்தில் நகைகளை அணிந்து கொண்டு நள்ளிரவிலே சென்றாலும் அவர் பாதுகாப்பாக இருப்பார் என்று. ஆனால் அங்கே உண்மையிலே நடந்து கொண்டிருக்க கூடிய நிலை என்ன? அங்கே இருக்கக் கூடிய பெண்களின் நிலை என்ன? கடந்த ஐந்து வருடங்களில் பெண்கள் மீதான குழந்தைகள் மீதான வன்முறை, பாலியல் குற்றங்கள் இரண்டு மடங்கு அதிகரித்து இருக்கிறது. அதுவும் சாதாரண குற்றங்கள் இல்லை, மிகக் கொடுமையான சொல்ல துணியாத நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு பயங்கரமான குற்றங்கள் அங்கே இருக்கக்கூடிய ஒடுக்கப்பட்ட சமூகத்து பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது.

ஆனால் அதையெல்லாம் யாரும் கணக்கு வைத்துக் கொள்வதில்லை, விசாரிப்பதில்லை, என்னவென்று கேள்வி கேட்பதில்லை. அங்கே ஒரு பெண் மில்லில் வேலை செய்தவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு கிடக்கிறார். ஒரு கை வெட்டப்பட்டு அவளுடைய உடல் மீது வைக்கப்பட்டிருக்கிறது. தலை வெட்டப்பட்டு வெளியே வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமையான குற்றங்கள் உத்தர பிரதேசத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதை நிறுத்துவதற்கு அந்த பாஜக அரசாங்கத்தால் முடியவில்லை.

பில்கிஸ் பானு குஜராத்தில் நடந்த கலவரங்களிலே தன் கண் முன்னால் குடும்பமே அழிக்கப்பட்ட ஒரு பெண். பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண். அந்த வன்முறையை செய்தவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். ஆனால் பத்து வருடங்கள் கழித்து குஜராத் அரசாங்கம் இவர்கள் இவ்வளவு நாள் சிறையில் இருந்து விட்டார்கள் என்று விடுதலை செய்கிறது. ஒரு குடும்பத்தையே அழித்து ஒரு பெண்ணின் வாழ்க்கையை அழித்து அவளுடைய நம்பிக்கைகளை அழித்து அவளை கொடுமைப்படுத்திய குற்றவாளிகளை அந்த அரசாங்கம் விடுதலை செய்கிறது. இதில் உச்சநீதிமன்றம் தலையிட்டு மறுபடியும் அவர்கள் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். இது பற்றி பில்கிஸ் பானு, ’அவர்கள் விடுதலை செய்யப்பட்ட நாள் முதல் ஒரு நாள் கூட நான் தூங்கவில்லை. இன்று தான் தூங்கச் செல்கிறேன்’ என்று கூறுகிறார். இது தான் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பாஜக அரசு பெண்களுக்கு தரக்கூடிய மரியாதை.

**மோடி சொன்ன பக்கோடாவும் தளபதியின் நான் முதல்வன் திட்டமும்!**

இளைஞர்களுக்கு இளம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை, வேலை வாய்ப்பு வேண்டும் என்று கேட்டால் பக்கோடா போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் நம்முடைய முதலமைச்சர் நான் முதல்வன் என்ற திட்டத்தை கொண்டு வந்தார். நம் வீட்டுப் பிள்ளைகள் படித்துவிட்டு. தொழில் முனைவோர்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ, அதை தெரிந்து கொண்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற காரணத்துக்காக நான் முதல்வன் என்ற திறன் மேம்பாட்டு பயிற்சியை அரசே செய்கிறது. இதை அந்த மாணவர்கள் வெளியே சென்று கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் குறைந்தபட்சம் 50 ஆயிரம் ரூபாய் கட்டணம் ஆகும். அதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு இளைஞர்களுக்கு இளம்பெண்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய பயிற்சியை தருவது நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள்.

**ஒன்றியத்திடம் இருந்து ஒரு ரூபாய் கூட வரவில்லை!**

இங்கே அமைச்சரும் மாவட்ட செயலாளருமான சகோதரி கீதா ஜீவன் பேசினார். அவருக்குத் தெரியும் வெள்ளத்திலே தூத்துக்குடி மாவட்டம் எவ்வளவு மோசமாக பாதிக்கப்பட்டது என்று. முதலமைச்சர் ஸ்டாலின் தூத்துக்குடிக்கு வந்து, ’நான் இருக்கிறேன்’ என்று வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டு ஆறுதல் சொல்லிச் சென்றார். அதற்குப் பிறகு ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் வருகிறார்கள். பல இடங்களுக்கு சென்று பார்வையிடுகிறார். மிக முக்கியமாக ஒரு கோயிலுக்கு போய் அதைச் சுற்றிலும் சகதியாக இருக்கிறது என்று சொல்லிவிட்டு போகிறார். மக்களுக்காக ஏதாவது செய்வார் என்று எதிர்பார்த்தால் இன்று வரை ஒரே ஒரு ரூபாய் கூட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடிக்கோ சென்னைக்கோ நிவாரணமாக ஒன்றிய அரசிடமிருந்து வரவில்லை.

**இந்தியாவிலேயே இல்லாத வகையில் நிவாரணம் வழங்கிய முதலமைச்சர்!**

நீ கொடுத்தால் கொடு என் மக்களை நான் பாதுகாப்பேன் என்று சொல்லி பாதிக்கப்பட்ட மக்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் உடனடி நிவாரணமாக வழங்கியது நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். இதே போல இடிந்த வீடுகளை எல்லாம் கட்டித் தருகிறேன் என்று இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு மாநில அரசு அறிவித்தது. இடிந்த வீடுகளுக்கு நான்கு லட்சம் ரூபாய் மீண்டும் கட்டுவதற்காக அறிவித்து இருக்கிறார் நம்முடைய முதலமைச்சர். ஒன்றிய அரசை பார்த்து கேட்கிறேன்... நீங்கள் என்ன செய்தீர்கள்? எங்களிடம் இருக்கிற நிதியை எல்லாம் வரி என்று சொல்லி வாங்கிக்கொண்டு போய் ஒரு ரூபாய்க்கு 26 பைசா தான் திருப்பி அளிக்கிறீர்கள். ஜிஎஸ்டியால் பாதிக்கப்படாத மக்களே இந்த நாட்டில் இல்லை என்ற நிலை.

**100 நாள் திட்டத்தை ஒழித்துக் கட்டுவதே பா.ஜ.க.வின் திட்டம்!**

இங்கே 100 நாள் வேலையைப் பற்றி சிலர் பேசினார்கள். விவசாயம் அல்லாத காலங்களில் கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற வேண்டும் என்பதற்காக யுபிஏ காங்கிரஸ் கூட்டணி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட திட்டம் தான் 100 நாள் வேலை திட்டம். இந்தத் திட்டத்திற்கான நிதியை இப்போதைய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் குறைத்துக் கொண்டே வருகிறார்.

சென்ற ஆண்டு 60000 கோடி ரூபாய் தான் இந்த திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நான் பட்ஜெட் மீதான விவாதத்தின் போது, ’100 நாள் வேலை திட்டத்திற்கு இவ்வளவு குறைவான நிதி ஒதுக்கினால் எப்படி சம்பளம் கொடுக்க முடியும்? எப்படி இந்தத் திட்டம் நடக்கும்? ‘ என்று கேட்டேன். அப்போது நாங்கள் தேவைக்கு ஏற்ப அதிகரித்துக் கொடுப்போம் என்று பதில் சொன்னார். ஆனால் இப்போது வரை அதிகரித்துக் கொடுக்கவில்லை.

இன்று வரை இந்தியாவில் எந்த மாநிலத்திலும் 100 நாள் வேலை திட்டம் நடக்கவில்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்ட வேலைக்கும் சம்பளம் தரப்படவில்லை. 100 நாள் வேலைத் திட்டத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஒழித்து கட்டுவது தான் மோடி அரசின் திட்டமாக இருக்கிறது.

**யாருடைய வருமானம் உயர்ந்தது? பா.ஜ.க.வின் ஊழல் இதுதான்!**

பா.ஜ.க. காரர்களை கேட்டால் ஜி.டி.பி. அதிகரித்துள்ளது, தனிநபர் வருமானம் அதிகரித்துள்ளது என்று சொல்வார்கள். நாட்டில் மூன்று பேருக்கு தான் வருமானம் அதிகரித்துள்ளது. அம்பானி, அதானி, பாஜக. இவர்கள் ஊழலை பற்றி பேசுகிறார்கள். ஊழலை சட்டபூர்வமாக தேர்தல் பாண்டு என்று கொண்டு வந்தவர்கள் இவர்கள். யார் வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் அரசியல் கட்சிகளுக்கு நிதி கொடுக்கலாம், அதை வெளியே கணக்கு காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று தேர்தல் பாண்டு சட்டத்தை கொண்டு வந்தார்கள்.

நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை கட்சிகளையும் ஒரு பக்கம் வைத்துக் கொண்டால் அனைத்து கட்சிகளுக்கும் தேர்தல் பாண்டு மூலமாக கிடைத்திருக்கிற நிதி கால்வாசிதான். ஆனால் பாஜக என்ற ஒரே ஒரு கட்சிக்கு மட்டும் ஒட்டுமொத்த கட்சிகளை விட மூன்று மடங்கு அதிகமாக முக்கால்வாசி நிதி கிடைத்திருக்கிறது. இது ஊழலா இல்லையா?

இவர்களுக்கு மற்றவர்களை பற்றி பேச என்ன அருகதை யோக்கியதை இருக்கிறது? இப்படி தொடர்ந்து சாதாரண சாமானிய மக்களுக்கு விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு சிறுபான்மை மக்களுக்கு பெண்களுக்கு இளைஞர்களுக்கு எதிராக இருக்கும் ஆட்சிதான் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி.

இப்போது கூட போராட்டம் நடத்தும் விவசாயிகள் டெல்லிக்கு வந்து விடக்கூடாது என்பதற்காக கம்பிகள், சிமெண்ட் சுவர் என்று தடுக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஆட்சி இந்த நாட்டை மதத்தின் பெயரால் ஜாதியின் பெயரால் பிரித்தாள நினைக்கக்கூடிய ஒரு ஆட்சி மறுபடியும் இந்த நாட்டிலே வந்து விடக்கூடாது.

முதலமைச்சர் அண்ணன் தளபதி சொன்னதைப் போல இந்த தேர்தல் என்பது இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என்பதை புரிந்து கொண்டு நாம் பாடுபட வேண்டும். இப்படிப்பட்ட ஆட்சி ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத ஆட்சி மறுபடியும் வந்தால் முதலில் பாதிக்கப்படுவது பெண்கள், பெண்களின் உரிமைகள் நமது குழந்தைகள்தான் என்பதை நாம் புரிந்து கொண்டு எல்லா தேர்தலையும் விட இந்த தேர்தல் களத்திலே நாட்டைக் காப்பாற்ற நம் பிள்ளைகளின் எதிர்காலத்தை காப்பாற்ற மிகப்பெரிய போராட்டம் நடத்தி நாம் பெற்றிருக்கக் கூடிய உரிமைகளை காப்பாற்ற இந்த மகளிர் தின நிகழ்ச்சியில் ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ள வேண்டும்”.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

உடன், அமைச்சர் பெருமக்கள் ஐ.பெரியசாமி, கீதா ஜீவன், அர.சக்கரபாணி, கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார், மாநகராட்சி மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், மாநில மகளிரணி தலைவர் விஜயா தாயன்பன், மாநில மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் நடைபெற்ற ”எல்லோருக்கும் எல்லாம் ” திராவிட மாடல் நாயகரின் 71வது பிறந்தநாளை விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பேராசிரியர் சபாபதி மோகன் மற்றும் தலைமை கழக பேச்சாளர் ஆலந்தூர் ஒப்பிலாமணி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். அருகில் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன், பகுதிச் செயலாளர்கள் த.ஜெயக்குமார், சுரேஷ், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24 ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேற்று (10.03.2024) சென்னை, கன்னிகாபுரம் விளையாட்டுத் திடலை ரூ.15.15 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் திட்டத்திற்கு கட்டுமான பணியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா ராஜன், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி , மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ. தலைமை திட்ட அமைப்பாளர் பாலசுப்பிரமணியம், கண்காணிப்புப் பொறியாளர் ராஜ மகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் முருகன், மாமன்ற உறுப்பினர் சரவணன் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தமிழ்வேந்தன், எம்.ஏ.டீக்கா, எம்.இஸட்.அபாய், புலவர் நாகப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் இன்று பழவந்தாங்கலில்

# முதல்வர் பிறந்த நாள் விழா - நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம்!

### டி.ஆர். பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ. அன்பரசன் - ஆர். எஸ் பாரதி - நாஞ்சில் சம்பத் சிறப்புரை!

காஞ்சிபுரம்,மார்ச்.11-

ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க சார்பில், பழவந்தாங்கலில் இன்று மாலை நடைபெறும் - தலைவர் - முதல்வர் மு.க ஸ்டாலின் பிறந்த நாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டத்தில் நாஞ்சில் சம்பத் சிறப்புரை ஆற்றுகிறார். இதில் டி.ஆர். பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ. அன்பரசன் - ஆர். எஸ் பாரதி ஆகியோர் உரை ஆற்றுகின்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் இன்று (11.3.2024) பழவந்தாங்கல் சுரங்கபாதை அருகில் வேம்புலி அம்மன் கோயில் எதிரில் தலைவர் - முதல்வர் மு.க ஸ்டாலின் பிறந்த நாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் ஆலந்தூர்தெற்கு பகுதி செயலாளர் - மண்டகுழு தலைவர் என். சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.

ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன் முன்னிலை வகிக்கிறார். தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன், மாவட் இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர், ஆர். ஆர் ஜெயராம் மார்த்தாண்டன், மாநில சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் சாய் ஜெயகாந்த் பாரதி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில், திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில் சம்பத் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர் பாலு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ் .பாரதி ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

ஆலந்தூர் - தெற்கு - வடக்கு பகுதி நிர்வாகிகள் ஜி. சுந்தர்ராஜன், ஆர். பாபு, ஏ. சாலமோன், கே. ராஜேஸ்வரி, இ. இரமேஷ் - வெ. டில்லிபாபு, கோ. கோட்டீஸ்வரன், ஜ அழகேசன், எஸ். ஜெயா, எம். சையத் அப்புதாகீர், வட்ட கழக செயலாளர்கள் - ஜெ. நடராஜன், இ. உலகநாதன், கே. ஆர்.ஜெகதீஸ்வரன், ஏ. வேலவன், ஏ.ஆர். சரவணா, ஜெ. செல்வேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் - என். துர்கா தேவி, ஜெ,தேவி ஜெ. பூங்கொடி, வி. பாரதி, எஸ். அமுதப்பிரியா, பி.எம். பிருந்தாஸ்ரீ, எஸ். ரேணுகா உட்பட கழக நிர்வாகிகள் இக்கூட்டத்தில் கலந்துக் கொள்கின்றனர்.

முடிவில், 164 வது வட்ட செயலாளர் டி.ஜேசுதாஸ் நன்றி தெரிவிக்கிறார்.

### முதல்வர் பிறந்தநாள் விழா: வட்டச் செயலாளர் தட்சன் ஹரிஹரன் தலைமையில்

# தியாகராயர் நகர் மேற்கு - 130 ‘அ’ வட்டத்தில் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

### கோவி.செழியன் - மயிலை த.வேலு - தமிழச்சி தங்கபாண்டியன் - ஜெ .கருணாநிதி - கே.ஏழுமலை வழங்குகின்றனர்!

சென்னை, மார்ச் 11-

சென்னை தென்மேற்கு மாவட்டம் ,தியாகராயர் நகர் மேற்கு பகுதி 130 'அ' வட்டக் கழக சார்பில் தமிழக முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று (11.03.2024-திங்கட்கிழமை) மாலை 6 - மணியளவில் வடபழனி, அழகர் பெருமாள் கோவில் தெருவில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மற்றும் பொதுமக்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா வட்டக் கழக செயலாளர் தட்சன் ஹரிஹரன் தலைமையில் நடைபெறுகிறது.

ம.யூகலிங்கம் , ஆர்.கே. ஜெயமுருகேஷ் , சாலிகே. மோகன் , ஜெ.பாலு, பு.பத்மநாதன், சீ.தினகரன், அ. பொன்னு துரை, பா.முஜிப், த.செந்தில்குமார், கார்த்திக்சந்திரகேசன், ஜி.ராமு, வடபழனி ப.அலெக்ஸ், தி.ஆனந்தன் , ஜெ.எஸ்.சீனிவாசன் , பா.சீனிவாசன், வெங்கடேசன் , ச.பிரமோத்ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். சிவசதிஷ் ,என். லோகேஷ், திருமதி.ராணி, என்.ஜி.ஒ.வேலு, டி.விஜயகுமார், ஓவியர்எஸ்.குமரன், அ.ஜான்பிட்டர், , உமாகேஷ்வரன், வடபழனிஎஸ்.சரவணன்,ஏ.கார்த்தி , எஸ்.பாண்டியன், எம்.ஆனந்த்ராஜ், என்.எஸ்.மணிகண்டன், என்.ஜி.ஒ.கோபி, ப.சசிக்குமார், கா.யுவராஜ் , பா. தினேஷ்குமார், திருமதி கீர்த்திகா வரவேற்பில் அரசு தலைமைக் கொறடா கோவி செழியன் எம்.எல்.எ, சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலைத.வேலு எம். எல்.எ, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதிதமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, தியாகராயர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி எம்.எல்.எ, பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சிஆகியோர் நலதிட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இதில் எஸ்.பாஸ்கர் எம்.சி, கோ.சு.மணி, எஸ்.மோகன், டி.கமல், என்.எஸ்.பாலசுப்ரமணியன், ஆ.சந்திரசேகர் கோடம்பாக்கம் மு.சத்யா, நந்தனம்வேதா , திருமதிமலர் , என்.அன்பழகன் , எம்.ஆறுமுகம் , ஜெ.ஜானகிராமன் , என். ராமகிருஷ்ணன், பாபாசுரேஷ் க.சந்திரசேகர்சாந்தி பங்காரு, மு.மணிவண்ணன், இரா.பொன்னிவளவன், வி. பி.எஸ்.ஜெனார்தா, எஸ். புஷ்பா, ஜி.மோகன்ராஜ், ந. மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங்ராஜா, பி.ஜெய்குமார், பி.மாரி, மு.ம.செந்தில்குமார், எம்.கிருஷ்ணமூர்த்தி,, , ஜி.பி. செந்தில்குமரன், ஆர்.சக்திவேல், எம்.எஸ்.பழனி, மு. செல்வகுமார், லலிதாபுரம், என்.துரை, எஸ்.லட்சுமிகாந்தன், ராஜாஅன்பழகன், கார்த்திகாபாஸ்கர் ,கோமதி மணிவண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் ,கழக முன்னோடிகள் கலந்துகொள்கின்றனர்.

கோ.ராதாகிருஷ்ணன், எஸ்.ரமேஷ், பி.வி.பிரபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### ரூ.1072.15 கோடி மதிப்பீட்டில் மணலி மற்றும் மாதவரம் மண்டலங்களில்

# விரிவான பாதாள சாக்கடை திட்டப் பணிகள்!

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை.மார்ச்.11–

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.1072.15 கோடி மதிப்பீட்டில் மணலி மற்றும் மாதவரம் மண்டலங்களில் உள்ள வார்டு17 வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், வார்டு19 மாத்தூர், வார்டு22 & 23 புழல் பகுதிகள் மற்றும் வார்டு25 முதல் 30 வரை உள்ள மாதவரம் பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கான விரிவான பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப் பட்டது. அதனடிப்படையில், வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், மாத்தூர், புழல் பகுதிகளில் 183.38 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ முதல் 750 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் மற்றும் 30.57 கி.மீ நீளத்திற்கு 150 மி.மீ முதல் 1000 மி.மீ விட்டமுடைய விசைக் குழாய்கள் பதிக்கும் பணிகள் 09.03.2024 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 7,087 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 10 உந்து நிலையங்கள், 11 துணை கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 15.77 மில்லியன் லிட்டர் கழிவுநீர் கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும். இதன்மூலம், 1,004 தெருக்களில் உள்ள குடியிருப்புகளுக்கு 18,581 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு 1,30,353 பொதுமக்கள் பயன் பெறுவர். அதேபோல், 09.03.2024 அன்று மாதவரம் பகுதிகளில் உள்ள விடுபட்ட தெருக்களில் 99.83 கி.மீ நீளத்திற்கு 200 மி.மீ முதல் 600 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் மற்றும் 20.44 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ முதல் 1000 மி.மீ விட்டமுடைய விசைக் குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 3,914 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 3 உந்து நிலையங்கள், 6 துணை கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், நாளொன்றுக்கு 13.56 மில்லியன் லிட்டர் கழிவுநீர், கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும். இதன்மூலம், 21,787 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு 1,18,065 பொதுமக்கள் பயன் பெறுவர்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



தியாகராயர்நகர் சட்டமன்ற அலுவலகத்தில், நேற்று (10.3.2024) சென்னை தென் மேற்கு மாவட்ட இளைஞர் அணி தி.மு.க. சார்பில், எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் 71 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தியாகராயர்நகர் பகுதி கழக நிர்வாகிகளுக்கு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி, ‘டாண்டி’ பிரகாஷ் தலைமையில் கை கடிகாரம் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்கினார். இதில், கே.ஏழுமலை எம்.சி., அப்துல் மாலிக் (மாநில இளைஞர் அணி துணை செயலாளர்), ராஜா அன்பழகன் எம்.பி., மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### குன்றத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் -

# முத்தமிழறிஞர் கலைஞர் மாணவர் தமிழ் மன்றம் தொடக்க விழா - பரிசளிப்பு விழா!

### முனைவர் ம.இராசேந்திரன் சிறப்புரையாற்றி பரிசுகள் வழங்குகிறார்!

காஞ்சிபுரம்,மார்ச்.11-

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர், குன்றத்தூர் சென்னை 69 - ல், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் மாணவர் தமிழ் மன்றம் தொடக்க விழா மற்றும் தமிழ் உள்ளாட்சித் துறை நிதியுதவியுடன் பரிசளிப்பு விழா இன்று (11.3.2024- திங்கள்) காலை 11 மணியளவில் தமிழ்த் தாய் வாழ்த்துடன் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் சி.கலைமகள் வரவேற்கிறார்.

இம்மன்ற நிகழ்வுகள் குறித்து தமிழ்த் துறைத் தலைவர் (பொறுப்பு) முனைவர் மு.வனிதா உரையாற்றுகிறா.

இந்நிகழ்வில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் - தொடக்க விழா சிறப்புரையாற்றி பரிசுகள் வழங்குகிறார்.

பொறுப்பாசிரியர் முனைவர் ச.முருகப்பன் நன்றி கூறுகிறார்.

தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர் மு.பிச்சப்பிள்ளை, திருமதி. இரா.யுவராணி ஆகியோர் இணைப்புரையாற்றுகின்றனர்.

இவ்விழாவில், ஆசிரியர் பெருமக்கள், பணியாளர்கள், மாணவர்கள் திரளாகப் பங்கேற்கின்றனர்.



வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி தொடர் முயற்சியால் வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் அமைந்துள்ள (CPCL) நிறுவனத்திடமிருந்து (CSR) சமூக பாதுகாப்பு நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நமக்கு நாமே திட்டம் மூலமாக பெற்ற நிதியையும் இணைத்து ரூபாய் 30 லட்சம் பெற்று மண்டலம் 04, வார்டு 37 இல் உள்ள 7th பிளாக், KKD நகரில்,புதிய அங்கன்வாடி மையத்தை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்து தொடர்ந்து வடசென்னை நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ராயபுரம் மண்டலம்5, வார்டு 53, உள்ள சீனிவாசபுரம்,2 வது தெருவில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் பல்நோக்கு கட்டிடம் முடிவடைந்த பணியை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி திறந்து வைத்தார். இதில் சென்னை வடக்கு மாவட்டக் கழகச் பொறுப்பாளர் ஆர்,டி. சேகர் எம்.எல்.ஏ., ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, பெரம்பூர் வடக்குப் பகுதிச் செயலாளர் அ. முருகன், ராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், நேதாஜி யு. கணேசன், ஸ்ரீராமலு,37அ வட்டக் கழக செயலாளர் சி.எஸ். ரவி, மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தியாகராயர் நகர் மேற்கு பகுதி

# 132வது “அ” வட்டத்தில் முதல்வர் பிறந்தநாள் விழா!

### வட்டக் கழக செயலாளர் கே.எஸ்.வெல்டிங் ராஜா அறிக்கை!

சென்னை,மார்ச்.11-

வட்டக் கழகச் செயலாளர் கே.எஸ். வெல்டிங் ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தியாகராயநகர் மேற்கு பகுதி 132வது ”அ” வட்டத்தில் தமிழர் எழுச்சி நாள் மார்ச் 1, தமிழக முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாவட்ட பிரதிநிதி கீதாஞ்சலி வி .சேகர் தலைமையில், வட்ட கழக செயலாளர் கே.எஸ்.வெல்டிங் ராஜா, மாமன்ற உறுப்பினர் திருமதி கார்த்திகாபாஸ்கர் எம்.சி. முன்னிலையில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ., முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன். MP கிழக்கு பகுதி கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம். எல்.ஏ. மேற்கு பகுதி கழகச் செயலாளர் கே.ஏழுமலை. எம்.சி., தியாகராயநகர் தொகுதி பொறுப்பாளர் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் திரு. அப்துல்மாலிக் ஆகியோர், ரங்கராஜபுரம் பிரதான சாலை 60 குடிசை பகுதியில் கழக கொடியேற்றி பொது மக்கள் 571 பேருக்கு 11.03.2024, திங்கள் கிழமை அன்று மதியம் 12.00 மணியளவில் அறுசுவை உணவு பிரியாணி வழங்குகின்றனர்.

இந்த நிகழ்ச்சிக்கு: 132வது “அ” வட்டத்திற்குட்பட்ட மாவட்ட செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, வழக்கறிஞர் அணி ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, வர்த்தகர் அணி, சுற்றுச்சூழல் அணி, தொண்டரணி , சிறுபான்மையினர் அணி, பொறியாளர் அணி,தகவல் தொழில் நுட்ப அணி, தொழிலாளர் அணி, பாக முகவர்கள், அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தொ.மு.ச தொழிற்சங்கம் கழக முன்னாள் இந்நாள் முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தள்ளார்.



சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119 [அ] வட்ட கழகத்தில், திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று 10.3.2024 அறுசுவை உணவு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு வழங்கினார். உடன், எ.ஆர்.பி.காமராஜ், ஆர்.என்.துரை, வீ.பி.பொன்னரசு, வி.என்.ராஜன், பா.பிரகாஷ், ஏ. விஜயராஜ், இ.இளம்பாரதி, லைனர்.கே.பிரபு, கே.ஜி.செந்தில், ம.தயாநிதி, ஆர்.ராஜ்குமார், எம். கலில்ரகுமான்வட்ட நிர்வாகிகள்.. ஜெ.அன்பரசு, கே.ரவி, ஏ.காமாட்சி, கோ.மகேஷ், ச.ரமேஷ், ஆர். ராதாகிருஷ்ணன், க.அசோக், மு.அசோக், ஆர்,சிலம்பரசன் உள்ளனர்,

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தியாகி தாளமுத்து (நடராஜன்)

### மார்ச் 11 (1939)



குடந்தையிலிருந்து குமுறும் உணர்ச்சியோடு சென்னை வந்து 13.9.1938 காலை இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளி முன்பு கட்டாய இந்தி ஒழிக! ஆரிய இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!”என முழக்கமிட்டு மறியலில் கலந்து கொண்டு கைதானார்.

ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட் நீதிபதி “இப்படியே விட்டுவிட்டால் ஊருக்கு போய்விடுகிறீர்களா?” என்று கேட்டு மூச்சு இழுப்பதற்குள் விடை வந்தது தாளமுத்துவின் திருவாயிலிருந்து “இல்லை, முடியாது” என்பதாக. “நாலு மாத கடின காவல் தண்டனை விதிக்கிறேன்” என தீர்ப்பளித்தார் நீதிபதி.

சிறையில் கடுமையான வயிற்று போக்கு காரணமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சிறைச்சாலையில் இறந்துபோன தாளமுத்துவும், நடராஜனும்தான் இந்தி எதிர்ப்பு போரின் முதல் களப்பலிகள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



கலைஞர் 100
1924 - 2023
நாடும் நமதே!..
நாற்பதும் நமதே!!...
ZIGZAG Digital 80567 67277
மார்ச் 11
பல்வேறு நலதிட்டங்கள் வழங்கும் விழாவிற்கு
தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்
நலத்திட்ட நாயகரே!..
வருக!..வருக!!...
இடம்:
அரசு கலைக்கல்லூரி,
தருமபுரி
மாண்புமிகு. M.R.K.பன்னீர்செல்வம்,B.Sc., BL.,
தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
தடங்கம்.பெ.சுப்ரமணி, Ex.MLA.,
தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர்
தருமபுரி மாவட்ட தி.மு.கழகம்



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் முன்னிலையில் நேற்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற தூத்துக்குடி மக்களவை தொகுதிக்கான கழக வேட்பாளர் நேர்காணலில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டார். உடன் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் கீதாஜீவன், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உள்ளனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் முன்னிலையில் நேற்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற மத்திய சென்னை மக்களவை தொகுதிக்கான கழக வேட்பாளர் நேர்காணலில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன், கழக செய்தி தொடர்புச் செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் கலந்து கொண்டனர். மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நே.சிற்றரசு ஆகியோர் உடன் உள்ளனர்.

# இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு கடன் அடமான ஆவணங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 11 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர்களுக்கு வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்ட கடனிற்காக அரசிடம் ஒப்புவிக்கப் பட்ட நிலப்பத்திர ஆவணங்களை 9,742 தாயகம் திரும்பி யோர்க்கு திரும்ப வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்து, புதுக் கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 3 நபர்களுக்கு அவர்களின் அடமான ஆவணங்களை மீள வழங்கினார்.**

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயர் ஆட்சியில், இந்தியாவிலிருந்து பர்மா, இலங்கை முதலான பல்வேறு காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் வேலை செய்வதற்கு ஒப்பந்த தொழிலாளர்களாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு குடிபெயர்ந்தவர்கள் குடிபெயர்ந்த நாடுகளிலேயே தங்கி விட்டனர். ஆனால் அண்டை நாடான இலங்கையில் இவர்கள் நாடற்றவர்களாக இருந்தமையாலும், பல்வேறு காரணங்களுக்காகவும் இவர்கள் தாயகம் வரவேண்டிய சூழல் ஏற்பட்டது.

1964-ஆம் ஆண்டு இந்தியா - இலங்கை இடையே ஏற்பட்ட சிரிமாவோ - சாஸ்திரி உடன்படிக்கையின்படி 5 இலட்சம் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கி, இந்தியாவில் மறுவாழ்வு வழங்குவதாக இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. 1966-ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை இலங்கையிலிருந்து ஏறக்குறைய 5 இலட்சம் பேர் தாயகம் வந்துள்ளனர்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நூற்பாலை மற்றும் சர்க்கரை ஆலைத் திட்டம், வேளாண்மைத் திட்டம், பால்பண்ணைத் திட்டம், பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம், தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களில் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு மற்றும் பல்வேறு தொழில் பயிற்சி அளிக்கும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. மேலும், இவர்கள் வணிகத்தில் ஈடுபடுவதற்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.5,000/- வியாபாரக் கடனும் வழங்கப்பட்டது.

அத்துடன் தாயகம் திரும்பியோர்களுக்கு வீடு கட்டுவதற்காக ஒரு குடும்பத்திற்கு ரூ.6,000/- முதல் ரூ.10,000/- வரை வீட்டுக்கடன் அரசால் வழங்கப்பட்டது. இதற்காக ஏறக்குறைய 25 கோடி ரூபாய் கடனாக அளிக்கப்பட்டது. இக்கடனுதவி பெறுவதற்கு இவர்கள் தமது நில ஆவணங்களை அரசிடம் ஒப்புவித்தனர்.

இவர்களது வறிய நிலையின் காரணமாக பெற்ற கடன்களை திரும்ப செலுத்திட இயலாத நிலையில் இவர்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுகடன் மற்றும் வணிகக் கடன்களை 1.04.1974 முதல் 1999 வரை இவர்கள் திருப்பிக் கட்டியது போக மீதித்தொகையை அரசு தள்ளுபடி செய்ய முன்வந்தது. ஆனால் இக்கணக்கை நேர் செய்வதில் 15 வருடங்களுக்கு மேலாக ஒன்றிய அரசின் நிதி மற்றும் உள்துறை அமைச்சகம், தலைமை கணக்கு தணிக்கையாளர் மற்றும் பல்வேறு அலுவலர்களுடன் தமிழ்நாடு அரசு பல்வேறு கடிதத் தொடர்பு மேற்கொண்டிருந்தது. இந்நிலையில் தாயகம் திரும்பிய தமிழர்கள் அரசிடம் ஒப்புவித்திருந்த நிலப்பத்திரங்களை திருப்பித் தருமாறும் வேண்டிக்கொண்டனர்.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது, தாயகம் திரும்பிய தமிழர்களின் நல்வாழ்வு மீது அதிக அக்கறை கொண்டு இப்பிரச்சி னைக்கு உடனடி தீர்வாக, தாயகம் திரும்பிய தமிழர்களின் ஒப்புவிக்கப்பட்ட நிலப்பத்திரங்கள் முதலான ஆவணங்களை அவற்றில் உள்ள கடன் பதிவுகளை நீக்கம் செய்துவிட்டு சீர்படுத்தி முறையாக உரியவர்களிடம் திரும்ப அளிக்குமாறு ஆணையிட்டார்.

அதன்படி, தாயகம் திரும்பியோர்களுக்கு அவர்கள் பெற்ற கடனுக்காக அடமானம் பெறப்பட்டிருந்த ஆவணங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இதனால் மாநிலம் முழுவதும் உள்ள 9,742 தாயகம் திரும்பிய குடும்பத்தினர் பயன் பெறுவர்.

மேலும், இதன்மூலம், தாயகம் திரும்பிய தமிழர்கள் அவர்களது பட்டா மாற்றவும், கடன் பெறவும், கடவுச் சீட்டு மூலம் ரெப்கோ வங்கியில் உறுப்பினராகவும் முடியும், ரெப்கோ வங்கியின் சிறப்பு திட்டங்களான கல்வி, மருத்துவம், ஈமச்சடங்கு உதவி, காப்பீட்டு திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் பயன்பெற முடியும்.

இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பொதுத் துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### டி.லோகேஷ் தலைமை! இரா.ஆறுமுகம் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# திரு.வி.க.நகர் 74 வது வட்டத்தில் கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்!

*சென்னை, மார்ச் 11 -*

மார்ச் 1 மக்கள் முதல்வரின் மனித நேயத் திருவிழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் வடக்கு பகுதி 74வது வட்டத்தில் இன்று ( 11.03. 2024 - திங்கள்) மாலை 4 மணியளவில் சந்தியப்பன் மெயின் தெருவில் (சத்தியவாணி முத்துநகர் சந்திப்பு) கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி. லோகேஷ் தலைமை வகிக்கிறார்.

மேயர் பிரியாராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் ப.தாய கம் கவி, திரு.வி.க. நகர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பி.எம். யாழினி, திரு.வி.க. நகர் வடக்கு பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன், தெற்கு பகுதி செயலாளர் எம்.சாமிகண்ணு, 75வது மாமன்ற உறுப்பினர் எல். ரமணிலோகேஷ் ஆகியோர் முன்னிலையில் வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் பி.ஜெ.துளசிங்கம், லயன். பி.உதயசங்கர், அ.சி. தில்லை கதிர வன், புல்லட்.கி.ரமேஷ், பி.புவனவதி, கினார்.ஆறுமுகம்,இசட்.ஆசாத், நா. துலுக்காணம், பி.சுகுமார், இரா.வீரமணி,

75அ வட்ட நிர்வாகிகள் எஸ்.சீனிவாசன், எஸ்.லோகநாதன், எம். எஸ். சேகர், குமாரி ஆனந்தன், மு.க.மோகன், தில்லை குணா,ஆர்.அருண்குமார்,

பூங்காவனம், இரா. தனசேகர், ஏ.ஜி.எஸ். கோல்டுஜி, வி.பிரதாப், குட்டி (எ) இராமமூர்த்தி, கேபிள்டிவி சுரேஷ், எம். மாசிலாமணி, எஸ்.குப்புசாமி, சி.எஸ்.ராஜி, எஸ். பன்னீர்செல்வம், எஸ்.சக்திவேல், என்.ரவி, ஆர்.சங்கர், மாமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, பகுதி, வட்ட,கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், கழக முன்னோடிகள், மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொள்கின்றனர்.

74வது வட்டச் செயலாளர் எஸ்.புஷ்பராஜ் நன்றி உரையாற்றுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை 75அ வட்ட பொருளாளர் இரா.ஆறுமுகம் செய்துள்ளார்.

### சுமதி முருகன் தலைமை! பட்டூர் எஸ்.ஜபருல்லா வரவேற்புரை! ரூ.6.94 கோடியில்

# மாங்காடு நகராட்சியில் திட்டப் பணிகள்: அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைக்கிறார்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. - படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு!

*காஞ்சிபுரம், மார்ச் 11-*

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு நகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் திட்டப் பணிகள் ரூ.6.94 கோடி மதிப்பீட்டில் பள்ளி கட்டிடங்கள், நியாய விலைக் கடை, அங்கன் வாடி, நவீன குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு விழா மற்றும் அடிக்கல் நாட்டு விழா நாளை (12.3.2024, செவ்வாய்), மாலை 4.00 மணியளவில், பத்ரிமேடு, ரகுநாதபுரம், எம்.ஜி.ஆர்.மங்களபுரம், கே.கே.நகர், மேல்தெரு, அண்ணா தெரு, இறுதியாக பட்டூர் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு நகர மன்ற தலைவர் சுமதி முருகன் தலைமை வகிக்கிறார்.

நகர மன்ற துணைத் தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வரவேற்புரை ஆற்றுகின்றார்.

இத்திட்டப்பணிகளை குறு- சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் டி.ஆர். பாலு எம்.பி., கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் கலைச் செல்வி மோகன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன் ஆகியோர் வாழ்த்துரையாற்றுகின்றனர்.

இதில் எஸ்.சித்ரா, பெ.மனோகரன், சரஸ்வதி மனோகரன், மு.ராணி, உமாமகேஸ்வரி வந்தேமாதரம், எஸ்.ஸ்ரீதேவி, பி.அ.செந்தில், மா.முருகன், காந்திமதி, பானுப்பிரியா குமரேசன், திருமதி.சாந்தி சம்பத், திருமதி.சரளா விஜயகுமார், ரா.பாஸ்கரன், ஆர்.சாரதி, து.பெருமாள்ராஜ், கி.சிவா, ப.முருகன், திருமதி கே.ராம் பியாரி, திருமதி சரிதா ஞான வேல், தெ.ருசேந்திரகுமார், கா.மு.இஸ்மாயில், ஜி.எம். வில்லியம்ஸ், ச.தனசேகர், ரு.வாணி, ரா. வினோத்குமார், திருமதி மேனகா கணபதி, திருமதி அமுல் பிரேம் சேகர், எம்.ஆர்.வெங்கடேசன், திருமதி ரா.மங்கலட்சுமி, திருமதி சரஸ்வதி சீனிவாசன், திருமதி அனுசுயா சத்தியசீலன், திருமதி பிரவீனா தேவி ஜெயகுமார், திருமதி யாஸ்மின் ஜபருல்லா உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். ஹ்சினா அபிபுர்ரஹ்மான் நன்றி கூறுகிறார்.

### பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் நூலகக் கட்டிடம் கட்ட அடிக்கல்!

## பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ பணிகளை துவக்கி வைத்தார்

*சென்னை, மார்ச் 11 -*

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2. 19 வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்த நூலகம் கட்டிட மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் இருந்த காரணத்தினால் அப்பகுதி பொதுமக்கள் மாமன்ற உறுப்பினர் ஆகியோர் நூலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட வேண்டும் என்று தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் இடத்தில் கோரிக்கை வைத்து வலியுறுத்தி வந்தனர்.



திருவள்ளூர் நகரம் 9 வது வார்டு எல்லைக்குட்பட்ட சேலை ரோட்டில் பழுதடைந்த சாலைகளை சீரமைத்திட வேண்டும் என பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று திருவள்ளூர் நகராட்சி நிர்வாகம் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதனை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டார். நகர செயலாளர் சி. சு.ரவிசந்திரன், நகர் மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி, நகர்மன்ற முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா.மோதிலால், காஞ்சிப்பாடி பி.சரவணன், நகர் மன்ற உறுப்பினர் அயூப்அலி, கிளை செயலாளர் ஆர்.நரேஷ்குமார், மாவட்ட விவசாய அணிதுணை அமைப்பாளர் ஆர்.விஷால் ஆகியோர் உடன் இருந்தனர்.

அதைத் தொடர்ந்து நூலகத்தை நேரில் சென்று ஆய்வு செய்து இடிந்து விழும் நிலையில் உள்ள நூலக கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் அமைத்து தரப்படும் என்று சட்டமன்ற உறுப்பினர் பொதுமக்களிடத்தில் உறுதளித்தார் அதைத்தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்தும் நூலகத்துறை நிதியிலிருந்தும் ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள் கட்ட. பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ கருணாநிதி நேரில் வருகை தந்து நூலக கட்டிடம் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

அப்பொழுது மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை மாமன்ற உறுப்பினர் பிருந்தா தேவி சிலம்பரசன் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் உதவி பொறியாளர் ஆகியோர் உடன் இருந்தனர்







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பில் சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்திற்கு தரை மற்றும் நான்கு தளங்களுடன் 14 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர் எஸ்.ஆர்.காந்தி, தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் சீ.சௌமியா, பதிவாளர் திருமதி சிவசௌந்தரவல்லி ஆகியோர் கலந்துகொண்டனர்.

### மயிலாடுதுறை மாவட்டம் - சீர்காழி - நத்தம் அருகே சாலை விபத்து!

# உயிரிழந்த காவலர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 11 -**

**மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நத்தம் சாலையின் அருகே நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த காவலர் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் மற்றும் நிதியுதவி அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக முதல்வர் அவர்களின் நேற்றைய அறிவிப்பு வருமாறு:

நாகப்பட்டினம் மாவட்டம், வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் காவலராக பணி புரிந்து வரும் ராஜேஷ் (Gr II PC 699), வயது 35, த/பெ. ரத்தினசாமி என்பவர் நேற்று முன்தினம் (09.03.2024) இரவு தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் போது மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி காவல் சரகம், சீர்காழி - நத்தம் சாலையின் தடுப்பில் எதிர்பாராத விதமாக மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகவும் வருத்தமும், வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் காவலர் ராஜேஷ் அவர்கள் உயிரிழந்துள்ளது காவல் துறைக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

காவலர் ராஜேஷ் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மோடி ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும்!

## திருவல்லிக்கேணி வியாபாரிகள் சங்க விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, மார்ச் 11-**

**சென்னை, சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியில், திருவல்லிக்கேணி வியாபாரிகள் சங்கத்தின் 49வது ஆண்டு விழா, நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.**

அப்பொழுது அவர் பேசியதாவது:-

இங்கே அண்ணன் வி.பி.மணி அவர்கள் பேசும்பொழுது, `தொடர்ந்து மூன்று வருடங்களாக இந்த நிகழ்ச்சிக்கு என்னை எப்படியாவது வரவழைக்க வேண்டும்' என்று முயற்சி செய்ததாகச் சொன்னார். இன்று கடைசியாக அவர் வெற்றிப் பெற்றிருக்கிறார்.

உண்மையாகவே அவர் சொன்னதுபோல நான் இந்த நிகழ்ச்சியில் அமைச்சராகக் கலந்து கொள்ளவில்லை. சட்டமன்ற உறுப்பினராகக் கலந்து கொள்ளவில்லை. எனவே எந்தக் கோரிக்கையையும் என்னிடம் வைக்க முடியாது. ஆனால், நான் உரிமையோடு சொல்வேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக, இந்தச் சேப்பாக்கத்தின் செல்லப் பிள்ளையாகத் தான் நான் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொரு உறுதி மொழியும் நான் தருகின்றேன். மூன்று வருடமாக நான் வரவில்லை. இன்றைக்கு மிகச் சிறப்பாக 49 வது ஆண்டு விழாவை, இங்கு மாலை நாலு மணியிலிருந்து சிறப்பாகக் கொண்டாடி கொண்டிருக்கிறீர்கள் . அடுத்த ஐம்பதாவது ஆண்டு, சிறப்பான நிகழ்ச்சியில் அடுத்த வருடம் நான் உங்களை எல்லாம் சந்திக்க ஆசைப்படுகிறேன். அந்த நிகழ்ச்சியில் நிச்சயம் கலந்துகொள்வேன் என்ற வாக்குறுதியையும் தருகிறேன்.

**குடும்பங்களின் விழா!**

நான் வரும்பொழுது வெறும் வணிகர்கள் தான் இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு வந்தேன். ஆனால் இங்கு வந்து பிறகு தான் பார்க்கிறேன் நீங்கள் அத்தனை பேரும் குடும்பத்தோடு வந்திருக்கிறீர்கள். எனவே, உங்கள் குடும்பத்துடன் என்னையும் இணைத்துக் கொள்ளுங்கள். அதனால்தான் நான் பெருமையாகச் சொல்கிறேன். நான் உங்கள் வீட்டுப் பிள்ளை. உங்கள் வீட்டு செல்லப் பிள்ளையாகத்தான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன்

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த அண்ணன் வி.பி.மணி அவர்களுக்கு மீண்டும் என்னுடைய பாராட்டுகள். அனைத்து நிர்வாகிகளுக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். இன்னும் 50 நாட்களில் நம் நாட்டின் பிரதமர் யார் என்று தேர்ந்தெடுக்கப் போகின்ற தேர்தல்.



**பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும்!**

கண்டிப்பாக தமிழ்நாட்டில் நிச்சயம் ஒன்றிய பா.ஜ.க. அரசை ஓடத்தான் விடப்போகிறோம். தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும், பா.ஜ.கவிற்கு ஆதரவாக இருக்க மாட்டார்கள். நம் தலைவர் யாரை முடிவு செய்கிறாரோ அவர்தான் அடுத்த பிரதமராக அமர வேண்டும்.

இந்த வணிகர் பெருமக்களாகிய நீங்கள்தான் பொதுமக்களோடு தினமும் பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள். குடும்பங்களுடன் பேசக்கூடியவர்கள் அவர்களின் பிரச்சினைகளைக் கேட்கக் கூடியவர்கள். எனவே நீங்கள் இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும்.

அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள், 'இது வியாபாரிகள் மாநாடு. நாம் சாதாரண வியாபாரிகள் முதல் பெரிய வியாபாரிகள் வரை அத்தனை வியாபாரிகளையும் இன்று சந்தித்துக்கொண்டு இருக்கிறோம்' என்று சொன்னார்கள்.

ஆனால், மோடி அவர்களுக்குத் தெரிந்த அந்த ஒரே ஒரு வியாபாரி யார் என்று உங்களுக்கே தெரியும். அவர் பெயர் அதானி. அதானி யார் என்று பார்த்தால் மிகப்பெரிய வியாபாரி. உலகப் பணக்காரர் பட்டியலில் இரண்டாவது இடம்.

**ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும்!**

கம்பெனி ஆரம்பித்து, கடந்த 9 வருடத்தில் இவ்வளவு பெரிய வளர்ச்சி. அதற்கு எப்படிக் காரணம் அவர் மோடி அவர்களின் மிக மிக நெருங்கிய நண்பர். இருக்கின்ற அனைத்துப் பொதுத் துறைகளையும் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் இந்த எட்டு ஒன்பது வருடத்தில் அதானியிடம் தூக்கிக்கொண்டு போய் கொடுத்துவிட்டார்.

அதானி ஏர்போர்ட் வந்துவிட்டது, அதானி ரயில்வே ஸ்டேஷன் வந்துவிட்டது. அதானி தண்ணீர் வந்துவிட்டது. அதானி ட்ரெயில் வந்துவிட்டது. இப்படி அனைத்துப் பொதுத் துறைகளையும் தனியார் துறை ஆக்கியதுதான் இந்தக் கடந்த ஒன்பது வருடம் மோடியின் ஆட்சி லட்சணம்.

எனவே இந்த ஆட்சிக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்றால், அடுத்து வருகின்ற தேர்தலில், நீங்கள் அத்தனை பேரும் உதயசூரியன் சின்னத்திற்கும் நம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கும் வாக்களிக்க வேண்டும்.

நம் தலைவர் யாரை அறிவிக்கிறார்களோ அந்தக் கூட்டணி ஏன் ஜெயிக்க வேண்டும்' என்ற பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஏனென்றால், நீங்கள் எல்லாம் உழைப்பால் உயர்ந்தவர்கள். அதானி போல மோடியின் தயவால் நீங்கள் எல்லாம் உயர்ந்தவர்கள் கிடையாது. அண்ணன் வி.பி.மணி அவர்கள் அவர் எப்படிப் படிப்படியாக உழைப்பால் உயர்ந்தார் என்பதை சொன்னார்கள்.

இங்கு வந்திருக்கின்ற அத்தனை பேரும் உழைப்பால் உயர்ந்தவர்கள். உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து, இங்குக் கலைநிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கப் போகிறது என்று சொன்னார். எனவே அந்தக் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளையும் என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினரும் கழகத்தின் விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, வணிகர் சங்கத் தலைவர் வி.பி.மணி, பகுதிக் கழகச் செயலாளர் காமராஜ், சங்கத்தின் பொதுச் செயலாளர் பால்பாண்டியன், பொருளாளர் காசி பாண்டியன், அறக்கட்டளைத் தலைவர் குணசேகரன், வணிகர் சங்கப் பேரமைப்பு இணைச் செயலாளர் சந்திரசேகர், சங்கத்தின் சட்ட ஆலோசகர் மாமன்ற உறுப்பினர் சிவ.ராஜசேகரன், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ் உள்பட கழக நிவாகிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியில் ஆய்வு!

## அமைச்சர் ஆர்.காந்தி மேற்கொண்டார்!

*வேலூர், மார்ச் 11 -*

வேலூர் மாவட்டம் குடியாத்தம் கைத்தறிக்கு புகழ் பெற்றது ,இங்கு கைத்தறி ஜவுளி பூங்கா அமைக்க வேண்டும் என பல ஆண்டுகளாக இப்பகுதி நெசவாளர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் குடியாத்தம் பிச்சனூர் பகுதியில் அமைந்துள்ள சிங்காரவேலர் தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் பழுதடைந்த கட்டிடம் புதுப்பித்து கைத்தறி பூங்கா செயல் 3 படுத்தப்பட உள்ளது.

இந்த இடத்தை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி பார்வையிட்டு ஆய்வு செய்து பேசியதாவது:-

நான் கைத்தறி துறை அமைச்சராக பதவி ஏற்ற முதல் வருடத்தில் நெசவாளர்களுக்கு அடிப்படைக் கூலியில் 10சதவீதம் உயர்த்திக் கொடுக்கப்பட்டது .

பின்னர் இரண்டாம் ஆண்டில் மீண்டும் 10சதவீதம் உயர்த்தி வழங்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 10 இடங்களில் சிறிய கைத்தறி பூங்காக்கள் அமைக்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார் .

அதன்படி ஒவ்வொரு கைத்தறி பூங்காவும் ரூ.3 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. நூற்பாலைகளில் எந்திரங்களை நவீனமாக்கும் நிறு வனங்களுக்கு வழங்கப்படும் வங்கி கடன்களுக்கான வட்டியில் அரசின் சார்பில் 2சதவீதம் வட்டி மானியமாக வழங்கப்பட்டு வந்த நிலையில் வட்டி மானியத்தை 6சதவீதமாக முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார். கைத்தறி நெசவாளர்களுக்கு குடும்ப ஒய்வூதிய தொகையை ரூ.1,200 என உயர்த்தி வழங்கி உள்ளார். கைத்தறி நெசவாளர்களுக்கான மின்சாரம் 300 யூனிட் ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது . நெசவாளர்களுக்கு வீடுகட்டி கொடுக்கும் திட்டத்தில் முதலில்ரூ. 2.52 லட்சமாக இருந்தது , இந்த வீடு கட்டும் திட்டத்திற்கான நிதியானது ரூ.4 லட்சமாக உயர்த்தப்பட்டது. ஒரு நாளைக்கு நெசவாளர்களுக் குஆயிரம் ரூபாய் கூலி வழங்க வேண்டும், என்ற இலக்கை நோக்கி முதலமைச்சர் மு .க .ஸ்டாலின் செயல் பட்டு வருகிறார். இவ்வாறு அவர் பேசினார். ஆய்வின் போது தர்மேந்திர பிரதாப் யாதவ், விவேகானந்தன், கலெக்டர் வே.இரா. சுப்பு லட்சுமி, வேலூர்மாநகரதி. மு.க.செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாநகராட்சி மேயர் சுஜாதா, குடியாத்தம் உதவி கலெக்டர் மகாலட்சுமி என்.இ. சத்தியானந்தம், சௌந்தர ராஜன், இணை இயக்குனர் கணேசன், உதவி இயக்குனர் செந்தாமரை, தாசில்தார் சித்ரா தேவி, கள்ளூர்ரவி,

நத்தம் பிரதீஷ், அன்பரசன், ஜனார்த்தனன், நகராட்சி மன்ற உறுப்பினர் நவீன் குமார் , மாவட்ட நெசவாளர் அணி துணை தலைவர் கு.மொழிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக சிறப்பு செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

*நாமக்கல். மார்ச் 11-*

நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் அறிக்கை வருமாறு:-

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக சிறப்பு செயற்குழுக் கூட்டம் இன்று (11.03.2024 திங்கட்கிழமை) காலை 08.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.



மாவட்ட அவைத்தலைவர்சி.மணிமாறன் தலைமையில், வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணை செயலாளருமான கே.பொன்னுசாமி ஆகியோர்கள் முன்னிலையில், நடைபெறும் இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், தொகுதி பொறுப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணியின் மாவட்ட அமைப்பா ளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி புதிதாக தொடங்க அரசு ஆணை வழங்கிய கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தல்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரி வித்துள்ளார்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி மண்டலம் 2, 17 வது வார்டுக்கு உட்பட்ட யூனியன் கார்பெட் காலனி, சாரா நகர், சாஸ்தா நகர், பிள்ளையார் கோவில் தெரு , லத்தீப் காலனி ஆகிய பகுதிகளில் மின் அழுத்த பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் ரூபாய் 26 லட்சம் மதிப்பீட்டில் 5 புதிய மின்மாற்றிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி அமைத்துத் தந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அப்பொழுது மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, மின்சாரத்துறை பல்லாவரம் கோட்டப் பொறியாளர், உதவி பொறியாளர்கள், கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ச.த.ராதா**
**மார்ச் 11 (2017)**



**இளமை காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**சோளிங்கர் பேரூரில் வட்டச் செயலாளராகவும், பேரூர் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**சோளிங்கர் நகர கூட்டுறவு சங்கி தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


மார்ச்-1
மக்கள் முதல்வரின்
மனிதநேயத் திருவிழா
சூரியச் சுடர் – 33
துப்புரவு நம் நட்புறவு!
சூரியத் தலைவர் நம் உறவு!!
நாள் : 11.03.2024 திங்கட்கிழமை மாலை 4.00 மணி
இடம் : முத்துக்குமரப்பன் சாலை, ஜி.கே.எம்.காலனி
சூரியச் சுடர் – 64
திரைக்கடல் தேடி கொடுப்பவர்
திருத்தமாய் செய்து முடிப்பவர்
நாள் : 11.03.2024 திங்கட்கிழமை மாலை 5.00 மணி
இடம் : ஸ்ரீ சர்வா மஹால், புதூர், அம்பத்தூர், சென்னை – 53
தலைமை
சரிதா மகேஷ்குமார் எம்.சி
பொதுக்குழு உறுப்பினர் – 6வது மண்டல குழு தலைவர்
துரை.ஆயிரம்
மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர்
முன்னிலை
திரு. டி.ஆர்.பாலு எம்.பி
கழகப் பொருளாளர்
கழக நாடாளுமன்ற குழுத் தலைவர்
திரு. பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
மேயர் பிரியாராஜன்
கலாநிதிவீராசாமி எம்.பி இரா.கிரிராஜன் எம்.பி ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ
ப.ரங்கநாதன் இரா.விடுதலை பி.டி.சி.செல்வராஜ்
எ.நாகராசன் எம்.சி ஐ.சி.எப்.வ.முரளிதரன்
கே.சந்துரு சி.மகேஷ்குமார்
தேவஜவகர் எஸ்.பன்னீர்செல்வம்
துரை.கண்ணன் எஸ்.தனசேகர்
ம.அசோக்குமார் ஆர்.எஸ்.சித்திக்
பி.கே.மூர்த்தி எம்.சி டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி
எம்.டி.ஆர்.நாகராஜ் டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி
எல்.பி.எப்.மோகன் வி.ரமேஷ்(எ)நீலகண்டன் எம்.சி
டாக்டர்.பூர்ணிமா எம்.சி ஜி.வி.நாகவள்ளி எம்.சி
கு.கிருஷ்ணமூர்த்தி ஜெ.பாலமுருகன்
சென்னை மாநகராட்சி ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள்
1000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்
திரு. தா.மோ.அன்பரசன்
மாண்புமிகு குறு சிறு மற்றும்
நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
171 மீன் விற்பனையாளர்களுக்கு
நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்
திரு. சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ
கழக மாணவர் அணி செயலாளர்
நன்றியுரை
எம்.ஜெ.சி.பாபு
69வது வட்ட செயலாளர்
பி.அதிபதி
69 அ வட்ட செயலாளர்
வெ.ராதாகிருஷ்ணன்
80வது வட்ட கழக செயலாளர்
கொளத்தூர் கிழக்கு பகுதி, அம்பத்தூர் வடக்கு பகுதி – சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க
Star Signs
044 - 43 55 48 47


தலைமை ▪ 'தட்சன்' ஹரிஹரன் வட்ட கழக செயலாளர்
முன்னிலை ▪ ம.புகலிங்கம் ✧ R.K.ஜெயமுருகேஷ் ✧ சாலி கே.மோகன் ✧ J.பாலு ✧ பு.பத்மநாதன் ✧ S.தினகரன்
A.பொன்னுதுரை ✧ B.முஜீப் ✧ D.செந்தில்குமார் ✧ கார்த்திக் சந்திரசேகன் ✧ G.ராமு ✧ வடபழனி P.அலெக்ஸ்
தி.ஆனந்தன் ✧ J.S.சீனிவாசன் ✧ P.சீனிவாசன் ✧ D.வெங்கடேசன் ✧ S.பிரமோத் ராஜ்குமார்
வரவேற்பு ▪ சிவசதிஷ் ✧ திருநகர் N.லோகேஷ் ✧ திருமதி ராணி ✧ NGO வேலு ✧ D.விஜயகுமார் ✧ S.குமரன் ✧ S.ரமேஷ்
A.ஜான்பீட்டர் ✧ உமாமகேஸ்வரன் ✧ வடபழனி S.சரவணன் ✧ E.கார்த்தி ✧ S.பாண்டியர் ✧ M.ஆனந்தராஜ்
N.S.மணிகண்டன் ✧ NGO B.கோபிநாத் ✧ S.சசிகுமார் ✧ கா.யுவராஜ் ✧ B.தினேஷ்குமார் ✧ திருமதி கீர்த்திகா
நிகழ்ச்சியை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்கள்
மாண்புமிகு, திரு. கோவி செழியன் MLA.,
அரசு தலைமைக் கொறடா
திரு. மயிலை த.வேலு B.A.,LLB.,MLA.,
சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர்
முனைவர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் MP
கழக கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத்தலைவர்
தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. ஜெ.கருணாநிதி MLA
தியாகராய நகர் கிழக்கு பகுதி செயலாளர்
திரு. கே.ஏழுமலை MC
தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர்
திரு. S.பாஸ்கர் MC
130 வது மாமன்ற உறுப்பினர்
திரு. கோ.சு.மணி
தலைமை செயற்குழு உறுப்பினர்
திரு. S.மோகன்
மாநில மாணவரணி இணைச் செயலாளர்
திரு. D.கமல்
130 வது வட்ட செயலாளர்
திரு. N.S.பாலசுப்பிரமணியன்
சுற்றுச் சூழல் அணி மாவட்ட அமைப்பாளர்
மாவட்ட நிர்வாகிகள் ▪ ஆ.சந்திரசேகர் ✧ கோடம்பாக்கம் மு.சத்தியா ✧ நந்தனம் வேதா,
திருமதி S.மலர் ✧ என்.அன்பழகன் ✧ எம்.ஆறுமுகம் ✧ ஜெ.ஜானகிராமன்
பகுதி கழக நிர்வாகிகள் ▪ N.ராமகிருஷ்ணன் ✧ பாபாசுரேஷ் ✧ க.சந்திரசேகர் ✧ சாந்திபங்காரு ✧ மு.மணிவண்ணன்
இரா.பொன்னிவளவன் ✧ வி.பி.எஸ்.ஜெனார்த்தன் ✧ எஸ்.புஸ்பா ✧ G.மோகன்ராஜ்
வட்ட செயலாளர்கள் ▪ ந.மோ.முரளி ✧ கே.எஸ்.வெல்டிங்ராஜா ✧ பி.ஜெயகுமார் ✧ பி.மாரி ✧ மு.ம.செந்தில்குமார் ✧ எம்.கிருஷ்ணமூர்த்தி
ஜி.பி.செந்தில்குமரன் ✧ ஆர்.சக்திவேல் ✧ எம்.எஸ்.பழனி ✧ மு.செல்வகுமார் ✧ லலிதாபுரம் என்.துரை ✧ எஸ்.லட்சுமிகாந்தன்
மாமன்ற உறுப்பினர்கள் ▪ ராஜா அன்பழகன் ✧ கார்த்திகா பாஸ்கர் ✧ கோமதிமணிவண்ணன்
நன்றியுரை ▪ G.ராதாகிருஷ்ணன் ✧ S.ரமேஷ் ✧ P.V.பிரபு ✧ அபிஷேக் சோழா ரவி
பாகப் பொருப்பாளர்
பகுதி பிரதிநிதி
நிகழ்ச்சி ஏற்பாடு ; 130 'அ' வட்ட தி.மு.க
சென்னை தென்மேற்கு மாவட்டம்
தியாகராயர் நகர் மேற்கு பகுதி
130 'அ' வட்டத்தில்
திராவிட மாடல் ஆட்சியின்
கழகத் தலைவர்
திரு. மு.க.ஸ்டாலின்
அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு
கழக அரசின் சாதனை விளக்க
பொதுக்கூட்டம்
மற்றும் பொதுமக்களுக்கு
நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
இடம் : அழகர் பெருமாள் கோவில் தெரு, வடபழனி
நாள் : 11.03.2024, திங்கட்கிழமை
நேரம் : 6.00 மணிக்குமேல்
SP Designs



DMK
LEGAL WING

Symposium on

# INDIAN DEMOCRACY AT CROSS ROADS

11th March, 2024 at 6PM
(Sir PT Thiyagaraya Hall, GN Chetty Road, T.Nagar

*Presided By*

**N.R.Elango** MP
(Member of Rajya Sabha - Legal Wing Secretary, DMK)

*Guest Of Honour*

**Thiru.Durai Murugan**
(Hon'ble Minister of Water Resources, Govt of Tamilnadu)
(General Secretary, DMK)

*Key Note Address*

**Tiruchi Siva** MP
(Leader of the DMK Party in Rajya Sabha)
(DMK Propaganda Secretary)

*In the Presence of*

**Alanthur R.S.Bharathi**
(Organisation Secretary, DMK)

**T.K.S.Elangovan**
(President - Press Relation Wing, DMK)

இந்திய ஜனநாயகம் படும்பாடு குறித்த சட்ட கருத்தரங்கத்திற்கு வருகை தரும் அனைவரையும் வருக! வருக!! என வரவேற்று மகிழும்




Topic
**SECULARISM AND FEDERALISM DERAILED**



## ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தி.மு.க சட்டத்துறை

நிர்வாகிகள்

வழக்கறிஞர். **துரை.கண்ணன்**
சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர்

வழக்கறிஞர். **டி.ஜெகதீசன்**
சென்னை தெற்கு மாவட்ட அமைப்பாளர்

வழக்கறிஞர். **வே.தேவேந்திரன்**
சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர்

வழக்கறிஞர். **சி.கணேஷ்பாண்டியன்**
சென்னை தென் மேற்கு மாவட்ட அமைப்பாளர்

வழக்கறிஞர். **கே.லட்சுமிகாந்தன்**
சென்னை வடகிழக்கு மாவட்ட அமைப்பாளர்

வழக்கறிஞர். **ஜெ.காணிக்கை நாதன்**
சென்னை வடக்கு மாவட்ட அமைப்பாளர்



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.03.2024) சைதாப்பேட்டை, சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 162 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.1,48,19,540/ மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் , மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி அனுசயா தேவி , கோடம்பாக்கம் மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி , மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் சீ. குமார், கதிர்வேலு, மற்றும் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட

# 162 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, மார்ச் 11

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை மாவட்டத்தில் 162 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.48 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.03.2024) சைதாப்பேட்டை, சென்னை பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 162 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.1,48,19,540/ மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட கால்கள் பாதிக்கப்பட்ட 140 பயனாளிகளுக்குரூ.1,34,41,540/ மதிப்பில் (ஒன்றின் விலை ரூ.96,011/) இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் வாகனங்கள், முதுகுத்தண்டுவடம் மற்றும் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 14 பயனாளிகளுக்கு ரூ.13,78,000/ (ஒன்றின் விலை ரூ.1,06,000/) மதிப்பில் பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான 4 வகை திருமண நிதி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 12 பயனாளிகளுக்கு 8 கிராம் தங்க நாணயம் என மொத்தம் 162 பயனாளிகளுக்கு ரூ.1,48,19,540/ மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி அனுசயா தேவி, கோடம்பாக்கம் மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் சீ.குமார், கதிர்வேலு மற்றும் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

எஸ்.வி.சுரேஷ் ஏற்பாட்டில் பூ.சுப்பிரமணியன் வரவேற்பில் விழா!

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை! டி.பி.எம்.மைதீன்கான் - மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நெல்லை, மார்ச் 11 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா,கழக இளைஞர் அணி மாநாடு தீர்மான விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1800 பேர்களுக்கு தையல் இயந்திரம்,சேலை, வீட்டு உபயோக பாத்திரங்கள்,சலவைப் பெட்டி ஆகியவை அடங்கிய பொருட்கள் வழங்கும் நிகழ்வு நெல்லை சந்திப்பு சிந்து பூந்துறையில் வைத்து தச்சநல்லூர் பகுதி செயலாளர் பூ சுப்பிரமணியன் தலைமையில் மாநகர செயலாளர் சு. சுப்பிரமணியன் மாநகர துணை செயலாளர்கள் செல்வ முருகன் என்ற பிரபு,அப்துல்கையூம், சுதாமூர்த்தி,மாநகரப் பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, மூக்கன், கண் ணையா, தங்கராஜ்,ராஜேந்திரன், கிருஷ்ணவேணி, ஆஞ்சிஸ், சுடலை சிவா, சுந்தரவேலன், ஜீவன் மாரியப்பன், கேடிசி முருகன், விஷ்ணு, பாலமுருகன், காதர் ஒலி,பாலன் என்ற ராஜா, ராஜவர்மன், குண்டு பாண்டியன், மலைப்பாண்டியன், ரமேஷ், வள்ளியம்மாள், பேரங்காடி ஐயப்பன், ரமேஷ், சிவனுபாண்டியன், பழக்கடை சங்கர், சுரேஷ், கண்ணன், சுடலைமணி,ஆடிட்டர் முருகன், சீனிவாசன், சுடலைமுத்து, லியாகத் அலிகான், குமார், பாஸ்கர், சரவணன், செல்வம், பால கிருஷ்ணன், வினோத், வரதன், முத்து வேல்மணி கண்டன், பாபு, துர்கா, ராம் வேம்பு விவேக், விசு, நவீனா முத்துக்குமார், செல்வம், மாலா, வள்ளியின் செல்வன், கிட்டுப் பிள்ளை, தர்ம நீலக்குமார், அசன், சதீஷ், தங்கராஜ், குரு நாதன், விசுவநாதன், அந்தோணி, பெயிண்டர் சீனி,பிரபு,நம்பி,ராஜா, கண்ணன்,எம்.ராஜா, ஆட்டோ கண்ணன், சீனிவாசன், குமார்,ரவி,கர்ணன்,குரு, நம்பிராஜன்,பாடாலிங்கம்,பூதத்தான், கனல் கண்ணன், தளவாய், ராமர், பிச்சுமணி, வசந்த், பாலாஜி,செல்வமணி, வேந்தன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.தச்சை பகுதி துணை செயலாளர் 12 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோகுலவாணிசுரேஷ் வரவேற்புரையாற்றினார்.நிகழ்ச்சியை தலைமை கழகப் பேச்சாளர் நெல்லை முத்தையா தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் ஆகியோர் உரையாற்றினர்.

கழக கொள்கை பரப்பு செயலாளர் பாடநூல் பிரிவு வாரிய தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி 1800 பேர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

நிகழ்வில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், தலைமை

செயற்குழு உறுப்பினர் லெட்சுமணன்,

மாவட்ட அவைத் தலைவர் முருகன், பொருளாளர் வண்ணை சேகர்,மாவட்ட துணை செயலாளர்,தர்மன், கிரிஜா குமார், மண்டல தலைவர்கள் பிரா ன்சிஸ், ரேவதி பிரபு,ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், மாரியப்பன்,அருள்மணி, பகுதி செயலாளர்கள் அன்டன் செல்லதுரை, துபாய் சாகுல், நமச்சிவாயம்,அணி அமைப்பாளர்கள் கருப்பசாமி கோட்டையப்பன்,நவநீதன், செந்தில்குமார்,மாமன்ற உறுப்பினர்கள் சங்கர், சுபானி, ரவீந்தர், ராமகிருஷ்ணன், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி, அருண்குமார்,வட்டக் கழக செயலாளர்கள் பத்மராஜ்,சுப்ரீத் சுப்பிரமணியன்,அணி துணை அமைப்பாளர் இளைஞர் அணி மீரான்மைதீன், மிக்கேல்,இனியன், தலைமை கழகப் பேச்சாளர்கள் பிரிட்டோ அலெக்ஸாண்டர், கவிஞர் மூர்த்தி, பாம்பு கிருஷ்ணன், மைக் மணி, நெல்லை ரவி,திராவிட மணி, இராவணன் உள்பட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மேகை செல்வம் நன்றி உரையாற்றினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நெல்லை மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ் செய்திருந்தார்.



முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசின் எண்ணற்ற சாதனைகளை இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் வாயிலாக மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கில். இராயபுரம் சட்டமன்ற தொகுதி 50 மற்றும் 50 அ வட்டத்தில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, இராயபுரம் தேர்தல் பொறுப்பாளர் .நவீன் ஆகியோர் இணைந்து பொதுமக்கள் மத்தியில் திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டனர். உடன் இராயபுரம் கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.செந்தில் குமார், வட்டச் செயலாளர் ஆர்.வி. கணேசன் , என்.கிருஷ்ணன், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் இருந்தனர்.



சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி 175 வது வட்ட இளைஞர் அணி திமுக சார்பில் கழக தலைவர் முதல்வர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு TNHB காலனி பிரிட்டோ பள்ளி அருகில் பெயர் பலகை கழக கொடியேற்றி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட வழங்கும் விழா 175வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ப.நாகராஜன்(எ)மணி தலைமையில் வேளச்சேரி மேற்கு பகுதி செயலாளர் அரிமா சு.சேகர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா மற்றும் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எம்.எச்.அசன் மௌலானா மற்றும் 175வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.மகேஸ்வரி முருகவேல், கெ.எல்லப்பன் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இதில் வட்ட செயலாளர்கள் க.பாரதிதாசன், வி.சக்திவேல், ஜி.பி.எஸ்.பாலசதீஷ், வட்ட கழக நிர்வாகிகள் என்.நேசன் வி.கோபாலகிருஷ்ணன், வி.மனோகரன், ஜி.சண்முகம், சி.பூங்கொடி, ஜி.இ.தணிகைவேல், நேரு நகர் எஸ்.பழனி, உ.சிவா, இ.சதீஷ், விக்னேஷ், மதன்குமார், யு.எஸ்.விக்ரம் மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், இளைஞர் அணிகள், கழக முன்னோடிகள் இதில் கலந்து சிறப்பித்தினர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி திமுக சார்பில் ஆவடியில் கட்டளை மையம் திறப்பு விழா முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சாமு.நாசர் தலைமையில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி கட்டளை மையத்தை திறந்து வைத்தார். உடன் மாநில வழக்கறிஞர் நிர்வாகிகள் கே.சந்துரு, ஜெ.பச்சையப்பன், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், தலைமை வழக்கறிஞர் சரவணன், ஆர்.டி.இ.ஆதிசேசன், மா.ராஜி, எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், சன்பிரகாஷ், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், பேபிசேகர், பொன். விஜயன், ஜி.நாராயணபிரசாத், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, ஆர்.ஜெயசீலன், தங்கம் முரளி, அமுதாபேபிசேகர், என்.பி.மாரிமுத்து, எஸ்.ராஜேந்திரன், பிகே.நாகராஜ், துரைபழணி, பொன்.புனிதவராஜன், செந்தில்குமார், பாஸ்முருகன், வெங்கடேசன், ஜெயவேல், அகஸ்டின், ஸ்ரீமுருகன், தமிழ்செல்வன், ஹமாலினி, ரமேஷ், தனலட்சுமி, ராஜ்குமார், பிரசன்னா, கிருஷ்ண தாஸ், கண்ணன், சந்தோகுமார், செல்வம், உள்பட பலர் உள்ளனர்.

# ஆவடி தொகுதி - நடுகுத்தகை ஊராட்சியில் புதிய பள்ளிக் கட்டிடம்!

## மாவட்டச் செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருவள்ளூர், மார்ச் 11-

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம் நடு குத்தகை ஊராட்சியில் உள்ள ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை வேண்டும் என்று ஆசிரியர்கள் முன்னாள் அமைச்சர் ஆவடி சாமு.நாசரிடம் கோரிக்கை வைத்தனர். இதனை சம்பந்தப்பட்ட துறையிடம் தெரிவித்து இதற்கான பணிகளை மேற்கொள்ளப்பட்டு (CMDA திட்டத்தின் கீழ்) 18 லட்ச ரூபாய் நீதி பெறப்பட்டு அண்மையில் கூடுதல் வகுப்பறை பள்ளி கட்டிடம் கட்டுவதற்கான பணிகள் துவக்க வைக்கப்பட்டது.

இந்த நிலையில் கட்டி முடிக்கப்பட்டு கூடுதல் வகுப்பறை பள்ளிகட்டிடத்தின் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர், ஒன்றிய கழக செயலாளர் டி.தேசிங்கு தலைமை தாங்கினார். தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி, ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரி காந்த், ஒன்றிய குழு உறுப்பினர் யமுனா ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி குட்டி, ஊராட்சி மன்ற துணை துணை தலைவர் ஆர்.செந்தாமரை ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு. நாசர் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடங்களைத் திறந்து வைத்து பள்ளி ஆசிரியர்களுக்கு மாணவர்களுக்கும் இனிப்புகள் வழங்கி பள்ளியில் உள்ள எழுதும் பலகையில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி வாழ்க என துவக்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து அப்பள்ளி வளாகத்தில் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதிலிருந்து 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம் அமைக்க பணியும் பெரி அர்பன் திட்டத்தின் கீழ் 58 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் நடுகுத்தகை ஊராட்சியில் உள்ள தென்றல் நகர், ஜெய லட்சுமி நகர் பகுதியில் சாலை அமைக்க பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இதன் முன்னதாக திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அப்பள்ளியில் மாணவ - மாணவியர்களுக்கும், குழந்தைகளுக்கும் கல்வி உபகரண பொருட்களை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. நோட் புத்தகம் எழுதுகோல் உள்ளிட்ட பல்வேறு கல்வி உபகரண பொருட்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

இதில் மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுகுழு உறுப்பினர் ஜி.விமல்வர்ஷன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.மோகன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.தியாகராஜன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜி.சி.சி. கருணாநிதி, மா.செ. ராஜேஷ், நிர்வாகிகள் நெமிலி சுரேஷ்குமார், ஜெ. சாக்ரடீஸ், எம்.குணசேகரன், பா.கந்தன், இ.வி.பி.பிரதீப், வார்டு செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், உதயா, இ.ஏ.சந்திரன், நவமணி ராஜேஷ், சூரியாகுமார், விஜயகுமார், ரமேஷ் பக்தவச்சலம், சாந்தகுமாரி, எஸ்.சுதர்சனம், பட்டாணி கார்த்திக், ரோசன், ஆதேஷ், நவீன் உள்பட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# நடப்பாண்டில் 3000 புதிய பேருந்துகள்!

## போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேட்டி!

சிவகங்கை, மார்ச் 11-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் ரூபாய் 2 கோடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மோட்டார் வாகன பகுதி அலுவலகத்தை திறந்து வைத்த அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

தமிழகத்தில் காரைக்குடி ராமநாதபுரம் தென்காசி உட்பட பல்வேறு இடங்களில் புதிதாக மோட்டார் வாகன அலுவலகங்கள் முதல்வர் உத்திரவின்பேரில் கட்டப்பட்டுள்ளது. அந்த கட்டிடங்கள் தற்பொழுது திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜெர்மன் நாட்டிலிருந்து 2200 பேருந்துகள் மொத்தம் 4200 புதிய பேருந்து வாங்க டெண்டர் விடப்பட்டது. அதில் முதல் கட்டமாக 100 பேருந்து சென்னை மாநகரில் முதல்வரால் துவக்கி வைக்கப்பட்டது.

அதுபோல் பல்வேறு கோட்டங்களில் புதிதாக பேருந்துகள் இயக்கப்பட்டது.

இந்த நிதிநிலை ஆண்டில் 3000 புதிய பேருந்துகள் வாங்க முதல்வர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

மொத்தம் 7200 புதிய பேருந்துகள் வாங்கப்பட உள்ளது. படிப்படியாக மாநிலம் முழுவதும் புதிய பேருந்துகள் இயக்கப்படும். பழைய பேருந்துகள் விரைவில் மாற்றப்பட உள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த 10 ஆண்டுகளில் புதிதாக பேருந்துகள் வாங்கப்பட வில்லை. டிரைவர் ஓட்டுநர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.

ஏர்ஹாரன்கள் அதிக அளவில் இருப்பதாக கூறப்படுகிறது. இது குறித்து துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் சீர்குலைந்திருந்த போக்குவரத்துதுறை முதல்வர் உத்தரவின் பேரில் தற்போது சீர் செய்யப்பட்டு வருகின்றது. விரைவில் நிலைமை சீராகும். அப்பொழுது



அனைத்து வழித்தடங்களிலும் புதிய பஸ்கள் விடப்படும்.

இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் கூறினார்.

பேட்டியின்போது கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் உடன் இருந்தார்கள்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 148வது வட்டத்தில் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மேட்டுக்குப்பம் நெடுஞ்சாலையில் சி.இராஜேந்திரன் மற்றும் எஸ்.திருநாவுக்கரசு ஆகியோரது ஏற்பாட்டில் வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ். ரமேஷ்ராஜ் தலைமையில் 1000 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அசை உணவுவினை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி வழங்குகினார்.உடன் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஏ.விஜயராஜ் ஏற்பாட்டில் தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கழக வர்த்தக அணிச் செயலாளர் காசிமுத்து மாணிக்கம் ஆலோசனைப்படி, மார்ச் 1 ல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான கிட் பொருட்களை திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி. வழங்கினார். உடன் கமலா செழியன் எம்.சி, ரவி ராஜ்குமார், க.வே.மோகன், ஐ.சி.எப்.வ.சங்கர், கே.ஜி.செந்தில்குமார், டி.சம்மந்தன், மு.மோகன், வே.சௌந்தரராஜன், அமரேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களை நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, கடந்தாண்டு ஜுலை மாதம் முதல் அவர்கள் மேற்கொண்டு வரும் ஒவ்வொரு பணிகளையும் நேரில் கேட்டறிந்தார். மேலும் கழக நிகழ்ச்சிகள் இளைஞரணிப் பணிகளை மினிட் புத்தகங்கள் செய்தித்தாள்களில் வெளியான செய்திகள் புகைப்படங்கள் மூலம் விளக்கமாக எடுத்துக்கூறிய இளைஞரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களிடம், தேர்தலுக்கான பணிகளை முழுவீச்சில் செய்திட அறிவுறுத்தினார்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களை நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, கடந்தாண்டு ஜுலை மாதம் முதல் அவர்கள் மேற்கொண்டு வரும் ஒவ்வொரு பணிகளையும் நேரில் கேட்டறிந்தார். மேலும் கழக நிகழ்ச்சிகள் இளைஞரணிப் பணிகளை மினிட் புத்தகங்கள் செய்தித்தாள்களில் வெளியான செய்திகள் புகைப்படங்கள் மூலம் விளக்கமாக எடுத்துக்கூறிய இளைஞரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களிடம், தேர்தலுக்கான பணிகளை முழுவீச்சில் செய்திட அறிவுறுத்தினார்.

### இரா.பாலன் தலைமை! ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. - வ.பெ.சுரேஷ் முன்னிலை! இராயபுரம்

# 48வது வட்டத்தில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்! தமிழ் க.அமுதரசன் சிறப்புரை!

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி. - தா .இளைய அருணா - ந.மனோகரன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 11-

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி, 48 வது வட்டக் கழகம் சார்பில் மார்ச்1 மக்கள் முதல்வரின் மனித நேய திருநாள், திராவிட மாடல் ஆட்சி சாதனை விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் இன்று ( 11.03.2024 - திங்கட்கிழமை) மாலை 6 மணியளவில் சோலையப்பன் தெரு, இம்பால ஹோட்டல் அருகில் நடை பெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வட்ட கழக செயலாளர் இரா. பாலன் தலைமை வகிக்கிறார்.

ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., ந.மனோகரன், வ.பெ.சுரேஷ், ரா.செந்தில் குமார், நேதாஜி யூ.கணேசன், வி.விஜயலஷ்மி விஜய குமார், கு.ரமேஷ், ரெயின்போ என்.விஜயகுமார், எஸ்.ரமேஷ், இரா. பொன்முடி, எம்.கே.இஸ்மாயில், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், எஸ்.யுவராஜ், ந.குமார், என்.வேதா, ஆர். வி.லட்சுமி வேலு, எம்.ரவி எஸ்.புகழேந்தி கொரியர் பி.முருகன் பாலாலட்சுமணன் ஜெ.கௌரீஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கோ.நித்தியானந்தம், ந.மணிமாறன், என். ஹயாத்பாஷா, எஸ்.தங்க வாசுகி, ரவிச்சந்திரன், பாபா, ஜி.சீனிவாசன், சி.சின்னராஜ், கே.குணசேகரன், சுவீஸ்.ஆர்.இளையராஜா, வி.சுந்தரி, க. சாமுண்டீஸ்வரி, ந.சூர்யா, ஏ.சிதம்பரம், ஆர்.கணேசன், டி.என்.சீனிவாசன், குமார், கு.எல்லன், எஸ். ஜானகிராமன், கோபி, இ.துரை, இ.குணா, எல். ராஜா, ஆர்.ரஜினி, ஏ.பாபு பாய், எச்.ரிஸ்வான், கே. பாலாஜி, எம்.மோகன், டி. ரகுபதி, ஜி.சுரேஷ், கே.சிவா, ஆர்.விஜி, ஜி. விநாயகம், எஸ்.தேவேந்திரன், சி.மாதவன், ஆர். செல்வம், பி.வி.சரத், பி.வி. தயாளன், ரபியுதின், ஜி.சந்தானம், ஜெ.சீனிவாசன், வேலு, ஜி.கணேசன், ஏ.சுப்பிரமணி, பி.கோபால், பி.பிரவீன், எம்.கந்தா, சி. கார்த்திக், கோ. இளையராஜா, பி.ஜனார்தனன், மணி, ஏ.திருப்பதி, கே. மனோஜ்குமார், எஸ். லோகேஷ், சேகர், பா. அஜித், டி.மோகன், ஆர். பாபு, இரா.தமிழரசன், பி.ஆமோஷ், கோகுல், டி. ரமேஷ், சி.கந்தன், மு. கவிதா, அலிம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., கழக மாணவர் அணி துணைச்செயலாளர் தமிழ்.க.அமுதரசன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தா.இளைய அருணா, இராயபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் என்.நவீன்,பி.டி. பாண்டிச்செல்வம், இரா. நரேந்திரன், இரா.கருணாநிதி, ஆர்.வெற்றிவீரன், மு.கோபி, க.நாகம்மை, கமலக்கண்ணன்,

வி.தயாளன், நா.சண்முகம், கி. ராஜேந்திரன், வே.சிவகுமார், எல். அருளரசன், க.கோவிந்தசாமி, வெ.சு.சத்தியநாராயணன், ஜெ.காணிக்கை நாதன், எம்.தீனதயாளன், டி.சுரேஷ், கார்த்திக் செங்குட்டுவன், ஏ.டி.மணி, ஏ. ரமேஷ்பாபு, மதன், பி. சோமசுந்தரமூர்த்தி, பா.வேளாங்கன்னி, கீதாசுரேஷ், த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், லோ. மோகன், மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

என்.சிவகுமார், பல்சர் பி.பாலாஜி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மேயர் பிரியா ராஜன், ஓ.ஏ.நாகலிங்கம், பரிதி இளம் சுருதி, சொ.வேலு, வி.சுதாகர், டி.லோகேஷ், சரிதா மகேஷ்குமார், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், புரசை ஜி.தாமோதரன், கோ.நந்தீஸ்வரன், பா.ஜெகதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். 78 வது வட்டக் கழகச் செயலாளர் சு.மனோகர் நன்றி கூறினார்.





நாள்
11.03.2024
இடம்
தருமபுரி மாவட்டம்.
எல்லா மாவட்டங்களுக்கும்
எல்லா பகுதி மக்களுக்கும்
சமச்சீரான வளர்ச்சியை வழங்கி
எல்லோருக்கும் எல்லாம் தரும்
எங்கள் திராவிட மாடல் முதல்வரே!
ARASU ARTS
தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்
தமிழ் மக்களின் நாயகரே!
வருக! வருக!!
அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சர்
ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர்
தே.மதியழகன் எம்.எல்.ஏ
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர்
கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மகளிர் மேம்பாட்டிற்காக செயல்படுத்துகின்ற திட்டங்கள் பாராட்டுக்குரியது!

## மக்களை ஏமாளிகளாக நினைத்து அறிவிப்புகளை வெளியிட்டு வருவதா?

# நாடாளுமன்றத் தேர்தலில் மோடிக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்!

## சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற மனிதநேய திருவிழாவில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் உறுதி!



சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி தி.மு.க 108 (அ) வட்டம் சார்பில், மார்ச்– 1 மக்கள் முதல்வ ரின் மனிதநேயத் திருநாள் ஒன்றியத்தின் முதன்மை ! தமிழ்நிலத்தின் புதுமை ! எனும் தலைமைப்பில் புகழரங்கம் சூரியச் சுடர்–60–வது நிகழ்ச்சி நேற்று முன்தினம் மலையாள கிளப் ஆடிட்டோரியம் சேத்துப்பட்டில் நடைபெற்றது. கே.எஸ்.எம். நாதன் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலையில், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப. சிதம்பரம் சிறப்புரையாற்றினார். மற்றும் ஜி. விஸ்வநாதன் (வி.ஐ. டி பல்கலைக்கழகம்), சு.ப. வீரபாண்டியன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர்) – (சமூக நீதி கண்காணிப்புக்குழு தலைவர்) அஜய் ரத்னம் (திரைப்பட நடிகர்) ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் வி. சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன்,புனிதவதி எத்திராசன்.டி லோகேஷ்.வே வாசு. துலுக்கானம் பா.ஸ்ரீராமலு, இராஜேஸ்வரி ஸ்ரீதர், ஆர். நிர்மலா தேவி, பரிதிஇளம் சுரிதி, எஸ் ரசூல், டிவி வேலு, எம் மலர்மாறன், கே அன்னபூரணி, எஸ் ஜெகதீசன், வி விஜயகுமார் .எஸ் டால்பின் ஹரி , இ மொய்தீன், வான்மதி கதிரவன் உள்பட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் ,கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பாகமுகவர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர் எல்.சுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

சென்னை,மார்ச்.12–

**“மக்களை ஏமாளிகளாக நினைத்து அறிவிப்புகளை வெளியிட்டு வரும் பிரதமர் மோடிக்கு நாடளுமன்றத் தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர்” என்று முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற மனிதநேய திருவிழாவில் உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

விழாவில் மேனாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஆற்றிய உரை வருமாறு:–

இன்றைய கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சருடைய பிறந்த நாள் மார்ச் மாதம் முதல் தேதி. அன்றே வர வேண்டும் என்று அமைச்சர் சேகர்பாபு அவர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால், கட்சிப் பணிகள் இருந்ததால், நான் ஏறத்தாழ நான்கு வாரங்களுக்கு தமிழ்நாட்டிற்கு வரவில்லை. டில்லியிலேயே பணிகள் இருந்தன. ஆகவே, மார்ச் முதல் தேதியன்று வர முடியாது; பின்னொரு நாளில் வருகிறேன் என்று சொன்னேன். என்னை அழைத்து இந்தத் திருவிழாவில், என்னையும் பங்கேற்க வைத்த அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இந்தியா கூட்டணி: முதல் மாநிலம் தமிழ்நாடு தான்!

அண்மையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நான் கொஞ்சம் அலசி பார்த்தேன். கடந்த 15, 20 நாள்களில் நடந்த நிகழ்ச்சிகள் ஒருவகையில் மகிழ்ச்சியைத் தருகிறது. இன்னொரு வகையில் அச்சத்தைத் தருகிறது.

மிகமிக மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், ‘இந்தியா கூட்டணி’ முழுமை பெற்று, உருவம் பெற்று, கையெழுத்தான முதல் மாநிலம் தமிழ்நாடுதான்.

பாண்டிச்சேரி உள்பட நான்கு இடங்களில் ‘இந்தியா கூட்டணி’ – அதில் அங்கம் வகிக்கக் கூடிய கட்சிகள் எத்தனை இடங்களில் போட்டியிடப் போகின்றன என்பது அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டு விட்டது.

காங்கிரஸ் கட்சி ஏறத்தாழ அரை மணிநேரத்திற்கு முன்னால், கையெழுத்திட்டு இருக்கிறது. தமிழ்நாட்டில் 9 இடங்கள்; புதுச்சேரியில் ஒரு இடம் என்று 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எந்த இடங்களை, எந்த எண்ணிக்கையில் தந்தார்களோ, அதையே உறுதிப் படுத்தி இருக்கிறார்கள். அதுபோலவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. அதுபோலவே, மற்ற கட்சிகளுக்கெல்லாம் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்றால், 2019–ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எந்த முடிவு வந்ததோ, அது மீண்டும் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.

### மகிழ்ச்சியான தொடக்கம் – பாராட்டு!

இதில் புதிய வரவாக கமலஹாசன் அவர்களும் வந்திருக்கிறார். அவருக்கு மாநிலங்களவை 2024 ஆம் ஆண்டு ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் கமலஹாசன் அவர்கள் சுற்றுப்பயணம் செய்து, இந்தியா கூட்டணிக்குப் பிரச்சாரம் செய்வார் என்று எழுதி, கையெழுத்திடப்பட்டு இருக்கிறது. ஆக, எல்லா வகையிலும், மகிழ்ச்சியான தொடக்கம் இந்தக் கூட்டம் தொடங்கும்பொழுது ஒரு குறை இருந்தது; கையெழுத்தாகுமா, ஆகாதா? என்று. ஆனால், கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுதே, கையெழுத்தாகி விட்டது. அதற்காக என்னுடைய மிகுந்த மகிழ்ச்சியை, பாராட்டை எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### முதல்வரின் நிதானத்தை பாராட்டுகிறேன்!

இந்தக் கையெழுத்துகள் எல்லாம் முதலமைச்சருடைய உறுதி இல்லாமல் நடந்திருக்க முடியாது. அவர் பேசுவதை நிதானமாகப் பேசுகிறார்; எழுதும்போது நிதானமாக எழுதுகிறார்.

அந்த நிதானத்தைப் பலர், தயக்கம் என்று தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். குழப்பம் என்று சிலர் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். அந்த நிதானம் என்பது தயக்கமும் அல்ல; குழப்பமும் அல்ல. அந்த நிதானம் என்பது, பயணத்தினுடைய முடிவு எது என்று எனக்குத் தெரியும். அந்தப் பயணத்தினுடைய முடிவை எட்டுவதற்கு, பயணம் செய்யும்பொழுது, யாரும் தடுமாறிவிடக் கூடாது என்பதற்கான நிதானம். யாரும் தடுமாறி, தள்ளாடி விழுந்துவிடக் கூடாது என்பதற்காக அந்த நிதானம். யாரும் பாதை மாறி போய்விடக் கூடாது என்பதற்காக அந்த நிதானம். முதலமைச்சருடைய நிதானத்தை நான் பாராட்டுகிறேன்.

அந்த நிதானமானப் போக்கை, கடந்த 15, 20 நாள்களில், அவர் உறுதியாகக் கடைப்பிடிப்பதால்தான், இந்த வெற்றிச் செய்திகள் நமக்கு வந்திருக்கின்றன.

### இந்தியாவில் மனிதநேயம் வளர்ந்திருக்கிறதா?

இது மனிதநேயத் திருவிழா! அருமை நண்பர் சுப. வீரபாண்டியன் அவர்களின் உரையை நான் பல முறை கேட்டிருக்கிறேன். எப்பொழுதுமே நம்மை சிந்திக்கும் வகையில் பேச வைப்பார்.

இது மனிதநேயம்! மனிதநேயம் என்றால் என்ன? மனிதன், மனிதனை நேசிக்க வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளில் மனிதநேயம் இந்தியாவில் வளர்ந்திருக்கிறதா? குறைந்திருக்கிறதா? என்ற கேள்வியைக் கேட்டுப்பாருங்கள்.

நேற்று சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி மேம்பாடு நிதியின் கீழ், அய்மாஸ் விளக்கை சில இடங்களில் பொருத்தியிருக்கிறோம். ஓர் ஊரில் இரண்டு அய்மாஸ் விளக்குகளைப் பொருத்துகிறார்கள். ஒன்று, கீழப்பள்ளிவாசல் தெரு; இன்னொன்று, பெருமாள் கோவில் தெரு.

கீழப்பள்ளி வாசல் தெருவில் அய்மாஸ் விளக்கைப் பொருத்தியபொழுது, இஸ்லாமியர்களும் இருந்தார்கள், இந்துக்களும் இருந்தார்கள், எல்லா சமுதாய மக்களும் இருந்தார்கள். அது ஒரு சிறிய தெருதான், நெரிசலாகக் கூட்டம் இருந்தது. யார் முஸ்லிம்? யார் இந்து? என்றெல்லாம் பிரித்துப் பார்க்க முடியாது. எல்லோரும் இருந்தார்கள். அதேபோன்று, பெருமாள் கோவில் தெருவில், அந்த விளக்கைப் பொருத்தியபொழுதும் எல்லோரும் இருந்தார்கள். அந்த மனிதநேயம்தான், தமிழ்நாட்டை இத்தனை நாள்களாகக் காத்து வருகிறது.

நான் வருத்தத்தோடு சொல்கிறேன், இதே நிகழ்வு, வடநாட்டில் சில மாநிலங்களில் நடந்திருந்தால், ஒன்று, கீழப்பள்ளி வாசலில் அய்மாஸ் இருக்காது. தப்பித்தவறி இஸ்லாமியர்கள் வாழும் பகுதியில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றால், இந்துக்கள் வரமாட்டார்கள். அதேபோல, இந்துக்கள் பகுதியில் ஒரு நிகழ்ச்சி நடந்தால், இஸ்லாமியர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

### வட மாநிலங்களில் அழிக்கப்பட்ட மனிதநேயம்!

இப்படி இருந்த வடநாடு அல்ல; அலகாபாத், லக்னா போன்ற நகரங்கள் கூட்டுக் கலாச்சாரம் என்று பெருமைப்பட்ட நகரங்கள். இந்துஸ்தானி மொழியே, இந்தி, உருது கலந்த மொழிதான். சுதந்திர இந்தியாவில், எது தேசிய மொழியாக இருக்கவேண்டும் என்று கேட்ட பொழுது, மகாத்மா காந்தி அவர்கள், இந்துஸ்தானி மொழி இருக்கவேண்டும் என்று சொன்னார். காரணம், இந்தி, உருது இரண்டும் கலந்த மொழிதான், அந்த மக்கள் பேசுகின்ற மொழி. அந்த அளவிற்கு மனிதநேயம் இருந்த இந்தியாவில், வட மாநிலங்களில், இன்றைக்கு மனிதநேயம் முழுக்கமுழுக்க அழிந்து விட்டது.

## ஓய்ந்து உட்காராமல் உழைத்துக் கொண்டிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

**தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 12 லட்சத்து 91 ஆயிரம் குழுக்கள் இருக்கின்றன. இதில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட புதிய குழுக்கள், ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழுக்கள்.**

**மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபொழுது, ஏற்கெனவே தான் 10 லட்சம் குழுக்கள் இருக்கிறதே, போதாதா? என்று ஓய்ந்து உட்காராமல், இன்னும் ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழுக்களை உருவாக்கியிருக்கிறார், அதற்காக அவரை நான் பாராட்டுகிறேன்.**

மனிதநேயம் மிஞ்சியிருப்பது, தென்னாட்டில்தான். மேற்கு மாநிலங்கள், கிழக்கு மாநிலங்களில் மனிதநேயம் இருக்கிறது; ஆனால், மனிதநேயம் அங்கே கொஞ்சம் தடுமாறிக் கொண்டிருக்கின்றது. மனிதநேயத்திற்கு எதிராக மிகப்பெரிய தாக்குதல்கள் நடைபெறுகின்றன. அசாம், மேற்குவங்காளம், மகாராட்டிரா இங்கெல்லாம் மனிதநேயம் நாள்தோறும் அழிக்கப்படுகிறது; அழிக்க முயற்சி செய்கிறார்கள். தென்னாட்டில் நல்லவேளையாக மனிதநேயம் தொடர்ந்து இருக்கிறது. இந்த மனிதநேயத்திற்கு மிகப்பெரிய ஆபத்து வந்திருக்கிறது என்று நான் அஞ்சுகிறேன். ஆனால், நம்முடைய கூட்டணி வலிமையாக இருந்தால், நம்முடைய கூட்டணி வெற்றிகரமான கூட்டணியாக, தேர்தலுக்குப் பிறகு மீண்டும் எழும்பிவிட்டால், மனிதநேயத்தைத் தமிழ்நாட்டிலிருந்து அழிக்கவே முடியாது, அழிக்கவே விடக் கூடாது.

### காந்தியும் – கோட்சேவும் ஒன்றா?

பல உதாரணங்களை என்னால் சொல்ல முடியும். நேற்று ஒரு உதாரணம் கல்கத்தா உயர்நீதிமன்றத்திலிருந்து ஒரு நீதிபதி ராஜினாமா செய்திருக்கிறார். அவருக்கு 6 மாதம் பதவிக் காலம் இருக்கிறது. ஆனால், பதவியிலிருந்து விலகும்பொழுது, அவர் சொன்னது சர்ச்சைக்கு ஆளாகியிருக்கிறது.

அந்த நீதிபதியிடம், வங்காள தொலைக்காட்சிக்காக எடுக்கப்பட்ட ஒரு பேட்டியில், காந்தியா? கோட்சேவா? எதைத் தேர்ந்தெடுப்பீர்கள் என்று.

அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமே கோட்சே என்று சொல்லியிருந்தால்கூட, பரவாயில்லை, இவர் கடவுள் மன்னிப்பார் எனலாம். அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? இதற்கு நான் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது; சிந்தித்துத்தான் பதில் சொல்வேன். காந்தியா? கோட்சேவா? என்று கேட்டதற்கு, சிந்தித்துப் பதில் சொல்ல வேண்டுமா? என்ன சிந்திக்கிறார் அவர்.

காந்தியை, கோட்சே கொன்றானா? அல்லது கோட்சே குண்டுவீசும்போது காந்தி இடையில் புகுந்து விட்டாரா என்று சிந்திக்கிறாரா?

காந்தியா? கோட்சேவா? என்பதற்கு ஒரு உச்சநீதி மன்றத்திலிருந்து பதவி விலகிய நீதிபதி, நான் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது; சிந்தித்துத்தான் பதில் சொல்வேன் என்று சொன்னால், காந்தியும் கோட்சேவும் ஒன்றா? பூவா, தலையா? போட்டுப் பார்க்கப் போகிறாரா? அந்த அளவிற்கு இந்த நாட்டில் நச்சுக் கருத்துகள் தோன்றியிருக்கின்றன. இதையெல்லாம் முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால், காந்தியா? கோட்சேவா? என்கிற கேள்வியே எழுந்திருக்காது; அப்படியெல்லாம் கேட்கவேண்டும் என்று யாருக்கும் தோன்றியிருக்காது. அந்த மாதிரி யாராவது கேள்வி கேட்டால், இவ்வளவு பெரிய பாவியாக இருக்கிறீர்களே என்று கேட்பார்கள். ஆனால், இன்றைக்கு அந்தக் கேள்வியையும் கேட்கிறார்கள்; அதற்கு ஒருவர் பதிலையும் சொல்கிறார், நான் சிந்தித்துத்தான் பதில் சொல்வேன் என்று. இதுபோன்ற எத்தனையோ நிகழ்ச்சியை, இந்த நாடு பார்த்து வருகிறது; அதுதான் எனக்கு அச்சம் தருகிறது.

### அச்சம் மக்களுக்கு ஏன் வந்தது?

இந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடந்தால், இந்தியாவில் இன்றைக்கு இருக்கின்ற 170 கோடி மக்கள் ஒரு நாட்டு மக்களாக இருக்க முடியும்? இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களும், இஸ்லாமிய மக்களும் வடநாடுகளில், சிறிய கிராமங்களிலிருந்து வெளியேறி இருக்கிறார்கள். ஏன்? 10, 15 குடும்பம் இஸ்லாமிய குடும்பம்; 20 குடும்பம் தாழ்த்தப்பட்ட குடும்பம் இருக்கிறது. எங்களுக்குப் பாதுகாப்பு கிடையாது என்று, நகரங்களுக்குப் போகின்றனர். கான்பூர், லக்னோ, அலகாபாத் நகரங்களுக்குப் போகிறார்கள்.

காரணம், அங்கேயெல்லாம் பல லட்சம் இஸ்லாமிய மக்கள் இருக்கிறார்கள்; அவர்களோடு சேர்ந்து இருந்தால், நமக்குப் பாதுகாப்பு என்று நினைக்கிறார்கள். இந்த அச்சம் ஏன் வந்தது? இந்த அச்சம் வரலாமா? இந்தியாவில் உள்ள ஒரு குடிமகனுக்கு இந்த அச்சம் வரலாமா?.

நாம் ஒற்றைக் குடும்பமாக இருந்தாலும், நாம் பாதுகாப்பாக இருப்பேன் என்ற நம்பிக்கை அல்லவா வரவேண்டும். அந்த நம்பிக்கை இன்றைக்கு அழிந்து போகிறதே! கொஞ்சம் கொஞ்சமாக அந்த நம்பிக்கை அழிந்துபோனால், எப்படி மக்கள் ஒன்றாக இருக்க முடியும்? எப்படி ஒன்றாக வாழ முடியும்?இதையெல்லாம் பார்க்கும்பொழுதுதான் மனிதநேயத்தினுடைய முக்கியத்துவம் புரியும்.

### மனித நேயத்தை வளர்ப்போம்!

நான் பல நேரங்களில் வேடிக்கையாக சொல்லியிருக்கிறேன், இது ஒன்றும் கற்பனைக்கு எட்டாத கருத்து அல்ல. ஒரு மருத்துவமனையில், பிரசவ பிரிவில், இரண்டு தாய்க்கு ஒரே நேரத்தில் குழந்தை பிறந்தது என்றால், தப்பித்தவறி குழந்தைகள் மாறிவிட்டால், ஒரு முஸ்லிம் தாய், ஒரு இந்து தாய் குழந்தைகள் மாறி விட்டால், இந்தக் குழந்தை முஸ்லிமாக வளரும்; அந்தக் குழந்தை இந்துவாக வளரும்.

இப்பொழுதுதான் டி.என்.ஏ. பரிசோதனை எல்லாம் வந்திருக்கிறது. அந்தக் காலத்தில் டி.என்.ஏ. பரிசோதனை கிடையாது. அதனால், பிறக்கும்பொழுதே ஒருவர் தலையில், மகன், ஜாதியெல்லாம் எழுதி வைக்கவில்லை. தாய் தந்தை என்ன மதத்தைப் பின்பற்றுகிறார்களோ, அதைத்தான் குழந்தைகள் பின்பற்றுகின்றனர். 18 வயதில் ஓட்டு, 18 வயதில் உன்னுடைய மதத்தை நீ தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும் என்றா விதி இருக்கிறது. நியாயமாக அப்படித்தான் விதி இருக்கவேண்டும். 18 வயதில்தான் எனக்கு வாக்குரிமை; எனக்கு அறிவு வளர்ந்திருக்கிறது என்று அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. ஆக, 18 வயதில், என்னுடைய மதத்தை, என்னுடைய ஜாதியை நான் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும் என்றா, போராட முடியும்? இந்தப் பிளவுகள் எல்லாம், மனிதன் உருவாக்கிய பிளவுகள். இதே மாதிரிதான் பல நாடுகளில் இருக்கின்றன.

அமெரிக்காவில், கருப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் 200 ஆண்டுகளாகப் போர் நடக்கிறது. அய்ரோப்பாவில், யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அதற்குமுன்னாலேயே போர் நடக்கிறது. ஆப்பிரிக்காவில், இன்றுகூட இந்தக் கூட்டம் அந்தக் கூட்டம் என்று போர் நடக்கிறது. இருவரும் கருப்பர்கள்தான். இருவர் உடலிலும் ஓடுவது சிவப்பு ரத்தம்தான்.

ஆனால், இந்தக் கருப்பு இன மக்கள் ஒரு கூட்டம் என்றும், அந்தக் கருப்பு இன மக்கள் ஒரு கூட்டம் என்று பிரிந்து சண்டை போடுகிறார்கள். இரண்டு நாடுகளுக்கிடையே சண்டை நடக்கிறது. ஒரு நாட்டில், இரண்டு பிரிவினருக்கிடையே சண்டை நடக்கிறது.

ஆக, மனிதநேயம்தான் இருக்கிறதே என்று நினைக்காதீர்கள். மனிதநேயத்தைப் பாதுகாக்க வேண்டும். மனிதநேயத்தை வளர்க்கவேண்டும். மனிதநேயத்திற்கு மீறிய செயல்களை எதிர்க்கவேண்டும்; எழுதவேண்டும், பேசவேண்டும். மனிதநேயத்தை சிதைக்கின்ற சக்திகள் அதிகம். மனிதநேயத்தை பாதுகாக்கும் சக்திகளாக நம் மக்கள் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

### மகளிர் மேம்பாட்டிற்காக தி.மு.கழக அரசின் திட்டங்கள்!

இந்த மனிதநேயத்தின் ஒரு பகுதிதான் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை என்பது. ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை கிடையாது என்பார்கள். இன்றைக்கும் முழுக்க முழுக்க கிடையாது. இதை நம்புகிறீர்கள் என்றால், சம உரிமை இருக்கிறது என்று நினைத்தீர்கள் என்றால், உங்களுக்காக நான் அனுதாபப்படுகிறேன். சம உரிமை கிடையாது. சம உரிமையைப் போராடித்தான் பெறவேண்டும். அப்படிப் போராடும்பொழுது, அரசு துணை நிற்கவேண்டும்; அரசை நடத்துகின்ற கட்சி பெரும் துணையாக இருக்க வேண்டும். அதுதான், கட்சிக்கு கட்சி வேறுபடும். சில கட்சிகள், ஆணும் பெண்ணும் சமம் இல்லை என்று சொல்வார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் பல தலைவர்கள், பெண்களுடைய கடமை வீட்டைப் பாதுகாப்பது, வீட்டு வேலைகளைச் செய்வது, குடும்பத்தைக் காப்பாற்றுவது என்று பகிரங்கமாகப் பேசுகிறார்கள். அவர்களுக்கு ஆண் பெண் சமம் என்ற கருத்தில் அவர்கள் உடன்படவில்லை. சில கட்சிகள், பேசும், ஆனால், செயல்படாது. சில கட்சிகள்தான் ஆணும் பெண்ணும் சமம்; அதற்காக நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதற்காகத் திட்டங்களைப் போடவேண்டும்; அதற்காகச் சட்டங்களைப் போடவேண்டும் என்று சொல்லும். அதற்கான காரியங்களைச் செய்வது சில கட்சிகள் தான்.

**அண்மைக்காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக அரசு, மகளிர் மேம்பாட்டிற்காக செய்த காரியங்கள் எல்லாம், எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், திருப்தியையும் தந்திருக்கின்றன.**

### ரூ.75 ஆயிரம் கோடி கடன் வழங்கல்!

**தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 12 லட்சத்து 91 ஆயிரம் குழுக்கள் இருக்கின்றன. இதில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட புதிய குழுக்கள், ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழுக்கள்.**

**மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபொழுது, ஏற்கெனவே தான் 10 லட்சம் குழுக்கள் இருக்கிறதே, போதாதா? என்று ஓய்ந்து உட்காராமல், இன்னும் ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழுக்களை உருவாக்கியிருக்கிறார், அதற்காக அவரை நான் பாராட்டுகிறேன்.**

**இந்தக் குழுக்களுக்கு இதுவரை 75 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது. 75 ஆயிரம் கோடி ரூபாய் என்பது ஒரு பெரிய தொகைதான். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், இது இரண்டு மடங்காக, நான்கு மடங்காக உயரவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.**

### வீட்டுப் பெண்கள் விடுதலை பெற உரிமைத்தொகை!

**நண்பர் சுப.வீரபாண்டியன் குறிப்பிட்டார், புதுமைப் பெண் திட்டம், மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என்று பல புரட்சிகரமான திட்டங்களை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று. மாதம் ஆயிரம் ரூபாய் என்பது ஒரு சிறிய தொகையாகத் தெரியும். ஆனால், அது சிறிய தொகையல்ல. மாதம் ஆயிரம் ரூபாய் என்பது ஒரு வீட்டில் கண்ணுக்குத் தெரியாத கயிறால் கட்டிப் போட்டதிலிருந்து விடுதலை ஆயிரம் ரூபாய் என்பது வீட்டுப் பெண்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருகிற ஆயிரம் ரூபாய். நம்முடைய கைகளில் பணம் இருக்கிறது; நம்மால் ஓரிடத்திற்குப் போக முடியும்; ஒரு பொருளை வாங்க முடியும்; செலவழிக்க முடியும் என்பதே விடுதலை.**

**இந்த ஆயிரம் ரூபாயை, ஆயிரம் ரூபாயாகப் பார்க்காதீர்கள்; இந்த ஆயிரம் ரூபாய் என்பது உரிமைத் தொகை என்ன உரிமை? பல உரிமைகளைப் பெற்றுத் தருகின்ற உரிமைத் தொகை. இதையே உரிமை என்று நினைக்காதீர்கள்; இந்த உரிமையின் மூலமாக பல உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**நமக்குத் தேவையான புத்தகங்களை வாங்கிப் படிக்கலாம்; நமக்கு வேண்டும் என்கின்ற பொருள்களை வாங்கலாம். நம்முடைய குழந்தைக்கு நாம் விரும்பிய உடையை வாங்கலாம். தொகை சிறியதாக இருக்கலாம் ஆனால், அந்த உரிமைத் தொகையின் மூலமாக எத்தனை உரிமைகள் கிடைக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.**

**ஒரு கோடியே 15 லட்சம் குடும்பங்கள் பயனடைகின்றன. இதில் ஜாதியா பார்த்தார்கள்? மதமா பார்த்தார்கள்? கட்சியா பார்த்தார்கள்?**

**எல்லா ஜாதிப் பெண்களுக்கும் கிடைக்கிறது அல்லவா! எல்லா மதத்தைச் சார்ந்த பெண்களுக்கும் கிடைக்கிறது அல்லவா! அதுதான் வெற்றி! இதுதான் சமுதாயத்தைப் பிணைக்கும் மக்களை இணைக்கும்.**

### பெண்களுக்கு வாய்ப்பு இருந்தால் சாதிப்பார்கள்!

**ஒரு தாய் வயிற்று மக்கள்; தமிழ்நாட்டு மக்கள் தமிழர்கள் என்ற உணர்வை இணைக்கும். ஒரு கோடியே 15 லட்சம் குடும்பத் தலைவிகள் இன்றைக்கு ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள் அதை நான் பெருமையாக இங்கே சொல்கிறேன். அதனுடைய விளைவுகள் இப்பொழுதே தெரிகிறது. தொடர்ந்து பெண்களுக்காக இருந்த அரசுகள், தமிழ்நாட்டில் செய்த ஒவ்வொரு காரியத்தினுடைய பலன்களும் இப்பொழுதுதான் தெரிகிறது. சென்ற ஆண்டு குரூப்1 தேர்வு நடந்தது. அய்.ஏ.எஸ்.சிற்கு அடுத்த தேர்வு என்று பல பேர் விரும்புகின்ற தேர்வு. தமிழ்நாட்டில் குரூப்1 தேர்வில் 65 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; அதில் 40 பேர் பெண்கள். குரூப்2 தேர்வு இந்த ஆண்டு நடந்தது. முதல் ரேங்க் பெண்; இரண்டாவது ரேங்க் பெண்; மூன்றாவது ரேங்க் பெண்; நான்காவது ரேங்க் பெண். பதிமூன்றாம் ரேங்க் வரை பெண்கள்தான்.**

**இது எதைக் காட்டுகிறது? பெண்களுக்கு வாய்ப்பு, பெண்களுக்கு உரிமை, பெண்களுக்குச் சுதந்திரம், பெண்களுக்கு விடுதலை வந்தால், நிச்சயமாக ஆண்களுக்கு நிகராக எதையும் செய்ய முடியும் என்று காட்டுவார்கள்.**

இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. அதனை ஒப்புக்கொள்வதில் வெட்கமில்லை.

ராஜீவ் காந்தி அவர்கள், பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைக் கொண்டு வந்து, பிறகு பெண்களுக்கு ஒதுக்கீடு செய்தார். 33 சதவிகிதம் இருந்தது, பிறகு 50 சதவிகிதமாக ஆயிற்று. பல பெண்கள் பஞ்சாயத்துத் தலைவர்களாக, உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், அந்த நாற்காலிகளுக்குப் பின்னால், ஒரு ஆண் நின்று கொண்டிருப்பார். இல்லை என்று சொல்லவில்லை, நிச்சயம் இருந்தார்கள்.

இன்றைக்கு அது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்திருக்கிறது. ஏனென்றால், பெண்கள் நாங்களே நடத்த முடியும் என்று இன்றைக்கு உரிமையை வலியுறுத்துவதால், அன்றைக்குப் பின்னால் நின்ற மெய்க்காப்பாளர் வெளியே போயிருக்கிறார்கள்.

வடநாட்டில் பல மாநிலங்களில் இருக்கிறது. அதற்குப் பெயரே வைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவருக்குப் பெயர் பிரதானம் இது சமஸ்கிருத வார்த்தை. பஞ்சாயத்துத் தலைவர் பெண்ணாக இருந்தால், அவருக்குப் பின்னால் நிற்கின்ற மெய்க்காப்பாளருக்கும் பெயர் வைத்திருக்கிறார்கள்; பதிப்பிரதான் என்பதுதான் அது.

இன்றைக்கும் அது நடக்கிறது. ராஜஸ்தானில், பீகாரில், உத்தரப்பிரதேசத்தில் இதுபோன்ற நிலைமை இன்னும் இருக்கிறது. இன்னும் ஒரு 10 ஆண்டுகளில் அந்த நிலைமை மாறும் என்று நம்புகிறோம். ஆனால், பெண்கள் தங்களுக்கு சம உரிமை கிடைத்துவிட்டதாக நினைக்கக் கூடாது. சம உரிமை கிடைக்கத் தொடங்கியிருக்கிறது. இன்னும் நீண்ட பயணம் இருக்கிறது. அந்த நீண்ட பயணத்தை முடிக்கின்ற வரையில் ஓயக் கூடாது; ஓய்வெடுக்கக் கூடாது.

### கலைஞரின் கனவு இல்லம்!

கலைஞருடைய கனவு இல்லம் என்று நண்பர் சுப. வீரபாண்டியன் அவர்கள் குறிப்பிட்டார் இங்கே. அதை நான் பாராட்டுகிறேன்.

ஒரு லட்சம் வீடுகளைக் கட்டப் போகிறது தமிழ்நாடு அரசு. ஒரு வீட்டிற்கு மூன்றரை லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைய விலைவாசியில், மூன்றரை லட்சம் ரூபாயில் ஒரு சிறிய வீட்டைக் கட்டலாம். குறிப்பாக கிராமப் பகுதிகளில் கட்டலாம்.

அதற்காக 3 ஆயிரத்து 500 கோடி ரூபாயை முதலமைச்சர் ஒதுக்கியிருக்கிறார். 2 ஆயிரம் கிலோ மீட்டர் கிராமச் சாலைகள் மேம்பாட்டிற்காக ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார். 5 ஆயிரம் நீர் நிலைகளைப் புதுப்பிப்பதற்கு 500 கோடி ரூபாய். 4,457 நகர்ப்புறச் சாலைகளுக்கு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய்.

அடையாறு ஆற்றைத் தூய்மைப்படுத்துவதற்கு, கூடுவாஞ்சேரியிலிருந்து சைதாப்பேட்டைவரை ஆயிரத்து 500 கோடி ரூபாய். ஆயிரம் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கு ஆயிரம் கோடி ரூபாய். எப்படி பணத்தை செலவழிக்கவேண்டும் என்றால், இப்படித்தான் செலவழிக்கவேண்டும்.

### கட்டுமான வசதிகள்!

எப்படி பணத்தை செலவழிக்கக் கூடாது என்பதற்கு பல உதாரணங்களைச் சொல்ல முடியும். எப்படி பணத்தைச் செலவழிக்கவேண்டும் என்பதற்கு உதாரணம் இதுதான் கல்வி, மருத்துவம், சாலைகள், நீர்நிலைகள், தூய்மையான காற்று, தூய்மையான நீர், வீடு இவற்றிற்காக ஓர் அரசு செலவழிக்கவேண்டும். மற்றவற்றிற்காக செலவழிக்கவேண்டாம் என்று சொல்லவில்லை.

ஆனால், நம்முடைய முக்கியமான நோக்கம் என்னவென்றால், மனிதனுடைய ஆற்றல் வெளிப்படுவதற்கு, மனிதன் சுயமாக பல தொழில்களைத் தொடங்குவதற்கு, கண்டுபிடிப்புகளை செய்வதற்கு, இந்தக் கட்டுமானம் மிகவும் முக்கியம்.

தொடர்ச்சி 14–ஆம் பக்கம்

# முதல்வரின் மனிதநேயம்தான் தமிழ்நாட்டைக் காத்து வருகிறது!

## முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேச்சு! 13– ஆம் பக்கத் தொடர்ச்சி

அந்தக் கட்டுமானத்தில் தமிழ்நாடு அரசு மேலும் மேலும் அக்கறை காட்டுகிறது என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இதே பாதையில் தொடர்ந்து கட்டுமான வசதிகளிலே தமிழ்நாடு அரசு தொடர்ந்து அக்கறை காட்டவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**கோவில் நிலங்கள் மீட்பு: அமைச்சர் சேகர் பாபுக்கு பாராட்டு!**

இங்கே அமைச்சர் சேகர்பாபு அவர்கள், மனிதநேயத் திருவிழாவை நடத்துகிறார். மிகப்பெரிய மனிதநேய செயல் என்ன தெரியுமா? 6 ஆயிரத்து 809 ஏக்கர், 5 ஆயிரத்து 953 கோடியை மீட்டிருக்கிறாரே, அதுதான் உண்மையான மனிதநேயச் செயல். பராசக்தி திரைப்படத்தில் ஒரு வசனம் வரும். கோவில்கள் எல்லாம் கொள்ளையர்களின் கூடாரமாக மாறிவிட்டது என்று.

நான் கேட்கிறேன், யார் இந்த நிலங்களையெல்லாம் அபகரித்தார்கள்? வெளிநாட்டிலிருந்தா படையெடுத்து வந்து அபகரித்தார்கள்? அல்லது சுப.வீரபாண்டியன் போன்ற நாத்திகர்கள் அபகரித்தார்களா?

இதை கையாடியது, அபகரித்தது வெளிநாட்டுப் படையல்ல; உள்நாட்டு நாத்திகர்கள் அல்ல. ஆஸ்திகர்கள் அல்லவா அபகரித்தார்கள். நீங்கள் நாத்திகர்கள் கைகளிலிருந்து கோவிலை மீட்பதற்கு முன்பு ஆத்திகர்கள் கைகளிலிருந்து கோவிலை மீட்க வேண்டும். அதைத்தான் நம்முடைய அன்பிற்குரிய சேகர்பாபு அவர்கள் செய்கிறார்கள். நான் அவரை ஒவ்வொருமுறையும் பார்க்கும்பொழுது கேட்பேன், “இன்றைக்கு என்ன டோட்டல்” என்று. இன்றைக்கு வரைக்கும் 6 ஆயிரத்து 809 ஏக்கர்; 5 ஆயிரத்து 953 கோடி ரூபாய் என்று.

ஒரு சிறிய மாநிலத்தின் பட்ஜெட்டுக்கு ஈடானது இது. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், மதத்தின் பெயரால் நல்ல காரியமும் செய்யலாம்; மதத்தின் பெயரால் தவறான காரியங்களையும் செய்யலாம். அது மதத்தினுடைய குற்றம் அல்ல. மனிதனுடைய குற்றம் அது. மதத்தை நம்புபவர்கள் நம்பட்டும்; யார் வேண்டாம் என்கிறார்கள்.

சுப.வீரபாண்டியன் மிகத் தெளிவாகச் சொன்னார், “நான் மதத்தை நம்பவில்லை; ஆனால், நீங்கள் மதத்தை நம்பினால், நான் மதிக்கிறேன்” என்று.

**கடவுள் பற்றி கலைஞர் சொன்னது என்ன?**

கலைஞரிடம் ஒரு கேள்வி கேட்டார்கள், “நீங்கள் கடவுளை நம்புகிறீர்களா?” என்பது கேள்வி. அவருக்கே உரிய சாதுரியம், பளிச்சென்று பதில் சொன்னார் “நான் கடவுளை நம்புகிறேனா என்பது முக்கியமல்ல; கடவுள் என்னை நம்புகிறாரா என்பதுதான் முக்கியம்” என்று. ஆக, கடவுளை நம்புகிறவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன், “கடவுள் உங்களை நம்புகிறாரா?” கடவுளை நம்புகிறவர்கள்தானே, கோவில் நிலங்களை அபகரித்தார்கள்.

இப்பொழுது சேகர்பாபு வந்து அதனை மீட்க வேண்டும் என்று எழுதியிருக்கிறது அல்லவா! ஆக, கோவில்கள் தவறல்ல; மதத்தில் தவறில்லை. அதனைத் தவறாகப் பயன்படுத்துவதுதான் தவறு. இன்றைக்குக்கூட சில கிராமங்களில் உள்ள கோவில்களில் தாழ்த்தப்பட்ட சமுகத்தைச் சேர்ந்தவர்களை அனுமதிப்பது கிடையாது. அதனை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? ஏனென்றால், ஏற்றுக் கொள்ள முடியாது?

**2 ஆயிரம் ஆண்டு கலாச்சாரம்!**

இன்றைக்கு முகநூலில் ஒரு செய்தியைப் பார்த்தேன்; அது எந்த அளவிற்கு உண்மை என்று எனக்குத் தெரியவில்லை.

அந்தப் பெண்ணும், மாப்பிள்ளையும் நாங்கள் இந்துக்கள் என்று சொல்கிறார்கள். அந்தப் பெண்ணுக்கு கிறித்துவ பெயர் போன்று இருப்பதால், இந்துக் கோவிலில் கல்யாணம் செய்யக் கூடாது என்று தடுத்துவிட்டார்கள்.

அவர்கள் இருவரும் நாங்கள் இந்துக்கள் என்று எழுதிக் கொடுத்தார்கள். நாங்கள் இந்து மதத்தின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று.

என்னைப் பொறுத்தவரையில், கோவில்கள் என்பது, தமிழ்நாட்டுக் கோவில்கள் என்பது மிகப் பெரிய வரலாற்றுச் சொத்து. கலாச்சார சொத்து. கலாச்சார களஞ்சியம்.

தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியை, தமிழ்நாட்டினுடைய வரலாறையெல்லாம் முழுமையாகத் தெரிந்துகொள்ளவேண்டும் என்றால், கோவில்களில், கோவில்களில் உள்ள கல்வெட்டுகளில், கோவில்களின் தலபுராணங்களில்தான் தெரிந்து கொள்ளலாம்.

அந்த அளவிற்குக் கோவில்களை, அது கோவில் என்பதற்காக நான் மதிக்கிறேன். அந்தக் கோவில்களில்தான் 2 ஆயிரம் ஆண்டுகளுடைய வரலாறு அடங்கியிருக்கிறது. 2 ஆயிரம் ஆண்டுகளுடைய கலாச்சாரம் அடங்கியிருக்கிறது. அந்தக் கோவில்களைப் பாதுகாக்கவேண்டிய கடமை எல்லோரையும் சார்ந்தது. நாத்திகர்கள், ஆத்திகர்கள் ஆகிய எல்லோரையும் சார்ந்தது. அந்தக் கடமையை செவ்வனே செய்யக்கூடிய அருமை நண்பர் சேகர்பாபு கூட்டிய இந்த நிகழ்வில் கலந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**மக்கள் என்ன ஏமாளிகளா?**

தேர்தல் வருகிறது அதற்குக் கட்டியம் கூறுவதுபோன்று, சமையல் கியாஸ் சிலிண்டருக்கு 100 ரூபாய் குறைத்திருக்கிறார் பிரதமர் மோடி என்று சுப.வீரபாண்டியன் சொன்னார்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு பாலைவனத்தில் போகின்ற ஒட்டகத்தினுடைய முதுகில், மிகப்பெரிய சுமையை ஏற்றி வைத்தார்களாம். அப்படி ஏற்றி வைத்துவிட்டு, ஒரு கம்பை மட்டும் எடுத்து, அந்த ஒட்டகம் பார்க்கும்படியாக ஒட்டகத்தின் முன்பு போடுவார்களாம்; அந்த ஒட்டகம் நம்புமாம்; அடடே, பெரிய சுமையை இறக்கி வைத்துவிட்டார்கள் என்று.

அதுபோன்று, 700 ரூபாய் உயர்த்திவிட்டு, 100 ரூபாயைக் குறைக்கிறீர்கள். 700 ரூபாய் உயர்த்திவிட்டு, 100 ரூபாய் குறைத்தால், இங்கே இருக்கின்றவர்கள் எல்லாம் ஏமாளிகளா? நான் கேட்கிறேன், 700 ரூபாய் விலையை உயர்த்திவிட்டு, 100 ரூபாய் குறைத்தால், நீங்கள் எல்லாம் ஏமாளிகள் என்று நம்பித்தானே செய்கிறார்கள்.100 ரூபாய் குறைத்ததை நான் வரவேற்கிறேன். ஆனால், நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், 100 ரூபாய் கூட்டமாட்டேன் என்று சொல்லவேண்டும் அல்லவா!

**பெட்ரோல்– டீசல் விலை!**

நாங்கள் ஆட்சியில் இருக்கும்பொழுது ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 146 டாலர். சவுதி அரேபியாவின் தலைநகரில் உலகம் தழுவிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில், எப்படி கச்சா விலையைக் கட்டுப்படுத்துவது? எப்படி பெட்ரோல் விலையைக் கட்டுப்படுத்துவது? டீசல் விலையை எப்படிக் கட்டுப்படுத்துவது? என்பதற்காகவே ஒரு மாநாடு நடைபெற்றது.

எல்லா நாட்டு நிதியமைச்சர்களும், பெட்ரோலியத் துறை அமைச்சர்களும் வந்திருந்தார்கள். நானும், நட்வர்சிங் அவர்களும் இந்தியாவின் சார்பில் அந்த மாநாட்டிற்குச் சென்றிருந்தோம்.

எங்களுடைய கோரிக்கை, இதற்குமேல் விலையை அதிகரிக்கக் கூடாது. எண்ணெய் வளம் உள்ள நாடுகள், இந்த அளவிற்குமேல் விலையைக் குறைக்கக் கூடாது.

கீழேயும் ஒரு கோட்டை வரைந்து, மேலேயும் ஒரு கோட்டை வரைந்து அந்தக் கோட்டிற்குள் தான் கச்சா எண்ணெய் விலை இருக்கவேண்டும் என்று நிர்ணயம் செய்யுங்கள் என்று சொன்னோம்.

பல பேர் அதனை ஆதரித்தார்கள். எண்ணெய் தயாரிக்கும் நாடுகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. பல நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த மாநாடு தோல்வியில் முடிந்தது.

அன்றைக்குக் கச்சா விலை ஒரு பீப்பாவிற்கு 146 டாலராக இருந்தது.

அந்த நேரத்தில்கூட, இந்திய அரசு பெட்ரோல் விலையை 70 ரூபாய்க்குமேல் உயர்த்தவில்லை. டீசல் விலை 60 ரூபாய்க்குமேல் இல்லை. நரேந்திர மோடி பிரதமராக வந்தபொழுது, கச்சா எண்ணெய்யின் விலை மளமளவென்று சரிந்தது. 40 டாலராக இருந்தது. இன்றைக்கு 80 டாலர். ஆனால், அவர் ஆட்சிக்கு வந்தபொழுது 40 டாலர். அப்பொழுதுகூட பெட்ரோல், டீசல் விலையை அவர் குறைக்கவில்லை.

ஆண்டொன்றிற்கு இரண்டரை லட்சம் கோடி ரூபாய் அவர்களுக்கு ஆதாயமாகக் கிடைத்தது விலையைக் குறைக்காததினால். 40 டாலராக குறைந்தபொழுதும், அப்பொழுதுகூட விலையை அவர்கள் குறைக்கவில்லை. இன்றைக்கும் 80 டாலராகத்தான் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை இருக்கிறது. ஆனால், ஒரு லிட்டர் பெட்ரோல் 101 ரூபாயாக இருக்கிறது.

இந்த அளவிற்கு விற்கவேண்டிய தேவையே இல்லை. இந்த விலை என்பது நம்மீது வைத்திருக்கக் கூடிய சுமை. சமையல் எரிவாயு சிலிண்டர் 1100 ரூபாய் என்பது, நம்மை ஒட்டகமாக வைத்து, பொதியை சுமக்க வைக்கிறார்கள். பிறகு 100 ரூபாய் குறைப்பதுபோன்று, ஒட்டகத்தின்முன் போடுவதுபோன்று, நம்மை ஏமாளிகள் என்று நினைக்கிறார்கள்.

**உரத்த குரலில் சொல்ல வேண்டும்!**

நாம் ஏமாளிகள் அல்ல என்பதை உரத்தக் குரலில் சொல்வதற்கு ஒரு வழி இருக்கிறது. இன்றைக்குச் சொல்லவேண்டாம்; மனதில் வைத்துக் கொள்ளுங்கள்! சொல்லவேண்டிய நாள் சொல்ல வேண்டிய முறை உங்களுக்கெல்லாம் தெரியும்.

நாங்கள் ஏமாளிகள் அல்ல நீங்கள் எங்களை ஏமாற்றுகிறீர்கள்; ஆனால், நாங்கள் ஏமாளிகள் அல்ல என்று சொல்லவேண்டிய நாள் வரும்பொழுது, உரத்த குரலில் சொல்லவேண்டும் என்று உங்களையெல்லாம் நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது தேர்தல் வரப் போகிறது; தேர்தல் வருவதற்கான அறிகுறிகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. தேர்தல் வரும்பொழுதுதான், திடீர் திடீரென்று அறிவிப்புகள் எல்லாம் வரும்.

பிப்ரவரி 24 ஆம் தேதியிலிருந்து மார்ச் 7 ஆம் தேதிவரை கணக்கெடுத்தேன். இந்த 14 நாள்களில், பிரதமர் போகாத மாநிலமே கிடையாது; புதிய திட்டங்களை அறிவிக்காத நாளே கிடையாது.

அறிவித்த கூட்டுத்தொகை 5 லட்சத்து 90 ஆயிரத்து 661 கோடி ரூபாய். தமிழ்நாட்டிற்கு வந்த ஒரு நாள் 17 ஆயிரத்து 300 கோடி ரூபாயை அறிவித்திருக்கிறார். அப்படி அவர் அறிவித்தவுடன், எல்லோரும் வாயைத் திறந்து வியந்து பார்க்கிறார்கள்.

**அறிவிப்பு மட்டும் தான்: திட்டங்கள் இருக்காது!**

இதில் கசப்பான உண்மை என்னவென்றால், 5 லட்சத்து 90 ஆயிரத்து 661 கோடி ரூபாய்க்கு தமிழ்நாடு உள்பட 17 ஆயிரத்து 300 கோடி ரூபாய்க்கு 31 மார்ச் மாதம் முடிகின்ற பட்ஜெட்டிலும், 1.4.2024 இல் தொடங்குகின்ற பட்ஜெட்டிலும் ஒரு ரூபாய்கூட ஒதுக்கவில்லை.

முடிந்த ஆண்டில் ஒதுக்கியிருக்கிறார்களா, என்றால் இல்லை! அல்லது தொடங்குகின்ற ஆண்டிலாவது ஒதுக்கியிருக்கிறார்களா, என்றால் கிடையாது!

இவையெல்லாம் அறிவிப்புகள்தான். திட்டமே இருக்காது! டி.பி.ஆர். என்று சொல்வார்கள்; டீடெய்ல் புராஜெக்ட் ரிப்போர்ட்டே இருக்காது.

தோன்றியதையெல்லாம் அறிவிப்பார்கள்; இன்னும் அறிவிப்பார்கள். அவர்கள் அறிவிக்கின்றவரையில் தேர்தல் தேதி வராது; அறிவிப்புகள் எல்லாம் முடிந்துவிட்டால்தான், தேர்தல் தேதி அறிவிப்பு வரும். 11 ஆம் தேதி தேர்தல் என்றைக்கு என்கிற அறிவிப்பு வரும் என்று முதலில் சொன்னார்கள். 13 ஆம் தேதி மோடி குஜராத்திற்குப் போகிறார். அதற்குப் பிறகுதான் தேர்தல் தேதி அறிவிப்பு வரும். இன்னும் தொடர்ந்து அறிவிப்புகள் வரும். கூட்டுத் தொகை 10 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டினாலும் தாண்டும்.

எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், மக்களை ஏமாளிகளாக நினைத்து இவற்றையெல்லாம் அறிவிக்கிறார்கள். மக்கள் அவ்வளவு ஏமாளிகள் அல்ல என்று நான் நினைக்கிறேன். சில நேரங்களில் மக்கள் ஏமாறுகிறார்கள்.

2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும், 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும் இந்தியாவில் உள்ள ஒரு பகுதி மக்கள் ஏமாந்து வாக்களித்தார்கள்; நான் இல்லை என்று சொல்லவில்லை.

**தொடர்ந்து ஏமாற மாட்டார்கள்!**

ஆனால் தொடர்ந்து ஏமாளிகளாக மக்கள் இருப்பார்கள்; தொடர்ந்து எல்லா இந்தியர்களும் ஏமாறுவார்கள் என்று நினைப்பது தவறு.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள் . எல்லோரையும் எல்லா நேரத்திலும் ஏமாளிகளாக நினைத்து ஓர் அரசு நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு எப்படி விழிப்படைந்த தமிழ்நாடு, குறிப்பாக விழிப்படைந்த தமிழ்நாட்டுப் பெண்கள் எப்படி பதில் சொல்கிறார்கள் என்பதை நான் எதிர்பார்த்து நிற்கிறேன்.

உரத்த குரலில், துணிவோடு துணிவே துணை! துணிவே துணை!

அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பதில்லையே.

உச்சிமீது வானிடிந்து விழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பதில்லையே! என்று உரத்த குரலில் நீங்கள் சொல்லி, வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு மேனாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் 500 தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக 5 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத், , சென்னை செயல் இயக்குநர் (மார்க்கெட்டிங் பிரிவு), அண்ணாதுரை, முதன்மை பொது மேலாளர் என். மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பிறந்த நாள்! ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி

# 112 (அ) வட்டத்தில் 500 பேர்களுக்கு அறுசுவை உணவு!

### மு.க.தமிழரசு - நே.சிற்றரசு - நா.எழிலன் - வினோத் வேலாயுதம் பங்கேற்பு! வட்ட செயலாளர் மு.மோகன் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 11–

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112 (அ) வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சரும் கழகத் தலைவருமான முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று (11.3.2024 - திங்கட்கிழமை) மதியம் 12:30 மணியளவில் சென்னை-24, கோடம்பாக்கம், சிவன் கோவில் தெருவில் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் தலைமையில் நடைபெறுகிறது.

வட்ட செயலாளர்கள் மு. மோகன், வரதை த.பரி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதி கழக அவைத்தலைவர் புவி பாலாஜி, துணை செயலாளர்கள் என்.பி. இதயாத்பாஷா, ஸ்டெர்லிங் மோகன், ரா.பொன்னம்மாள், பா. கமலக்கண்ணன் வரவேற்கின்றனர்.

இதில் மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., மருத்துவர் அணி செயலாளர் நா. எழிலன் எம்.எல்.ஏ., கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் அணி துணை செயலாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் கழக கொடி ஏற்றி உணவு வழங்குகிறார்கள். மேலும் பாகப் பொறுப்பாளர்கள் ஜி.வி.சரவணன், மோகன் பாண்டியன், வட்டக் கிளை நிர்வாகிகள் பாண்டியன், ச.யுவராஜ், எஸ்.மோகன், இ.வசந்தா, இ.கந்தசாமி, தா.பூபாலன், சு.நரேந்திரன், இரா.தனசேகர், மா. என்ட்ரி சாமுவேல், பா.ஜெயக்குமார், ப.கோபாலகிருஷ்ணன், கா.அப்துல் கபீர், ஆர். ராஜசேகர் வட்ட இளைஞர் அணி தனுஷ்கோடி, ஆதித்யன், டீ.எழிலரசன், ஆர். ராஜேஷ்குமார் (எ) காந்தி,

மகளிர் அணி விக்டோரியா வள்ளியம்மாள், யாமினி, கலா, பால்மொழி, கோமளா, ரேவதி, சத்தியவாணி, சத்தியபாமா, தங்கச்சி அம்மாள், ராதாபாய், கலைமணி, வன சுந்தரி, பிரேமா, ஜெயா, சாந்தி, செல்வி, கோமதி, கௌரி, வாணி,

கழக முன்னோடிகள் எம்.சாந்தகுமார், க.ராஜேஷ் கண்ணா, ஏ.முருகன், இ. ரவி, மன்னார்சாமி, மதனா மதன், எச்.ஹரிகிருஷ்ணன், பிரபு, தணிகாசலம், கணேசன், நந்தகுமார், டிஸ்கோ ராஜேந்திரன், கார்த்திக், எஸ்.தினகரன், ஸ்டாலின், லிம்போ ஹரி, பா.குணாநிதி, மணி, வருண், ராஜேஷ், தஞ்சை சிவக்குமார், ஐயப்பன், கேதார் பாலாஜி, ஏழுமலை,

நிகழ்ச்சி ஏற்பாடு ஜி.சத்தியா, இரா.ராஜா, கே.அருண், சி.ரஞ்சித், கே. ஏழுமலை, ஆர்.சரவணன், இரா.மணிகண்டன், கே.ஹரி, ஏ.சுகுணேசன், கே. தணிகைவேல் மற்றும் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழக, நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

இவ்வாறு வட்டக் கழக செயலாளர் மு.மோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஆ.நா.பார்த்திபன் தலைமை! அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

# துறைமுகம் கிழக்குப் பகுதி - மண்ணடியில் பொதுக்கூட்டம்!

### திண்டுக்கல் ஐ.லியோனி - புலவர் இரெ.சண்முக வடிவேல் - புலவர் இராமலிங்கம் - அறந்தாங்கி நிஷா சிறப்புரை!

சென்னை, மார்ச் 11–

சென்னை கிழக்கு மாவட்டம் - துறைமுகம் கிழக்குப் பகுதியில் - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

நாளை (12.3.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணியளவில் தம்புச் செட்டித் தெருவில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்திற்கு 60 (அ) வட்டச் செயலாளர் ஆ.நா.பார்த்திபன் தலைமை வகிக்கிறார்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, எம்.விஜயகுமார், ஜி.எம்.தேன், ப.ஸ்ரீராமுலு, இசட். ஆசாத், என்.பி.எம்.சேக்அப்துல்லா, எம்.இப்ராஹிம் கனி, இரா.கலைச் செல்வி, பி.விஜயகுமார், எம்.வினாயகம், பா.ஜெகதீஷ், பா. பிரதீப்குமார், எல்.சம்பத்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக்குமார், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், த.கதிரவன், எம். பரத்குமார், மா. ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, சேப்பாக்கம், வே.பா.பிரபாகரன், டி. சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் - தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, புலவர் இரெ.சண்முகவடிவேல், புலவர் இராமலிங்கம், அறந்தாங்கி நிஷா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேயர் பரியாராஜன், துறைமுகம் தொகுதி தலைமையிடப் பார்வையாளர் க.பிரபு, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், துறைமுகம் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் வெ.பரிமளம், எல்.நவீன், ரஜேஷ் ஜெயின், அ.மகேந்திரன், எஸ்.எஸ். எஸ்.முஹம்மது ரபி, எம்.பி ஏழுமலை, இ.இராஜேஸ்வரி, ஜி.எம். டி.மணிகண்டன், கே.அண்ணாதுரை, எஸ்.குணசேகரன், டி.டில்லிகுமார், கே.எட்வர்ட் கென்னடி, ஹாஜா ஜலாலுத்தீன், த. பன்னீர்செல்வம், மு.ஜெயவேல், ச.முருகம்மாள், யூ.நாசர், க.கதிரவன், முகமது முக்தார், ஆர்.அன்பு சி.ஆர். பிரபு, ஆர்.ரவி உள்பட பலரும் இதில் கலந்துகொள்கின்றனர்.

வட்டச் செயலாளர் க.கவியரசு நன்றி கூறுகிறார்.



திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விம்கோ நகர் ரயில்வே சுரங்கப் பாதை அமைக்கும் பணியை மாநில மீனவர் அணி துணைத்தலைவர், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். 5வது வட்ட மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம், 4வது வட்ட மாமன்ற உறுப்பினர் ஆர்.ஜெயராமன், கழக மாவட்ட அயலக அணி தலைவர் எஸ்.டி. சங்கர், 5 வது வட்ட நிர்வாகிகள் ரமேஷ், வே.கோபால், சின்ன எர்ணாவூர் கிராமத் தலைவர் கோவிந்தராஜ், காந்திநகர் கிராமத் தலைவர் செல்வம், அம்பேத்கர் நகர் தலைவர் புண்ணியகோடி தாஸ், ஸ்ரீரங்கம் நியூட்டன் தலைவர் அலெக்ஸ், ராமநாதபுரம் ரவி மற்றும் கழக தோழர்கள், கம்யூனிஸ்ட் தோழர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### நாகவள்ளி பிரபாகரன் தலைமை! சென்னை கிழக்கு மாவட்ட

# சுற்றுச்சூழல் அணி சார்பில் 271 மரக்கன்றுகள் நடும் துவக்க விழா!

### அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - மதிவேந்தன் துவக்கி வைத்தனர்!

*சென்னை மார்ச் 11*

*சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் வார்டு 88 ல் 8.03.2024 அன்று மார்ச் 1 மக்கள் முதல்வரின் மனித நேயத் திருவிழா சூரிய சுடர் 54 வது நிகழ்ச்சியாக மனதிற்குள் அன்பை நடுபவர்! மாநிலத்தின் நிழலாய் விரிபவர்!!*

*271 மரக்கன்றுகள் நடும் துவக்க விழா அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம் பார்க் ரோட்டில் நடைபெற்றது .*

*நிகழ்ச்சிக்கு சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் தலைமை வகித்தார்.*

*இந்துசமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான பி.கே. சேகர்பாபு, வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் 271 மரக்கன்றுகள் நடும் விழாவை துவக்கி வைத்தனர். அதனை தொடர்ந்து மார்ச் 8 நேற்று சர்வதேச மகளிர் தினத் தினை முன்னிட்டு வார்டு 88வுள்ள மகளிர் சுயஉதவி குழுவை சேர்ந்த 500 மகளிருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.*

*மேலும் கடந்த பிப்ரவரி 12,13, மற்றும் 14 ஆகிய மூன்று தினங்கள் தொடர்ந்து,*

*88வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்டத்தில் கலந்து கொண்டு அதன் மூலம் புதிதாக காப்பீடு பெற்ற 357 பயனாளிகளுக்கான காப்பீடு அட்டைகள் வழங்கியும் சிறப்பித்தனர்.*

*இதில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அம்பத்தூர் மண்டலக்குழு தலைவர் பி.கே மூர்த்தி, பகுதி செயலாளர்கள் டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*மேற்படி நிகழ்வில் மாமன்ற உறுப்பினர்கள் டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, டாக்டர் ஜி.சாந்தகுமாரி, வி.ரமேஷ் (எ)நீலகண்டன், திருமதி உமா சந்தானம், எம்.இ. சேகர் எம்.சி, கமல் எம்.சி, பொற்கொடி, திருமதி அமுதா பொன்னிவளவன், வட்ட செயலாளர்கள் பிரகாஷ் குமார், நா.நெப்போலியன், இரா.டீக்கா, லால், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்கள் விஜய், ராதாகிருஷ்ணன், ஜே. ஜாவித்கான், உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி, வட்ட நிர்வாகிகள்,பி.எல்.ஏ 2, பி.எல்.சி க்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகளும், கழக தோழர்களும், முன்னணியினரும் கலந்து கொண்டனர். வட்ட செயலாளர் சி. சீனிவாசன் நன்றி கூறினார்.*






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில், பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் மற்றும் விதைக்கூடு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகள், சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள், சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்கள் மற்றும் முதல் முறையாக சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்கள் என மொத்தம் 12 விருதாளர்களுக்கு 9 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலைகளை வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் சந்திர சேகர் சாகமுரி ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர்களுக்கு வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்ட கடனிற்காக அரசிடம் ஒப்புவிக்கப்பட்ட நிலப்பத்திர ஆவணங்களை 9,742 தாயகம் திரும்பியோர்க்கு திரும்ப வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்து, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 3 நபர்களுக்கு அவர்களின் அடமான ஆவணங்களை மீள வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பட்டு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில்-12 விருதாளர்களுக்கு ரூ. 9லட்சம் பரிசுத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 11-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில், பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் மற்றும் விதைக்கூடு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகள், சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள், சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்கள் மற்றும் முதல் முறையாக சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுத்தொகைக்கான காசோலைகளை வழங்கி சிறப்பித்தார்.**

2023-24ஆம் ஆண்டிற்கான பட்டுவளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், நமது மாநிலத்தில் வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/- ரூபாய், 75,000/- ரூபாய் மற்றும் 50,000/- ரூபாய் ரொக்கப்பரிசுகள் வழங்கப்படும் எனவும், தரமான பட்டு நூல் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/- ரூபாய், 75,000/- ரூபாய் மற்றும் 50,000/- ரூபாய் ரொக்கப்பரிசுகள் வழங்கப்படும் எனவும், தரமான விதைப் பட்டுக்கூடு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் முதல் முறையாக மாநில அளவில் சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/- ரூபாய், 75,000/- ரூபாய் மற்றும் 50,000/- ரூபாய் ரொக்கப்பரிசுகள் வழங்கப்படும் என்றும், இதற்கென 9 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, **மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த பட்டு விவசாயிக்கான** முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. க. ஜெயந்தி அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மு. பூபதி அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த வை. அருள்குமரன் அவர்களுக்கும்;

**மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த தானியங்கி பட்டு நூற்பாளருக்கான** முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த மு.முகமது மதீனுல்லா அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த இரா. பெருமாள் அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜெ. ராம்சங்கர் அவர்களுக்கும்;

**மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த பலமுனை பட்டு நூற்பாளருக்கான** முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மு. சாந்தமூர்த்தி அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நா. நாகராஜன் அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. ஜெ. வேதவள்ளி அவர்களுக்கும்;

**முதல் முறையாக மாநில அளவில் சிறந்த விதைக்கூடு உற்பத்தியாளருக்கு பரிசுகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட** கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சி. திலீப் குமார் அவர்களுக்கு முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், சி. கிருஷ்ணப்பா அவர்களுக்கு இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையும், நா. மஞ்சுநாதா அவர்களுக்கு மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையும்; என மொத்தம் 12 விருதாளர்களுக்கு 9 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் சந்திர சேகர் சாகமுரி, ஆகியோர் கலந்து கொண்டனர்.



மொழி பெயர்க்கப்பட்ட பாடநூல்கள் வெளியிட்டபோது...





# அழகுத் தமிழில் உயர் கல்வி... உலக அறிவு!

## திராவிட மாடல் அரசு

59

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

‘குழந்தைகள் தங்கள் தொடக்கக் கல்வியைத் தங்களது தாய்மொழியில் படிக்க வேண்டும். அப்படிப் படித்தால்தான் வலுவான அடித்தளம் கிடைக்கும்’ என்பது உலகம் முழுவதிலும் உள்ள கல்வியாளர்களின் கருத்து. இது அறிவியல்பூர்வமாகவும் நிரூபிக்கப்பட்ட ஒன்று.

அடிப்படைக் கல்வியை மட்டுமல்ல, உயர் கல்வியைக் கூட தங்களது தாய்மொழியில் படிக்க வேண்டும் என்று சொல்லி, பல நாடுகள் தங்களது தாய்மொழியிலேயே மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்படிப்புகள் உள்ளிட்ட பல படிப்புகளை வழங்கி வருகின்றன.

இந்தியாவைப் பொறுத்த அளவில், ‘தாய்மொழியில் உயர் கல்வி’ என்ற கருத்தை முதன்முதலில் சிந்தித்த மாநிலம் தமிழ்நாடு. பிறகு அது ‘தமிழில் கல்லூரிக் கல்வி’ என்ற பொருளில் கலைத்துறைப் படிப்புகள் மட்டும் தமிழில் வழங்கப்பட்டு வந்தன. 1967-இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், கலைத்துறைப் படிப்புகள் மட்டுமல்லாது, அறிவியல் படிப்புகளும் தமிழில் வழங்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதெல்லாம், உயர் கல்வியில் தமிழுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்தார். அவரது ஆட்சிக் காலத்தில்தான் பொறியியல் கல்வி தமிழில் வழங்கப்பட்டது. அதன் நீட்சியாகவே தற்போது மருத்துவப் படிப்புக்கான நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. மருத்துவம், பொறியியல் மட்டுமல்லாது, இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், வரலாறு போன்ற துறை சார்ந்த படிப்புகளுக்கான பாடநூல்களை, தமிழில் வழங்க, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ விதைத்திருக்கும் வித்தே **‘முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்’.**

### பாடநூல் கழகமும் மொழிபெயர்ப்பும்

1970களில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் ‘தமிழ்நாடு பாடநூல் கழகம்’ தொடங்கப்பட்டது. அந்தக் காலத்தில் எல்லாம் பள்ளிப் புத்தகங்களை தனியார் பள்ளிகள்தான் வெளியிட்டு வந்தன. அவை சாமானிய மக்களால் வாங்க முடியாமல் போனது. அவ்வாறு பள்ளிப் புத்தகங்களைக் காசு கொடுத்து வாங்க இயலாத காரணத்தால், பள்ளியில் இருந்து இடை நின்றவர்கள் ஏராளம். பள்ளிக் கல்வியைத் தொடர்வதற்கு, பாடப் புத்தகங்களின் விலை ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று எண்ணித்தான் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பாடநூல் கழகம், பள்ளிப் புத்தகங்களை அச்சடித்து குறைந்த விலையில் மாணவர்களுக்கு வழங்கி, மாணவர்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றியது.

பிறகு, கல்லூரிப் படிப்புகளை தமிழில் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அவற்றிற்கான பாடநூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டன. 1967 -ஆம் ஆண்டு முதல் 1976 -ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மட்டும் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகள் சார்ந்து, 875 நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. அந்த நுல்களில் பல கடந்த சில ஆண்டுகளாக ஆவணபதிப்புகளாக வெளியிடப்பட்டு வருகின்றன.

> **மூலப் பொருள், பயிற்சிப் பொருள்!**
>
> தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் பியர்சன் கூட்டு வெளியீடாக 11 மற்றும் 12- ஆம் வகுப்பு மாணவர்களுக்காக மொழி பெயர்க்கப்பட்டுள்ள பாடநூல்கள் ‘நீட்’, ‘எய்ம்ஸ்’, ‘ஜிப்மர்’ உள்ளிட்ட உயர்கல்வி மருத்துவ நுழைவுத் தேர்வுக்கான பயிற்சிப் பொருளாகவும் விளங்குகின்றன. இந்நூல்களில் அடங்கியுள்ள பாடங்கள், மிகவும் கவனமாக, தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு நுழைவுத் தேர்வுகளை மாணவர்கள் சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன. மேலும், இந்நூல்களை ‘என்.சி.இ.ஆர்.டி’ (NCERT) அடிப்படையில் அமைந்துள்ள 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளுக்கும் மூலப்பொருளாகப் பயன்படுத்தலாம்.

அதன் பிறகு, சுமார் 40 ஆண்டுகள் கவனம் பெறாமல் இருந்த இந்த மொழிபெயர்ப்பு முயற்சிக்கு, 2021-இல் ‘திராவிட மாடல் அரசு’ அமைந்த பிறகு ‘முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்’ மூலம்தான் மீண்டும் உயிர் கிடைத்தது.

### முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

நமது ‘திராவிட மாடல் அரசு’ அமைந்த பிறகு, தமிழ்நாடு பாடநூல் கழகம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட தலைவர்களின் சிந்தனைகளை, தமிழ்நாட்டின் சமகால இலக்கியப் படைப்புகளை ஆங்கிலம் உள்ளிட்ட 22 உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் எடுத்துச் செல்ல ‘திசை தோறும் திராவிடம்’ எனும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அந்தப் புத்தகங்கள் எல்லாம் பொது வாசகர்களுக்கு உரியவை.

அவை இல்லாமல், உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்காகவே துறைசார் பாடநூல்களை தமிழில் கொண்டு வரும் முயற்சிதான், ‘முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்’. இந்தத் திட்டத்தின் கீழ், மருத்துவம், வேளாண்மை, வானியல், தொழில்நுட்பம், சட்டம், பொருளாதாரம், கணிதம், கால்நடை மருத்துவம், புவியியல், புள்ளியியல் ஆகிய துறைகளுக்கான பாடநூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தில் இதுவரை, சுமார் 90 க்கும் மேற்பட்ட புத்தகங்கள் கடந்த இரண்டரை ஆண்டுகளில் வெளியாகி உள்ளன.

இந்தத் திட்டத்தில் உள்ள சிறப்பு என்னவென்றால், ஒவ்வொரு துறையின் பாடநூல் மொழிபெயர்ப்புகளுக்கு துறைசார் அறிஞர்களைக் கொண்ட தனித்தனிக் குழுக்கள் உள்ளன. அதில் அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள், அரசுப் பள்ளி ஆசிரியர்களும் இடம்பெற்றுள்ளனர். எனவே, மொழிபெயர்ப்பு முதல் பிழைதிருத்துதல் வரையிலான எல்லா பணிகளிலும் அவர்களின் பங்களிப்பு இருப்பதால் கருத்துப் பிறழ்வு, பொருள் மயக்கம் போன்ற எந்தத் தவறும் நிகழ்ந்து விடாதபடி, செம்மையான மொழிபெயர்ப்புகள் வருகின்றன.

### வளம் சேர்க்கும் கலைச்சொல்லாக்கம்

உயர் கல்விக்கான பாடநூல்களை தமிழில் வழங்குவதில் உள்ள மிகப்பெரிய சிக்கலே, துறைசார் சொற்களுக்கான பொருளை தமிழில் எளிமையாகவும் புதுமையாகவும் வழங்க வேண்டும் என்பதுதான். ஆங்கிலத்தில் ‘கிளாஸரி’ என்று சொல்லப்படும் அவற்றை தமிழில் ‘கலைச்சொல்லாக்கம்’ என்று வழங்கும் முயற்சிகள் பல காலமாக நடைபெற்று வருகின்றன. எனினும், ‘முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்ட’த்தின் கீழ், இந்த கலைச்சொல்லாக்க முயற்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

துறைசார் பாடநூல்களை மொழிபெயர்க்கும் போது, அவற்றுக்கான கலைச்சொல்லாக்கங்கள் ஒவ்வொரு புத்தகத்திலும் இடம்பெற கவனம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. தவிர, தமிழில் கலைச்சொல்லாக்க வரலாறு குறித்தும் புத்தகங்கள் கொண்டு வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழுக்கு வளம் சேர்க்கும் இன்னொரு முயற்சி இது.

### கூட்டு வெளியீடுகள்

முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ் மொழிபெயர்க்கப்படும் பாடநூல்கள் எல்லாம் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வெளியிடுகிறது. கூடுதலாக, பாடநூல் கழகம், ‘பியர்சன்’ போன்ற இதர பதிப்பகங்களுடன் இணைந்தும் துறைசார் பாடநூல்களைக் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டு வருகிறது.

பியர்சன் என்பது 70 உலக நாடுகளில் பரந்து விரிந்திருக்கும் ஓர் உலகளாவிய கற்றல் நிறுவனமாகும். நுணுக்கப்பார்வையும் உலகத்தரமான நிபுணத்துவமும் நெடிய வரலாறும் கொண்ட இந்தப் பதிப்பகம், அறிவியல் துறை பாடநூல்களை வெளியிடுவதில் சர்வதேச அளவில் புகழ்பெற்றது. அந்தப் பதிப்பகத்துடன் இணைந்து 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடநூல்கள் தமிழில் கொண்டு வரப்பட்டுள்ளன.

‘திராவிட மாடல் அரசு’ மேற்கொள்ளும் இந்த மொழிபெயர்ப்பு முயற்சிகள், உலகை நம் வசமாக்கும் இன்னொரு கிரியா ஊக்கி...!

**...சாதனை தொடரும்**

### வீட்டுக்கு வரும் நூலகம்!



அறிவியக்கத் தளத்தில் தமிழ்நாட்டின் தவிர்க்க முடியாத மையமாக உயர்ந்து நிற்கிறது, அண்ணா நூற்றாண்டு நூலகம். எட்டு தளங்கள் கொண்ட இந்த பிரமாண்ட நூலகத்தில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் வாசகர்களின் அறிவுத் தேடலை நிறைவு செய்கின்றன. போட்டித் தேர்வு மாணவர்கள், ஆய்வாளர்கள் அங்கேயே படித்து, குறிப்புகள் எடுக்கும் வசதிகளுடன் தற்போது, நூல்களை வாசகர்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் வசதிகளை அளிக்க உள்ளது, அண்ணா நூற்றாண்டு நூலகம்.

வாசகர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, இந்த வசதியை அளிக்க உள்ளது. முதற்கட்டமாக சிறார் பிரிவு மற்றும் தமிழ்ப் பிரிவு நூல்களை, வாசகர்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்று வாசிக்கலாம். 30 நாட்களில் திருப்பி அளிக்க வேண்டும் என்கிற வழிகாட்டுதல்படி, வாசகர்கள் நூல்களை வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம். இரண்டு முறை புதுப்பித்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படும். ‘புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகையே புத்தகமாகப் படிப்போம்’ என்ற முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய நூலகம், வீட்டுக்கே உலகைக் கொண்டு வருகிறது.

### ஃப்ளாஷ்பேக்



வெங்கடராமன்



**பிறந்த நாள் சந்திப்பு!**

என் தந்தை நெல்லிக்குப்பம் வி.கிருஷ்ணமூர்த்தி, 1980-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வென்று மூன்றாவது முறையாக, சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது பிறந்த நாளை முன்னிட்டு, என்னுடைய தந்தையுடன் கலைஞர் அவர்களைச் சந்தித்தேன். இளம் வயதில் அவரை சந்தித்தது, இன்றைக்கும் மனதை விட்டு அகலாமல் அப்படியே இருக்கிறது.

**–வி.கி.வெங்கடராமன்,**
**அண்ணா கிராமம் ஒன்றியக் கழகச் செயலாளர்,**
**கடலூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**டெல்லியில் ஒலித்த கலைஞரின் குரல்!**

1969-இல் முதலமைச்சர்கள் கலந்துகொள்ளும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டின் முதல்வராகக் கலந்துகொண்ட கலைஞர், “மத்திய- மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராய வேண்டிய காலம் வந்துவிட்டது. முதற்கட்டமாக இங்கு அது குறித்து ஆராய வேண்டும்” என்றார். அந்தக் கூட்டத்தில் மத்திய - மாநில உறவுகள் குறித்து, ஆராய வேண்டுமென யோசனை சொன்ன ஒரே முதல்வர் கலைஞர்தான் என, யு.என்.ஐ. ஊடகம் செய்தி வெளியிட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

414

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131


நாள்: 11.03.2024 இடம்: தருமபுரி
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வருகை தரும்...
திராவிட மாடல் நாயகரே!
கழகத்தலைவரே!!
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே!
வருக! வருக!!
உங்கள் மொழி எங்கள் வழி!
மகிழ்ச்சியுடன் வரவேற்கும்.....
மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் B.Sc.,BL.,
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
முனைவர். பி.பழனியப்பன் M.Sc.,Ph.D.,
மாவட்ட கழக செயலாளர், மேனாள் உயர்கல்வித்துறை அமைச்சர்
தருமபுரி மேற்கு மாவட்ட திமுக.


கலைஞர் 100
1924 - 2023
நாள் : 11.03.2024, திங்கள்
இடம் : அரசு கலைக்கல்லூரி, தருமபுரி
பல்வேறு நலத்திட்டங்களை துவக்கி வைக்க தருமபுரிக்கு வருகை தரும்.
மாண்புமிகு கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர்
நலத்திட்ட நாயகரே!
வருக! வருக!!
என வரவேற்று மகிழும்
எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், B.S.c., B.L.,
வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்
முனைவர். பி.பழனியப்பன், M.Sc., Ph.D.,
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
தடங்கம். பெ.சுப்ரமணி, Ex.M.L.A.,
தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
வழக்கறிஞர். ஆ.மணி, B.Com.,B.L.,
தருமபுரி மேற்கு மாவட்ட துணை செயலாளர்
தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.


மார்ச் 11
தருமபுரி மாவட்டத்திற்கு
அரசு நலதிட்டங்களை வழங்கும்
விழாவிற்கு வருகை தரும்
கழகத் தலைவர்
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களை
வருக! வருக!! என அன்புடன் வரவேற்று மகிழும்....
மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், B.Sc., BL.,
தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
தடங்கம்.பெ.சுப்ரமணி, Ex.MLA.,
தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர்
என்றென்றும் தங்கள் வழியில் கழக பணியில்
பி.தர்மசெல்வன்
மாநில துணைச் செயலாளர், கழக வர்த்தகர் அணி,
தலைமை செயற்குழு உறுப்பினர்–பென்னாகரம், தருமபுரி



நாள் : 11.03.2024 திங்கள்
இடம் : அரசு கலைக்கல்லூரி, தருமபுரி
கலைஞர் 100 1924 - 2023
பல்வேறு நலதிட்ட உதவிகளை வழங்க வருகை தரும்
விவசாயிகளுக்கு புதிய 1,65,000 "இலவச மின் இணைப்பு திட்டம்" தந்து வாழ்வளித்த
தருமபுரி மக்களுக்கு ஒகேனக்கல் கூட்டுகுடிநீர் "திட்டம் I & திட்டம் II," தந்து மக்களின் தாகம் தீர்த்த
ஏழை மக்களுக்கு "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்தின் மூலம் இருப்பிடம் தந்த
"இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல்" ஒலிக்கட்டும்
மாண்புமிகு கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர்
திராவிட நாயகர்
அவர்களை வருக! வருக!! என வரவேற்கிறோம்...
மாண்புமிகு.
M.R.K.பன்னீர்செல்வம் B.Sc., B.L.,
வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், தருமபுரி மாவட்ட பொறுப்பு அமைச்சர்
தடங்கம் பெ.சுப்ரமணி Ex.M.L.A.,
மாவட்ட கழக செயலாளர், தருமபுரி கிழக்கு மாவட்டம்
P.N.P.இன்பசேகரன் B.E., M.B.A., Ex.M.L.A.,
மாநில விவசாய அணி துணை தலைவர், மு.மாவட்ட கழக செயலாளர்
Dr.DNV.S.செந்தில்குமார் M.D.R.D., M.P.,
வெளிநாடு வாழ் இந்தியர் நல அணி மாநில இணை செயலாளர்
N.செல்வராஜ் B.A.,
ஏரியூர் ஒன்றிய செயலாளர்
மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்
மடம்.K.முருகேசன் B.A.,
பென்னாகரம் தெற்கு
ஒன்றிய செயலாளர்
G.சபரிநாதன் B.Sc.,B.Ed.,
பென்னாகரம் (வ) ஒன்றிய செயலாளர்
ஊ. ம. தலைவர், தித்தியோப்பனஅள்ளி
A.கருணாநிதி
பாலக்கோடு கிழக்கு
ஒன்றிய செயலாளர்
M.வீரமணி
பென்னாகரம் பேரூர் செயலாளர்
பேரூராட்சி மன்ற தலைவர்
V.சண்முகம்
பேரூர் செயலாளர்
பாப்பாரப்பட்டி
பென்னாகரம் சட்டமன்ற தொகுதி தி.மு.க, தருமபுரி கிழக்கு மாவட்டம்.




கலைஞர் 100 1924 - 2023
நாள் : 11.03.2024
இடம் : அரசு கலைக்கல்லூரி
தருமபுரி.
பல்வேறு நலத்திட்டங்களை
துவக்கி வைக்க தருமபுரிக்கு
வருகை தரும்..
சமூகநீதியின் பாதுகாவலர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக. வருக..
வரவேற்று மகிழும்....
எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் B.Sc., B.L.,
வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் / மாவட்ட பொறுப்பு அமைச்சர்
பி.என்.பி.இன்பசேகரன் B.E., M.B.A., Ex.M.L.A.,
மு.மாவட்ட கழக பொறுப்பாளர்
தருமபுரி மாவட்ட தி.மு.க




மார்ச் 11 2024 தருமபுரி மாவட்டத்திற்கு
நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும்
இந்திய திருநாட்டை
வழிநடத்தபோகும்
திராவிட
சுடரே!
வருக!
வருக!!
மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், B.Sc.,B.L.,
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
முனைவர். பி.பழனியப்பன், M.Sc.,Ph.D.,
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. தடங்கம் பெ.சுப்ரமணி, Ex.MLA.,
தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. Dr.DNV.S.செந்தில்குமார்
தருமபுரி பாராளுமன்ற உறுப்பினர்
உயர்திரு. கவிஞர் காசிமுத்து மாணிக்கம்
மாநில வர்த்தகர் அணி செயலாளர்
மெடிக்கல்.
அ.சத்தியமூர்த்தி
மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர்,
பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.


நாள்: 11.03.2024 இடம்: தருமபுரி
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வருகை தரும்...
திராவிட மாடல் நாயகரே!
கழகத்தலைவரே!!
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே!
வருக! வருக!!
உங்கள் மொழி எங்கள் வழி!
மகிழ்ச்சியுடன் வரவேற்கும்.....
மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் B.Sc.,BL.,
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
முனைவர். பி.பழனியப்பன் M.Sc.,Ph.D.,
மாவட்ட கழக செயலாளர், மேனாள் உயர்கல்வித்துறை அமைச்சர்
தருமபுரி மேற்கு மாவட்ட திமுக.